# ஸபாஷ்! பார்வதி!

எஸ். வி. வி.



அல்லயன்ஸ்

# ஸபாஷ்! பார்வதி!

முதலிய கதைகள்

PRESENTED BY
V. PR. ... M.
KASIVISVANATHAN CHETTIAR
PAGANERI.

எஸ். வி. வி.

PRESENTED BY
V. PR. PL. M KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI

அல்லயன்ஸ் கம்பெனி
மயிலாப்பூர் :: சென்னை - 4

உரிமை பதிவு — 1950 — ரூபாய் ஒன்றரை

## எமது நன்றி

இக்கதைகள் முதலில் **ஆனந்த விகடனில்** வெளி வந்தன. புத்தக ரூபமாக வெளியிட அநுமதி தந்ததற்காக அவர்களுக்கு எங்கள் நன்றி —**பதிப்பாளர்.**

★

பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | ஸபாஷ்! பார்வதி! | 1 |
| 2. | கைமேல் பலன் | 49 |
| 3. | ஸரோஜா | 77 |


★


**அல்லயன்ஸ் பிரஸ்,**

**மயிலாப்பூர் :: சென்னை-4**

# ஸபாஷ்! பார்வதி!

## 1

### வேங்கடசுப்பையர்

பார்வதி என்கிற பெயர் ரொம்பக் கர்நாடகப் பெயராக இல்லையா? அந்தப் பெயரையுடைய பெண்ணும் கொஞ்சம் கர்நாடகந்தான். அவள் தகப்பனார் வேங்கடசுப்பையர் அதற்குமேல் கர்நாடகம். அவர் நூற்றெழுபத்தைந்து ரூபாய் சம்பளத்தில் ஸ்கூல் டிப்டி இன்ஸ்பெக்டர் வேலையில் இருந்து வந்தார். எம். ஏ., பாஸ் செய்தவர். ஆனால் ஸம்ஸ்கிருதத்தில் எம். ஏ. ஸம்ஸ்கிருத எம். ஏக்கு இந்தக் காலத்தில் எங்காவது மதிப்பு ஏற்படுமா? முதலில் எம். ஏ. என்று சொல்லும்போது கேட்பவர்களுக்குக் கொஞ்சம் மதிப்புத் தட்டுகிறது. அடுத்தபடி ஸம்ஸ்கிருத எம். ஏ. என்றால் உடனே முகத்தில் சப்புத் தட்டிவிடுகிறது.

வேங்கடசுப்பையர் ஸம்ஸ்கிருத எம். ஏ. யாய் இருந்தபோதிலும் ஏதோ சிபார்சுகளைப் பிடித்து ஒரு டிப்டி இன்ஸ்பெக்டர் வேலையைச் சம்பாதித்துக் கொண்டு விட்டார். உத்தியோகம் கிடைத்த பிறகாவது கொஞ்சம் மதிப்பு ஏற்படும்படியாக நடந்து

கொள்ளக் கூடாதா? அதிலும் 'சுத்தப் பிச்சு' என்று பெயர் வாங்கினுர். பரீக்ஷைக்காகப் பள்ளிக்கூடங்களுக்குப் போனுல் எந்த எந்தப் பிள்ளை நெற்றிக்கு இட்டுக்கொண்டு வந்திருக்கிறுன், எவன் வெறும் நெற்றியோடு வந்திருக்கிறுன் என்பதை முதலில் முக்கியமாகக் கவனிப்பார். நெற்றியில் குறி இல்லாத பிள்ளைகளைப் பார்த்து, "ஏண்டா நெற்றியில் ஒன்றுமில்லே?" என்று அவனைக் கேட்டுவிட்டு, "இதை முக்கியமாக நீங்கள் கவனிக்கவேண்டும், ஸார்" என்று உபாத்தியாயரிடத்திலும் சொல்லுவார். ஒரு பிராமணப் பிள்ளையைப் பார்த்தால், "உனக்கு உபநயனம் ஆச்சுதாடா?" என்று கேட்பார். ஆகியிருப்பதாக அவன் சொன்னுல், "ஆப: புநந்து சொல்லு பார்க்கலாம்" என்பார். (ஆப: புநந்து என்பது பிராமணர்கள் செய்யும் சந்தியாவந்தனத்தில் ஒரு மந்திரம்.) ஒரு நாள் அம்மாதிரி அவர் ஒரு பிள்ளையைக் கேட்கும் போது, "என்ன ஸார், என்னை என்னவோ சொல்லச் சொல்லுகிறீர்கள்? எங்கப்பாவுக்கே தெரியாதே, ஸார்! நீங்கள் சொல்லுவது என் காதில்கூடக் கேட்ட மாதிரி இல்லேயே, ஸார்?" என்றுன்.

இந்தக் காலத்துப் பள்ளிக்கூடப் பிள்ளைகள் முன் காலத்தவர்களைப் போலவா?

ஒரு நாள் பள்ளிக்கூடத்துப் பிள்ளையை வீட்டுக்குப் போய் நெற்றியில் குறி வைத்துக்கொண்டு வரும்படியாக அனுப்பிவிட்டார். அவன் மறுபடி வெறும் நெற்றியோடேயே வந்து நின்றுன். "ஏண்டா மறுபடி இப்படி வந்து நிற்கிறுய்?" என்று கேட்டார். "எங்கப்பா திட்டுகிறுர், ஸார். 'பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கெல்லாம் சேர்த்து இன்ஸ்பெக்டர்தான்

இட்டுக்கொண்டு வருகிறரே. அது போதும் போடா' என்று என்னைத் திட்டி யனுப்பிவிட்டார், ஸார்'' என்ருன் அந்தப் பிள்ளை. அதோடு இல்லாமல் அவன் தகப்பஞர் டிப்டி இன்ஸ்பெக்டர் பேரில் புகார் செய்து மேலுக்கும் எழுதிவிட்டார். இதைப்பற்றி இவர் பேரில் பெரிய விசாரணை நடந்து, இனி இம் மாதிரி விஷயங்களில் இன்ஸ்பெக்டர் தலை இடக் கூடாது என்று கல்வி இலாகா டைரக்டரிடத்தி லிருந்தே இவருக்குப் 'ப்ரொஸீடிங்க்'ஸும் வந்தது.

''நாம் நல்லதைச் செய்யப்போனல் நமக்கு வரும் 'ஸொட்டை'ப் பார்த்தீர்களா, வேதாந்தராமாநுஜா சாரியாரே? உலகப் போக்கு எப்படிப் போகிறது பாருங்கள்! உலகமே நாஸ்திகமாய்ப் போகட்டுமே. நமக்கென்ன? நல்லதுக்கு இது காலமில்லை, ஐயா!'' என்று அடுத்த வீட்டு வக்கீலிடத்திலும், இன்னும் கண்ணில் படும் எல்லாரிடத்திலும் அதைக் காட்டிக் காட்டி அங்கலாய்ப்புப் பட்டார்.

வேங்கடசுப்பையருக்கு ஐந்தாறு குழந்தைகள். அவர்களில் மூத்தவள் பார்வதி. அவளுக்கு வயது பதினன்காகி நாலாவது பாரத்தில் படித்துக்கொண் டிருந்தாள். ஐந்தாவது பாரத்துக்கு 'ப்ரமோஷன்' ஆயிற்று. ''படித்தது போதும். இனிக் கல்யாணம் செய்வதைத்தான் முக்கியமாகக் கவனிக்க வேண்டும்'' என்று சொல்லி, பார்வதியைப் பள்ளிக்கூடம் போவதி லிருந்து நிறுத்திவிட்டார்.

''குழந்தை இன்னொரு வருஷமுந்தான் படிக் கட்டுமே; கல்யாணம் என்று ஏற்பட்டால் நிறுத்தி விட்டால் போச்சு! இவளோடு கூடப் படித்த பெண்களை யெல்லாம்நிறுத்தியா விட்டார்கள்?''

என்று அவர் சம்சாரம் மங்களம் அவருடன் ரொம்பவும் மன்றாடினாள்.

"உன்னை யோசனை கேட்கவில்லை. நீ வாயை மூடிக்கொண்டு போ. நான் கூடாது என்கிறேன். இன்னொரு வருஷம் அனுப்புகிறதாம்! போ உள்ளே!" என்றார் வேங்கடசுப்பையர். கேட்கிறவர்களிடத்தி லெல்லாம், "அது ஒரு முரட்டுப் பிராமணன். நாம் என்ன செய்கிறது?" என்று மங்களம் சொல்லிக் கொண்டு வந்தாள்.

நாகரிக வழிகளில் பாய வேண்டும், பெண்ணை நாகரிகமாய் வளர்க்க வேண்டும் என்ற ஆசையெல் லாம் மங்களத்துக்கு உண்டு. இந்தப் பிச்சுப் பிராம ணனைக் கட்டிக்கொண்டு என்ன செய்கிறது என்று அவளுடைய மனக் குறை. இருந்தாலும் கூடியவரை யில் தெரிந்தும் தெரியாமலும் அவள் போக்கு நாகரிக முறையிலேயே போய்க்கொண்டிருந்தது.

ஒரு நாள் கொடியில் இரண்டு பாவாடைகள் உலர்த்தியிருந்தன. "யாருடையதடி இந்தப்பாவாடை? நம் அகத்தில் பாவாடை கட்டிக்கொள்ளுகிறவர்கள் யார் இருக்கிறார்கள்?" என்று வேங்கடசுப்பையர் மங்களத்தைக் கேட்டார்.

"யாருடையதானால் உங்களுக்கென்ன? உங்க ளுடைய வேலையைப் பார்த்துக்கொண்டு நீங்கள் போங்கள்" என்று மங்களம் கடிந்தமாதிரி சொன்னாள்.

எம். ஏ. பாஸ் செய்துவிட்டு ஒன்றும் தெரியாத பிச்சு இந்தக் காலத்திலும் இவர் போல உண்டா! ஒரு புடைவை ஒரு ரவிக்கைக்கு மேல் பெண்பிள்ளை களுக்கு என்ன வேண்டியிருக்கிறது என்று இந்த அசடு நாளது வரையில் நினைத்துக்கொண் டிருக்கிறதே!

பார்வதி இயற்கையிலேயே அழகு வாய்ந்தவள்; ரொம்பவும் பயந்த சுபாவமுள்ள பெண். நான்கு புருஷர்கள் இருக்கும் இடத்தில் துணிச்சலாய்ப் போய் நிற்கமாட்டாள். 'தகப்பனர் இருக்கிருரா?' என்று யாராவது வந்து கேட்டால்கூட நேரடியாய்ப் பதில் சொல்லாமல் உள்ளே ஓடிப்போய், "அப்பாவை யாரோ தேடிக்கொண்டு வந்திருக்கிருர்கள், அம்மா!" என்று தாயாரிடத்தில்தான் சொல்லுவாள். "யார் என்று கேட்கிறது தானேடி?" என்ருல், "நீ போய்க் கேள்" என்பாள். அவளாகக் கேட்பதற்கு லஜ்ஜைப் படுவாள். மங்களமும் அவளை அடக்கமான வழிகளி லேயே பழக்கிவந்தாள். 'அங்கு என்னடி போய் நிற்கிருய்?' 'இங்கு என்னடிபோய்நிற்கிருய்?' 'போ உள்ளே' 'வயசு வந்த பெண்ணுக்கு இது தெரிய வேண்டாம்?' 'இளிப்பு என்னடி, இளிப்பு?' என்று இம்மாதிரி சதா அதட்டினபடியே இருப்பாள்.

கல்யாண விஷயமாய் எந்த மாதிரிப் புருஷன் தனக்கு வேண்டும் என்கிறதைப் பார்வதி ஊகிக்கவே இல்லை. யோக்கியதையுள்ளவனைப் பார்த்துத்தான் தாயார் தகப்பனர் கல்யாணம் செய்து வைப்பார்கள்; அவனைப் பண்ணிக்கொள்ள வேண்டியதுதான் என்று அவள் மனப்போக்கு இருந்தது.

பார்வதிக்கு ஒரு புருஷனைத் தேடுவதில் வேங்கட சுப்பையர் எடுத்துக்கொண்ட சிரமத்துக்கும் பட்ட கஷ்டங்களுக்கும் அளவே இல்லை. "நாமும் இந்தப் பெண்ணுக்குக் கல்யாணம் என்று ஒன்றைச் செய்து பார்க்கப் போகிருேமா?" என்று ஆகிவிட்டது வேங்கடசுப்பையருக்கு.

கடைசியில் யதிர்ச்சையாய் ஒரு வரன் வந்து

நேர்ந்தது. இவர் பிள்ளை தேடுவது போக, பிள்ளை வீட்டுக்காரரே இலை மறைவு காய் மறைவாய் இந்தப் பெண் விஷயமாய்ப் புலன் விசாரிக்க ஆரம்பித்தார்கள். அதற்குக் காரணம் ஸபேசன் என்ற பிள்ளை இவளைத் தற்செயலாகச் சந்தித்ததில் இவள் அழகைக் கண்டு மயங்கி, இந்தப் பெண் விஷயமாய் விசாரிக்க ஆரம்பித்தான். மேற்கொண்டு பேசியதிலும் விசாரித்ததிலும் வேங்கடசுப்பையருக்கும் இந்த வரன் உத்தமமானதாகப் பட்டது. ஒரு வாரத்துக்குள்ளேயே முகூர்த்தத்தை வைத்துக்கொண்டு கல்யாணத்தை முடித்துவிட்டார்கள். மனுஷ்யப் பிரயத்தினத்தில் அவ்வளவுதான் செய்யக்கூடும்! குலம், கோத்திரம், ஐவேஜு, சம்பந்திகளுடைய சுபாவம், பெண்ணின் புக்ககம் சௌக்கியமாய் இருக்கக்கூடியதா என்று இம்மாதிரி விஷயங்களைக் கூடியவரையில் தீர விசாரித்துத்தான் கல்யாணத்தைப் பெரியோர்கள் செய்துவைக்கிறார்கள். பார்வதிக்குப் புக்ககம் இப்படியாய்விடும் என்று வேங்கடசுப்பையர்தாம் என்ன கண்டார்? முன்னாடி ஏதாவது சூசனை இருந்தால்கூட அவர் இதில் பிரவேசித்திருப்பாரா?

கல்யாண காலத்தில் ஸபேசன் பி. ஏ. பாஸ் செய்துவிட்டு ரெவினியூ போர்டு ஆபீஸில் அறுபது ரூபாய் சம்பளத்தில் இருந்தான். இப்பேர்ப்பட்ட வரன் நமக்கு எங்கே கிடைக்கப் போகிறது என்று வேங்கடசுப்பையர் பெருமை கொண்டார்.

ஸபேசனுடைய தகப்பனார் ஏதோ பெரிய உத்தியோகத்திலிருந்து அவன் நான்கு வயதாயிருக்கும் பொழுதே இறந்துவிட்டாராம். அதிக சொத்து ஒன்றும் வைக்கவில்லை. இருந்த சொத்தைக் கொண்டு

அவன் தாயார் அவனைப் பி. ஏ. பாஸ் செய்கிறவரை யில் படிக்க வைத்தாள். அவனுக்குப் பெரிய தகப்ப ஞர் ஒருவர் போலீஸ் டிப்டி சூபரண்டெண்டாக இருந் தார். ஒப்புக்குக் கல்யாணப் பேச்செல்லாம் அவரோடு நடத்தப்பட்டது, தவிர, அவர் ஒன்றிலும் அதிகமாகப் பட்டுக்கொள்ளவில்லை என்பதை வேங்கடசுப்பையர் கவனித்தார். எதற்குப் பதில் சொல்ல வேண்டும் என்ருலும், "அவன் தாயாரைக் கேட்டுச் சொல்லு கிறேன்" என்று சொல்லி, தமக்கு இது விஷயமாக அதிக சம்பந்தமில்லை போல் அவர் காட்டிவந்தார். தாயார் சில சமயங்களில் நேரிலும் மறைவிடமாகவும் தேனொழுகப் பேசிஞள். அவள் பேச்சிலேயே வேங்கடசுப்பையர் மலைத்துவிட்டார். "ரொம்பவும் நல்ல மனுஷி! என்ன விநயமாகப் பேசுகிருள்!" என்று வீட்டில் வந்து மங்களத்தினிடம் உற்சாகமாய்ச் சொன்ஞர்.

## 2

## அவயாம்பாள்

ஸபேசன் சுத்த அப்பாவி; அடித்தால்கூட அழத் தெரியாது. அழுதால் யாராவது என்ன சொல்வார் களோ என்று பயப்படுகிறவன் மாதிரி இருக்கும். உருவத்தில் நல்ல அழகுடையவன். ஆனால் பார்ப்ப தற்கு மசமசவென்று மத்துமாதிரி ஒரு பிரகாசமுமில்லா மல் அவன் முகக்குறி இருக்கும். படிப்பைத் தவிர உலகத்தில் அவனுக்கு ஒன்றும் தெரியாது. ஸபேச னும் தாயாரும் வசித்துவந்தது திருவல்லிக்கேணியில். பதினெட்டு வயசு வரையில் சென்னப்பட்டணம்

ஜார்ஜ் டவுனில் பிராட்வே எங்கு இருக்கிறது என்றே அவனுக்குத் தெரியாது.

டவுனுக்குப் போய் எதையாவது வாங்கிக் கொண்டு வரவேண்டுமென்றால் அவனால் முடியாது. எது எங்கே விற்குமோ, அவன் எதைக் கண்டான்? ஒரு சிநேகிதனோடு உல்லாசமாய் ஊர் சுற்றுகிறது என்கிற பழக்கமே அவனுக்குக் கிடையாது. அவன் தாயார் அவனை அம்மாதிரி வளர்த்தாள்.

'மாம்பலத்துக்குப் போய் வரலாம் என்று ஒரு 'ப்ரண்டு' கூப்பிடுகிறான், அம்மா; போய்வரட்டுமா?'' என்று ரொம்பவும் கொஞ்சுகிற மாதிரி அவன் தாயாரைக் கேட்பான்.

''ஒரு வேலையுமில்லாமல் மாம்பலம் என்னடா இப்போ? போகக் கூடாது'' என்பாள். ''வருவதற்குச் சௌகரியமில்லை'' என்று 'ப்ரண்டி'டத்தில் சாக்குச் சொல்லி அனுப்பிவிடுவான்.

பதினெட்டு வயது வரையில் அவன் தனியாக ரெயிலில் பிரயாணம் செய்ததே கிடையாது. முதலில் டிக்கட்டு வாங்குவதற்கே பயம். ஒரு தரம் தனிமையில் அவன் விழுப்புரம் போகவேண்டிய சந்தர்ப்பம் நேர்ந்தது. விழுப்புரம் போகிறவர்கள் யாராவது இருக்கிறார்களா என்று அவன் தாயார் விசாரித்து, கடைசியில் ஒருவரோடு கூட்டித்தான் அனுப்பினாள்.

''நானே போய்விடுவேன் அம்மா, எனக்கு ஒரு துணையும் வேண்டியதில்லை. விழுப்புரத்துக்கு டிக்கட்டு கொடுக்கிறான், வாங்கிக்கொண்டு ரெயில் ஏறுகிறேன்; இது தெரியாதா, அம்மா?'' என்றான் ஸபேசன்.

''தெரியும்! என்ன தெரியும் உனக்கு? சாப்பிடத் தெரியும். நீ எப்படா தனியாய்ப் போயிருக்கிறாய்?

விழுப்புரம் ஸ்டேஷனைக்கூட நீ பார்த்ததில்லையே. எது விழுப்புரம் ஸ்டேஷன் என்று நீ இறங்குவாய்? திண்டிவனத்தில் இறங்கிவைப்பாய்!"

"தெரிகிறது என்ன அம்மா? வாய் இல்லை? கேட்டால் சொல்லுகிறார்கள்."

"உனக்குக் கேட்கவாவது வாய் உண்டா? அந்த மட்டும் நாராயணசாமி ஐயர் விழுப்புரத்துக்கே போகிறாராம். அவரோடு கூட்டியனுப்பிவிடுகிறேன்" என்றாள் அவன் தாயார்.

இந்தச் சம்பவங்கள் எல்லாம் அவன் பி. ஏ. கிளாஸில் வாசித்துக்கொண்டிருந்தபொழுது நடந்தவை.

பி. ஏ. பாஸ் செய்து போர்டாபீஸில் வேலையான பிறகுதான் நாலு பேரோடு பேசுகிறது என்கிற பழக்கமே அவனுக்கு ஏற்பட்டது.

பெண்பிள்ளை வளர்த்த பிள்ளை. நாளது வரையில் தாயார் கைப்பிள்ளையாகவே இருந்துவந்துவிட்டான். அவள் நில் என்றால் நிற்பான்; உட்காரு என்றால் உட்காருவான்; போ என்றால் போவான்; கூடாது என்றால் நின்றுவிடுவான். முன்னாடி அவள் அநுமதி இல்லாமல் ஒரு காரியத்தைச் செய்யத் துணியமாட்டான்.

"அம்மா என்ன சொல்லுவாளோ?" என்று பயந்து நடுங்கிச் செத்துவிடுவான். உத்தியோகம் செய்து மாதம் அறுபது ரூபாய் சம்பாதிக்கும்போதும் அவளைக் கேட்காமல் இவன் அரையணாச் செலவழிக்க முடியாது.

தாயார் சுபாவம் நல்லதாக இருந்தால் இவையெல்லாம் உத்தமமான குணங்கள்தாம். "தந்தை தாய் பேண்", "மாதாவை ஒரு நாளும் மறக்க வேண்டாம்",

"மாத்ருதேவோ பவ" (மாதாவைத் தெய்வமாக நினை) என்கிற விவேகபோதனைகள் எல்லாம் அநுஷ்டானத்துக்கு ரொம்பவும் மேன்மையானவைகள்தான். ஆனால் அந்தத் தாயாரும் உத்தம குணத்தோடு கூடினவளாக இருக்கவேண்டாமா? அதுதான் ஸபேசன் தாயாரிடத்தில் இல்லை.

அவயாம்பாள் என்றால் திருவல்லிக்கேணியில் சிலர், "அவையாம்பாள்தானே" என்று சொல்லிப் பரிகாசமாய்ப் புன்னகை செய்வார்கள். மற்றும் சிலர், "ஐயோ அவயாம்பாளா?" என்று பீதியையும் அடைவார்கள்.

"அவள் உபத்திரவம் பொறுக்க முடியாமல் தானே அவள் புருஷன் அற்பாயுசாகவே இறந்துவிட்டான்!" என்று சொல்லுவாரும் உண்டு. (அவயாம்பாள் என்பது ஸபேசன் தாயார்.)

திருவல்லிக்கேணியில் அவயாம்பாளைத் தெரியாதவர்கள் இல்லை. திருவல்லிக்கேணியில் அவள் போகாத வீடில்லை; அவளுக்குத் தெரியாத வம்பும் கிடையாது. அவயாம்பாளைப் பார்க்கவேண்டுமென்றால் அநேகமாக அவள் வீட்டில் அகப்படமாட்டாள். தெருவுகளிலோ, அவளுடைய 'ப்ரண்ட்ஸ்' வீடுகளிலோ, ஜவுளிக் கடைகள், வளையல் கடைகள், வெள்ளிப்பாத்திரக் கடைகள் இவைகளிலேதான் சந்திக்கலாம். இந்தக் கடைகளில் எப்பொழுதும் அவள் வாங்குவது ஒன்றுமில்லை. எங்கெங்கே என்ன என்ன விற்கிறது என்று தெரிந்துகொள்ளவும், அவைகளைப்பற்றி, 'ப்ரண்ட்ஸ்'களிடத்தில் பின்னடி பேசுவதற்கு உபயோகமாக இருப்பதற்காகவுந்தான் அவள் போவது. எப்பொழுதும் அவளோடு விதவையாய்ப்

போன அபீதம் என்கிற அவளுடைய பெண்ணும் கூடவே கிளம்புவாள். மணி பத்தடித்துப் பிள்ளை காலேஜுக்கோ ஆபீஸுக்கோ போய்விட்டால் இவர்கள் வெளிக்கிளம்ப வேண்டியதுதான். கடைகள் சிநேகிதிகள் வீடுகள் எல்லாவற்றையும் சுற்றிக் கொண்டு சாயந்தரம் ஐந்து மணிக்கு வீடுவந்து சேருவார்கள்.

"மணி பத்தடித்துவிட்டதே; அவயம், அபீதம் இவர்கள் இன்னும் என்ன 'பார்வேட்டை'க்கு கிளம்பாமல் இருக்கிறார்கள்?" என்பார்கள் அந்தத் தெருவி லுள்ளவர்கள். ஆனால் அவர்களைத் தெரிந்தவர்கள் அவர்களை ஒருவிதமான அசடுகள் என்று பரிகசிப்பார் களே ஒழிய, அவர்கள் நடத்தையைப்பற்றிக் குறை கூறுபவர்கள் திருவல்லிக்கேணியிலேயே இல்லை.

"எங்கு ஸார் அவயம், அபீதம் போய் வருகிறார்கள்?"

"எங்கோ? பெரிய தெருவில் ஒரு சினிமா ஸ்டார் புதிதாய்க் குடிவந்து சேர்ந்தாளோ இல்லையோ; அவளைத் தரிசனம் செய்துவிட்டு அவள் சிநேகத்தைச் சம்பாதிக்காமல் இருக்கலாமோ?"

"புது ஸினிமா ஸ்டார் வந்தால் இவர்களுக்கு என்ன?"

"இவர்களுக்கு இல்லாமல் பின்னே யாருக்கு என்ன ஸார்?" என்று ஒருவரோடு ஒருவர் பேசிக் கொள்வார்கள்.

அவயம் முகத்தில் எப்பொழுதும் எள்ளும் கொள்ளும் வெடித்துக்கொண் டிருக்கும். பிறர் வாழ்வதைக் கண்டு பொறுமையாலேயே உடல்

உருகிக்கொண்டிருப்பாள். ஆனால் வாயிலிருந்து வரும் பேச்சிலோ தேன் ஒழுகும்.

ஸபேசன் தகப்பனார் இறந்தவுடன் அவருடைய உறவினர்களை எல்லாம் திரஸ்காரமாய்ப் பேசிப் பேசிப் புறக்கணித்தாள். ஸபேசன் தகப்பனார் இறந்தவுடன் போலீஸ் டிப்டி சூபரண்டெண்டாக இருந்த அவன் பெரிய தகப்பனார் இந்தக் குடும்பத்துக்கு ஒத்தாசையாக இருக்கவேண்டுமென்று மனப்பூர்வமாக முன் வந்தார். இவர்களுக்குக் கிடைத்த இன்ஷியூரன்ஸ் பணம் நாலாயிர ரூபாயை வட்டிக்கு விட்டு விருத்தி செய்வதாகவும் பிள்ளையின் படிப்புக்கு ஏற்பாடு செய்வதாகவும் தெரிவித்தார்.

"பணத்தை என்ன செய்யவேண்டும் என்று எனக்குத் தெரியும்; பிள்ளையைப் படிக்கவைக்கவும் தெரியும். எனக்கு ஒருவர் ஒத்தாசையும் வேண்டியதில்லை" என்று அவயாம்பாள் உதாசீனமாய்ப் பதில் சொல்லியனுப்பினாள். அதோடு அவர் கௌரவமாக விலகிக்கொண்டார். லௌகிகம் தெரிந்தவராகையால் உறவை விட்டுக்கொடுக்காமல் இந்தக் குடும்ப விஷயத்தில் பட்டதும் படாததுமாகவே நாளது வரையில் இருந்துவந்தார். புருஷனுடைய மற்ற உறவினர்களையும் அம்மாதிரியே விரட்டிவிட்டாள். "அந்தப் பிடாரி யாரை அண்ட விடுவாள்? எப்படியாவது போகிறாள்" என்று அவர்களும் விலகிக்கொண்டு விட்டார்கள்.

பிறகு தன்னுடைய அக்காள் தங்கை, தங்கை பிள்ளை, அக்காள் பெண் என்று தன் வர்க்கத்தவரை வீட்டில் கொண்டு வந்து சேர்த்துக்கொண்டு விட்டாள். ஆனால் அதிகாரம் பூராவும் இவள் கையிலேயே

இருந்து, வீட்டில் இவள் இட்டதுதான் சட்டமாக இருந்தது.

ஸபேசனுடைய தமக்கை அபீதத்துக்குக் கல்யாணம் செய்தபோது கல்யாண நிர்வாகம் பூராவும் அவள் கையிலேயே இருந்தது. புருஷ நமோதுக்காக டிப்டி சூபரண்டெண்டும் வந்திருந்தார்.

அபீதத்தைச் சென்னப்பட்டணத்திலேயே முனிஸிபாலிடியில் ஸானிடெரி இன்ஸ்பெக்டராயிருந்த ஒருவனுக்குக் கொடுத்துக் கல்யாணம் செய்தாள். அவன் தாயார் தகப்பனார் அண்ணன் தம்பிகள் எல்லாரும் புரசைவாக்கத்தில் இருந்தார்கள். அபீதத்தினுடைய புருஷன்தான் மூத்த பிள்ளை. அபீதம் ஒரு வருஷம் புரசைவாக்கத்தில் போய்ப் புக்ககத்தில் குடித்தனம் செய்தாள். அதற்குள் தாயாரும் பெண்ணுமாக அவனுக்குப் போதனை செய்து அவர்கள் குடும்பத்தைத் திருவல்லிக்கேணி வந்து சேரும்படி ஏற்பாடு செய்துகொண்டார்கள். இங்கு வந்த ஆறு மாதங்களுக்குள் அபீதத்தின் புருஷன் தாய்தந்தையர்களோடு சண்டை போட்டு அவர்களை விரட்டிவிட்டு அவயம் வீட்டோடேயே வந்து சேர்ந்துவிட்டான். அபீதத்தின் புருஷனுக்கு அவன் மாமியாரின் சாமர்த்தியத்தின் பேரிலிருந்த மதிப்பு வேறு யார் பேரிலும் இல்லை.

"அவள் புருஷனாய்ப் பிறந்திருக்க வேண்டும், ஸார்! என்ன கெட்டிக்காரி என்கிறீர்கள்!" என்று எப்பொழுது பார்த்தாலும் அவள் பெருமையையே சொல்லிக்கொண்டிருப்பான்.

அபீதத்துக்கு நான்கு குழந்தைகள் பிறந்தன. அவள் புருஷனுக்கு டைபாய்டு ஜுரம் கண்டு திடீர்

என்று இறந்துவிட்டான். அவன் இறந்ததற்கு அவன் தாய் தகப்பன் யாருமே வரவில்லை.

"வராவிட்டால் கிடக்கிறார்கள்! வந்து என்ன ஆக வேண்டும்?" என்றார்கள் அபீதமும் அவயமும். அபீதம் அதுமுதல் குழந்தைகளோடு தாயார் வீட்டோடு இருந்துவிட்டாள்.

இந்தக் குடும்பத்தில் பார்வதிக்குக் கல்யாணமாயிற்று. இது விஷயம் ஒன்றையும் வேங்கட சுப்பையர் அறிந்தவரல்ல.

"எனக்கு இருப்பது ஒரு பிள்ளை. அவனும் அவன் பெண்ஜாதியும் சௌக்கியமாய் சந்தோஷமாய்ச் சிரித்து விளையாடிக்கொண்டிருந்தால் அந்தக் காட்சி தான் என் ஜன்மத்துக்கு ஸாபல்யம்" என்றாள் அவயம்.

"அது வாஸ்தவந்தானே?" என்று நம்பினார் வேங்கடசுப்பையர்.

பெண்ணின் புருஷன் ஸபேசன் ரொம்ப நல்ல குணமுடையவனாக அவருக்குத் தென்பட்டான். சில வதந்திகள் காதில் விழுந்தும், "யார் எப்படியாவது இருக்கட்டும். முக்கியமாக, பையன் சாது; ரொம்ப நல்ல குணமுடையவன்" என்று பெண்ணைக் கொடுத்து விட்டார். ஆனி மாதக் கடைசியில் கல்யாணம் திருவல்லிக்கேணியிலேயே நடந்தது. பெண்ணை இரண்டு தினங்கள் விட்டுவிட்டுப் போகும்படியாக அவயாம்பாள் கேட்டாள். இரண்டு தினங்கள் பெண் புக்ககத்தில் இருந்துவிட்டுத் தாயார் வீடு வந்து சேர்ந்தாள். அவயம் அவளைத் தலைமேல் வைத்துக் கொண்டு கூத்தாடினாள். இனி இம்மாதிரியும் ஒரு பெண்ணுக்கும் புக்ககம் அகப்படுமா என்று மகிழ்ந்து

புக்ககப் பெருமையைப் பிறந்த வீட்டில் புகழ்ச்சியாகச் சொல்லிக்கொண் டிருந்தாள்.

புருஷன் பேரில் இவளுக்கு ஆசை உதித்தது. அவன் இவளைப் பார்த்துவந்த பார்வையிலும் அவனுடைய ஆசை இவளுக்கு வெளிப்பட்டது. பத்துத் தினங்களில் வரும் ஆடிப் பண்டிகைக்கு மாமனூர் வீட்டுக்குப் போய் அங்கே பெண் ஜாதியுடன் குலாவி விட்டு வரவேண்டும் என்று மனத்தில் வேண்டியவரையில் கோட்டை கட்டிக்கொண்டிருந்தான் ஸபேசன்.

ஆடிக்கு மாமனூர் வீட்டுக்கும் போனான். அங்கே அவளோடு சல்லாபம் செய்யத் தனிமையான சந்தர்ப்பங்கள் எவ்வளவோ கிடைத்தன. அவைகளை எல்லாம் பயன்படுத்திக்கொள்ள முடியாமல் லஜ்ஜை மேலிட்டு நின்றது.

ஒரு சமயம் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு அவளைத் தான் இருந்த ரூமில் மெதுவாகப் பேச்சுக்கு இழுத்தான். அவளும் இணங்கிவந்தாள். ரூம் உத்தியானவனம் போல் ஆயிற்று.

"நான் ராத்திரி வண்டியில் ஊருக்குப் போகிறேனே, உனக்கு என்னமா இருக்கு?" என்றான்.

"மனசுக்கு ரொம்பவும் கஷ்டமாயிருக்கிறது. இன்னும் ஒரு நாள் இருந்துவிட்டுப் போங்களேன்" என்றாள் ஒய்யாரப் பார்வையோடு.

"ஐயோ அப்பா! அம்மா கொன்றுவிடுவாள்! இன்றைக்கே வந்துவிடவேண்டும் என்று கண்டிப்பாய்ச் சொல்லியிருக்கிறாள்" என்றான் ஸபேசன்.

"அம்மா கிட்டே அவ்வளவு பயமா?"

"நிற்கிறதற்கில்லை. போகவேண்டும்" என்றான் ஸபேசன்.

# 3

## பார்வதியின் குடித்தனம்

ருதுசாந்தி முகூர்த்தம் நடந்து புருஷனுடன் குடித்தனம் செய்வதற்காகப் பார்வதி திருவல்லிக்கேணியில் புக்ககத்துக்கு நிரந்தரமாய் வந்துசேர்ந்தாள். அதற்கு முன்னும் ஐந்தாறு தடவை அவள் இங்கு வந்து சிறிது காலம் தங்கி இருக்கிறாள். அவள் புருஷனும் மத்தியில் அநேக தடவை வந்து பிறந்தகத்தில் தங்கி இருக்கிறான். இந்த இரண்டு வீடுகளிலும் அவள் புருஷன் அவளுடன் நடந்துகொண்ட மாதிரியில் வித்தியாசத்தை உணர்ந்தாள். பிறந்த வீட்டில் இவளுடன் ரொம்பவும் பக்ஷமாகவும் ஸகஜமாகவும் நடந்து கொள்வான். இவளைப் பார்க்கும் பொழுதெல்லாம் அவன் முகம் விளையாட நினைப்பவன்போல் காணப்படும். பரிகாசமாகச் சிமிட்டுவான்; புன்னகை செய்வான்; அவள் தனிமையாய் அகப்பட்டால், "ஏய், புருஷன் ஒருவன் இங்கே நின்றுகொண்டிருக்கிறேன்; என்னமோ பார்க்காததுபோல் போய்க்கொண்டிருக்கிறாயே" என்று வேடிக்கையாய்ச் சொல்லி வலுவில் அவளை இழுத்துப் பேச்சாடுவான். அவள் நினைவாகவே அவன் இருப்பதுபோல் அவன் முகக்குறி தென்படும்.

அவன் வீட்டிலோ, அவள் இருக்கிற பக்கங்கூடத் திரும்பிப் பார்க்கமாட்டான், குறுக்கில் நடுவில் அவள் கண்ணில் பட்டாலும் அவளை நிமிர்ந்துகூடப் பார்க்காமல் ஒதுங்கிப் போய்விடுவான். பார்வதியின் பேச்சை அவனுடைய தாயார் எப்பொழுதாவது எடுத்தால் அதைக் காதில் வாங்காதவன்போல் நடிப்பான். பார்வதியும் புருஷன் இருக்கும்பொழுது அதிக

மாக அவன் கண்ணில் படும்படி வீட்டில் நடமாட மாட்டாள்.

பெரியவளாய்த் தாயார் ஒருத்தி இருக்கும் இடத்தில் அப்படி இருப்பதுதான் மரியாதை என்று நினைத்து ஸபேசன் அம்மாதிரி நடந்துகொள்ளுகிறான் என்று பார்வதி அதை ஸகஜமாக எடுத்துக்கொண்டாள். அது தாயாரிடத்தில் மரியாதையினாலல்ல. பயத்தினால் என்று பார்வதிக்கு எப்படித் தெரியும்? "அடக்கி ஆண்டால்தாண்டா பெண்சாதி! அவள் முகத்தைப் பார்த்து இளித்து அவளைத் தலைக்கேற விட்டுக்கொண்டால் அப்புறம் அவளுக்கு நீ எஜமானனல்லடா" என்று தாயார் தினம் செய்து வரும் போதனைகளை அவள் என்ன கண்டாள்? ருது சாந்தியானால் எல்லாம் சகஜமாய்ப் போய்விடும் என்று அவள் உற்சாகம் குறையாமல் இருந்தாள்.

இவளுடைய பிறந்தகத்தில் அவன் வந்திருந்த காலங்களில் அவன் குலாவினதெல்லாம் இவள் ஞாபகத்தில் இல்லையா!

பார்வதி புருஷனோடு நிரந்தரமாய்க் குடித்தனம் பண்ணவந்தபிறகும் ஸபேசன் நடத்தை முன்மாதிரியே இருந்தது. இரவில் அந்தரங்க காலங்களில் அசாத்திய மாய்க் குலாவுவான்; வெளிப்படையாக ரொம்பவும் விறைப்பில் இருப்பவன்போல் காண்பான். சில சமயங்களில் அவமதிப்பாய்க்கூடப் பேசுவான். "பெண்சாதி என்றுதான் ஒருத்தி வந்திருக்கிறாளே; அவள் இதையெல்லாம் செய்துவைக்கக் கூடாதா? இவைகளை எல்லாக்கூடவா தாயார் செய்யவேண்டும்?" என்று தாயார் சொன்னால், "அவள் கிடக்கிறாளடி மத்து! நமக்கு என்று ஒரு மத்து வந்துசேர்ந்திருக்கிறது. அதைக் கட்டிக்

கொண்டு அழவேண்டும் என்று நம் தலையில் எழுதி விட்டானே" என்று அலுத்துக்கொண்டு பார்வதி காதுபடப் பேசுவான். இதெல்லாம் ஒரு வேஷம் என்று பார்வதி நினைத்தாள். பெண்சாதியைக் கண்டால் பிள்ளைக்குப் பிடிக்கவில்லை என்று தாயார் நினைத்துச் சந்தோஷித்தாள். மேலும் பார்வதியைத் தூற்றுவதில் துணிந்தாள்.

அபீதத்துக்கு அதற்குமேல் சந்தோஷம். அவளுக்குப் பார்வதியைத் தூற்றத் துணிவு ஏற்பட்டது.

பொல்லாத மாமியாரும், விதந்துவாய் வீட்டோடு இருக்கும் ஒரு துஷ்ட சுபாவமுள்ள நாத்தனாரும் இருக்கிற வீட்டில் ஒருமாட்டுப்பெண்ணாய் இருப்பதன் கஷ்டம் இருந்து அநுபவிக்கும் பெண்களுக்குத்தான் தெரியும். புருஷன் தன் பக்கம் இருக்கிறான் என்றால் பெண்சாதி அந்தச் சந்தோஷத்தில் எந்தக் கஷ்டங்களையும் பொறுத்துக்கொண்டிருக்கக் கூடும். அந்தப் பாக்கியம் பார்வதிக்கு இல்லை. தாயார் பேச்சையும் அக்காள் பேச்சையும் கேட்டுக்கொண்டு அவனும் அநேக சமயங்களில் 'சள் பள்' என்று விழுவான். வாய் எடுத்தால், "முண்டை அவளை வீட்டை விட்டுத் துரத்தி மறு வேலை பாரம்மா! அந்தச் சனி கொஞ்ச நாளைக்குத் தாயார்வீட்டில் போயிருந்து விட்டு வரட்டும். நிம்மதியாய்ச் சில காலமாவது இருக்கலாம்" என்பான்.

பொறுக்க முடியாத சமயங்களில் அவனிடத்தில் சொல்லித் துக்கத்தை ஆற்றிக்கொள்ளவும் அவளுக்குத் துணிவும் நம்பிக்கையும் ஏற்படவில்லை. அவன் குணம் பாம்பு என்று தாண்டுவதற்குமில்லை, பழுதை என்று மிதிப்பதற்குமில்லை என்று நன்றாய் அறிந்து கொண்டாள்.

திருவல்லிக்கேணியில் இரண்டு தெருவுகள் தாண்டி, பார்வதியின் தாயாரின் தமக்கை வசித்துவந் தாள். அந்த வீட்டுக் கல்யாணத்துக்குப் பார்வதி வந்திருந்தபோதுதான் ஸபேசன் அவளைக் கண்டு மோகித்ததும், கல்யாணப் பேச்சுக்கு இடம்கொடுத்த தும். பெரிய தாயார் வீட்டுக்குப் பார்வதியை அவள் மாமியார் அதிகம் போக விடுவதில்லை. பெரிய தாயார் பார்வதியைப் பார்க்க வாரத்துக்கு ஒரு முறை இரு முறை வருவாள். அந்தச் சமயங்களில் பார்வதியின் மாமியார் தேனொழுகப் பேசுவாள். ஆனால் பார்வதி யோடு அதிகமாகத் தனிமையில் பேச அவகாசம் கொடுக்க மாட்டாள். அவள் வந்து பார்த்துவிட்டுப் போகலாம்; அவர்களுக்குள் தனிமையில் பேச்சு நடக்கச் சந்தர்ப்பம் ஏற்படாது.

பார்வதி சந்தோஷமாக இல்லை என்று மாத்திரம் அவள் பெரிய தாயார் அறிந்தாள். அது விஷயத்தை அவள் பெற்றோர்களுக்கும் எழுதினாள். எல்லோ ரும் துக்கப்பட்டார்கள். அதற்குமேல் பெண் வீட்டுக் காரர் என்ன செய்ய முடியும்? விதியை நொந்து பெரு மூச்சு விட்டுக் கொண்டிருந்தார்கள்.

பார்வதிக்கு மாமியாரால் மற்றொரு விதமான இம்சையும் ஏற்பட்டது. ருதுசாந்திக்குள் அவளுக்குத் தங்க ஒட்டியாணம் பண்ணிப் போடுவதாய் அவள் தகப்பனார் கல்யாண காலத்தில் சொல்லியிருந்தார். அது அவருடைய சக்திக்கு மீறின விஷயம்; இருந்தா லும் பின்னடி பார்த்துக்கொள்ளலாம் என்று கல்யாணம் முடிவதற்காக அந்தக் காலத்தில் அவர் சொல்லிவைத்தார்.

வேங்கடசுப்பையருக்குச் சம்பளம் நூற்றெழு பத்தைந்தாக இருந்தபோதிலும் அதில் யாருக்கோ ஜாமீன் போட்டு அந்தக் கடனுக்காக மாதம் தொண்ணூறு ரூபாய் கட்ட வேண்டியிருந்தது. வீட்டு ஜீவனமே கஷ்ட ஜீவனமாய்விட்டது. கல்யாணத்தையும் வருஷப் பண்டிகைகளையும் எவ்வளவோ கஷ்டப்பட்டு, கௌரவத்தை விட்டுக்கொடுக்காமல் நடத்தினர். மேலும் ஒரு பைசாவுக்குக்கூடச் செய்ய முடியாத நிலையில் அவர் இருந்தார்.

பார்வதியின் மாமியார் வீட்டில் ஒட்டியாணத்தைப்பற்றிய நிர்ப்பந்தம் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டு வந்தது.

"என்னடா ஸபேசா, உங்க மாமனர் சுத்த லுச்சாவா யிருக்கிருர்? வாய் கிழியப் பண்ணிப் போடுகிறேன் என்ருரே, பண்ணிப்போடவேண்டுமென்று ஒரு மனுஷ்யனுக்கு ஞானம் இராது? இதென்ன மானங்கெட்ட பிழைப்புடா! ஒட்டியாணத்தைப் பண்ணிப் போட்டுக்கொண்டு வந்தால் இந்த வீடு நுழையட்டும். இல்லாவிட்டால் இந்த வீட்டு வழி வரக்கூடாது என்று கண்டிப்பாய்ச் சொல்லி அனுப்புகிறதற்கு என்னடா?" என்று பலவாருக அவன் தாயார் இரைந்தாள்.

ஒட்டியாணத்துக்காகவே பார்வதி தாயார் வீட்டுக்கு அனுப்பப்பட்டாள்.

"ஒட்டியாணம் இப்போ முடியவில்லை என்ருல் ஆறு பவுனில் இரண்டு இரண்டு வளைகளையாவது பண்ணிப் போட்டுக்கொண்டு வரவேண்டும். அப்புறம் ஒட்டியாணத்தை நாலைந்து மாதத்தில் வேண்டு மானல் போடட்டும். பண்ணியாச்சு என்று கடிதம்

போடச் சொல். அதற்கப்புறந்தான் உன்னை அழைத்துக்கொண்டுவருவோம். இல்லாவிட்டால் நீ அங்கேயே இருக்கவேண்டியவள்தான்'' என்று கண்டிப்புச் செய்து அனுப்பினுள்.

பார்வதியின் தாயாரும் தகப்பனுரும் ரொம்பவும் மனது கஷ்டப்பட்டுக் கொண்டார்கள்.

"என்னடி அம்மா செய்கிறது? இப்போ ஆறு பவுன் என்ருல்கூட என்னுல் சாயாதே. மூன்ருடி ஒரு பவுனைச் சொல்லு. அதுகூட முடியாது. நான் நேரில் வந்து இன்னும் நாலைந்து மாதங்களில் வளையல் செய்து போடுவதாகச் சமாதானம் சொல்லுகிறேன். நீ போய் அங்கே இரு. அவர்கள் துஷ்டத்தனமாய்ப் பேசினுலும் கொஞ்சம் பொறுத்துக்கொண்டிரு. நல்ல காலம் வரும்'' என்று மனம் நொந்துபோய்ச் சொல்லி, பார்வதியைப் புக்ககத்துக்கு அழைத்துப் போவதாகச் சொன்னுர்.

"வளையல்களாவது இல்லாமல் அங்கே போகவே முடியாது'' என்று பார்வதி சொல்லிவிட்டாள்.

ஆறுமாத காலம் பிறந்தகத்திலேயே இருந்து விட்டாள். இவளைப் புக்ககத்துக்கு அழைக்கவே இல்லை. நடுவில் இரண்டொரு தடவைகள் ஸபேசன் இங்கு வந்துபோனுன். அவனும் அழைத்துப்போகும் பேச்சை எடுக்கவே இல்லை. கடைசியாக ஒரு தரம் அவனை ரொம்பவும் தீனக் குரலில் கெஞ்சினுள்.

"அப்பாவுக்கு முடிந்தால் செய்யாமல் விடுவாரா? கடன் நிர்ப்பந்தம் அவருக்கு ரொம்ப அதிகமாய் விட்டது. ஸம்மனும் வாரண்டும் கிளம்பப் போகிற தாம். அவர் என்ன செய்வார்? அதற்காக என்னை நீங்கள் சிக்ஷிக்கலாமா? என்னை நீங்களும் இப்படி

நிர்க்கதியாய் விட்டுவிட்டால் எனக்கு வேறு கதி ஏது? நான் உயிர் வைத்துக்கொண்டிருந்து யாருக்கு என்ன சுகம்? பெற்றோர்களுக்கும் சுகமில்லை: மனக் கஷ்டந் தான். புகுந்த இடத்திலும் சுகமில்லை" என்று ரொம் பவும் உருக்கமாகக் கெஞ்சி, புருஷன் காலைக் கெட்டியா கப் பிடித்துக்கொண்டு கண்ணீர் விட்டு அழுதாள். ஸபேசன் மனமும் உறுத்தியது.

"எழுந்திரு! எனக்கு ஒரு யோசனை தோன்று கிறது. அந்த மாதிரி செய்யச் சொல்லு. தங்க முலாம் போட்ட இமிடேஷன் வளையல்கள் இரண்டை உனக்கு வாங்கிப் போடச்சொல். அதோடு வந்து சேரு. வளையல்களாவது இல்லாமல் அம்மா உன்னை வீட்டில் சேர்க்கவே மாட்டாள்" என்று ஸபேசன் ஒரு யுக்தி யைச் சொன்னான்.

"ஐயோ ஐயோ! அது எப்படி முடியும்? அம்மா வுக்குத் தெரிந்தால் அதோடு நான் செத்தேன்!" என்று பயம் மூடிய குரலில் பார்வதி சொன்னாள்.

"அம்மாவுக்கு எப்படித் தெரியப்போகிறது? வளையல் உன் கையோடு இருக்கப்போகிறது" என்று ஸபேசன் தைரியம் சொல்லிவிட்டுப் போனான்.

வேங்கட சுப்பையர் இந்த மோசத்துக்கு முதலில் ஒப்புக்கொள்ளவில்லை. மங்களம் வற்புறுத்தினதன் பேரில் கடைசியாக ஒப்புக்கொண்டு இமிடேஷன் வளையல்களுடன் பார்வதி புக்ககம் வந்து சேர்ந்தாள்.

ஸபேசனுடைய தாயார் இதைக் கவனிக்கவில்லை. கையைப் பார்த்துவிட்டு, "எத்தனை பவுனடி?" என்று கேட்டாள்.

"எனக்குத் தெரியாதம்மா!" என்றாள் பார்வதி.

"கனமாயிருக்கிறது. ஆறு பவுனுவது இருக்கும்" என்றுள் தாயார். இம்மாதிரி நான்கு மாதங்கள் கழிந்தன.

ஒரு நாள் இந்தச் சூது வெளிக்கு வந்துவிட்டது. இந்த வளையல் மோஸ்தரில் அபீதம் பெண்ணுக்கு வளையல் செய்யவேண்டுமென்று மாதிரிக்கு வளையலைக் கழற்றிக் கொடுக்கும்படி அவளைக் கேட்டாள். அது பார்வதி வயிற்றில் நெருப்பைக் கொட்டியது; கழற்றிக் கொடுத்தாள். சூது வெளியாயிற்று.

"ஏண்டி மோசக்காரி! இந்தத் திருட்டுத்தனம் பண்ணினவள் இன்னும் என்ன செய்யத் துணிய மாட்டாயடி?" என்று பலவாருகப் பார்வதியைத் திட்டி, "நீ இனி இந்த வீட்டில் இருக்க லாயக்கில்லை. போ வெளியே!" என்று அவளைப் பரபரவென்று பிடித்து இழுத்து வெளியில் தள்ளித் தெருக் கதவை சாத்திவிட்டாள்.

அப்பொழுது சாயந்தரம் ஏழு மணி இருக்கும். பார்வதி அழுதுகொண்டே வெளியில் நின்றுகொண் டிருந்தாள். மாமியார் மறுபடி வெளியில் வந்து, "என் வீட்டு வாசலில் நின்றுகொண்டு அழுவானேடி? உங்க பெரியம்மா வீட்டில் கொண்டுபோய் விட்டுவிடு கிறேன்" என்று சொல்லி, பார்வதியின் பெரிய தாயார் வீட்டு வாசலில் அவளைக் கொண்டுபோய்விட்டுத் திரும்பிவிட்டாள். பார்வதி உள்ளே போய், பெரிய தாயாரிடத்தில் எல்லாவற்றையும் சொல்லி அழுதாள்.

இது நடந்த சமயத்தில் ஸபேசன் வீட்டில் இல்லை. அவன் வந்தவுடன் தாயார் விஷயங்களைச் சொல்லி இரைந்தாள்.

"கொண்டு விட்டுவிட்டயோ இல்லையோ? அது தான் சரி. அயோக்கியனுக்குத் தகுந்த மரியாதை அது தான். இதோடு சனி தொலையட்டும்!" என்றான் ஸபேசன்.

வேங்கடசுப்பையருக்குத் தந்தி கொடுக்கப்பட்டு அவரும் மங்களமும் ஓடி வந்தார்கள். "என் வளையல்களைக் கழற்றிக் கொடுக்கிறேன். போட்டுக் கொண்டு போய்விடுங்கள்" என்றாள் பெரிய தாயார்.

அந்த வளையல்களை எடுத்துக்கொண்டு பார்வதியையும் கூட அழைத்துக்கொண்டு அவள் தாயாரும் தகப்பனாரும் ஸபேசன் வீட்டாரைச் சமாதானப்படுத்தி அவளை அந்த வீட்டில் சேர்ப்பதற்காக ஸபேசன் வீட்டுக்குச் சென்றார்கள். இவர்கள் வருவதை அறிந்து, ஸபேசன் தெருக் கதவை முன்னாடியே சாத்திவிட்டான். "இடம் கொடுத்துவிடப் போகிறாய்!" என்று தாயார் எச்சரிக்கை செய்தாள்.

ஸபேசன் ஜன்னல் பக்கம் வந்து, "யாரது?" என்று கத்தினான்.

அவனைப் பார்த்ததுமே, "நான்தான், மாப்பிள்ளை. கொஞ்சம் கதவைத் திறவுங்கள்" என்றார் வேங்கடசுப்பையர்.

"உங்களோடு எனக்கு ஒரு பேச்சும் இல்லை. நீங்கள் என்னிடத்தில் ஒன்றும் சொல்லவேண்டியதில்லை, போய் வரலாம்" என்றான் ஸபேசன்.

பார்வதி கீழே விழுந்து நமஸ்காரம் செய்து, "என்னை நீங்கள்தான் காப்பாற்றவேண்டும். பேதை செய்த குற்றத்தை எல்லாம் மறந்துவிடவேண்டும். உதைத்தாலும் புகழ்ந்தாலும் உங்களைத் தவிர எனக்கு

வேறு என்ன கதி இருக்கிறது?" என்று அழுது கெஞ்சினுள்.

"சரிதான், போய் வாருங்கள்!" என்று சொல்லி ஸ்டேசன் ஜன்னலைச் சாத்திக்கொண்டு உள்ளே போய்விட்டான்.

வேறு என்ன செய்ய இருக்கிறது? பார்வதியைப் பெற்றோர்கள் தங்கள் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்துவிட்டார்கள்.

ஒரு வருஷம் இம்மாதிரி கழிந்தது. புருஷன் இவளைப்பற்றி நினைப்பதாகவே தகவல் இல்லை. எண்ண மிட்டு எண்ணமிட்டு ஏங்கினுள். நாளுக்கு நாள் அவர்கள் பேரில் ரோஷமும் கோபமும் அவளுக்கு அதிகரித்தன.

"அவர்கள் என் காலில் விழவேண்டும். அப் பொழுதுதான் என் மனம் சாந்தியடையும். அதற்கு ஏதாவது வழி பண்ணவேண்டும். புருஷனு அவர்? பேடி! 'நான்தான் சொன்னேன்' என்று சொல்ல அவருக்குத் தைரியம் இல்லாமல் போச்சே! இதற்குத் தக்க சூட்டைக் காட்டவேண்டும்" என்று வெகு தீவிரமாய் அனவரதம் சிந்தித்தாள்.

ஒரு நாள் அவளுக்கு ஒரு யோசனை தோன்றியது.

## 4

## மிஸ் கார்டர்ஸ்

புருஷனுலும் புருஷன் வீட்டாராலும் அக்கிரம மாய் அடித்துத் துரத்தப்பட்டுப் பார்வதி பிறந்தகம் வந்துசேர்ந்தாள்.

"நாம் செய்தது ரொம்பவும் தப்புதானே? அந்த வளையல்களைப் போட்டனுப்பியிருக்கக்கூடாது அது மோசந்தானே?" என்று வேங்கடசுப்பையர் வேதாந்தம் பேசினார்.

"என்ன தப்போ? நாமாகவா போட்டனுப்பி னோம்? 'சக்தி ஏற்பட்டபோது போட்டனுப்புவோம்; அதுவரையில் அழைத்துக் கொண்டால் சரி; இல்லா விட்டால் அவள் தலை எழுத்துப்படியாகிறது' என்று தானே இருந்தோம்? அந்தப் பிள்ளைதானே இந்த யோசனைகளையெல்லாம் சொல்லிப் பெண்ணை அனுப் பும்படிக் கேட்டது? அந்தப் பிள்ளை சொன்னபடி கேட்காவிட்டால் அது வேறு முறைத்துக்கொண்டு நிற்காதா? போட்டனுப்பு என்றால் என்ன அர்த்தம்? 'எது வந்தாலும் நான் பார்த்துக்கொள்ளுகிறேன்' என்றுதானே அர்த்தம்? நாம் பண்ணின தப்பு என்ன?" என்று மங்களம் விறுவிறுப்பாய்ச் சொன்னாள்.

"ஒருத்தர் தப்புமில்லையம்மா; அது என் தலை எழுத்து! உங்க மாப்பிள்ளைக்கு நான் அங்கு வந்து இருக்கவேண்டுமென்று ஆசை; அம்மா, அக்கா முகம் கோணக்கூடாது என்றும் இருக்கிறது. எதையோ யோசனையைச் சொல்லிவிட்டு இப்போ அவரே அகப் பட்டுக்கொண்டு முழிக்கிறார். இதற்கெல்லாம் காரணம் வளையலும் இல்லை, ஒன்றுமில்லை அப்பா. அந்த வீட்டில் இருக்கிற இரண்டு பொம்மனாட்டிகளில் ஒருத்தி தாடகை; மற்றொருத்தி சூர்ப்பனகை. புருஷனையும் பெண்ஜாதியையும் வாழ விடமாட்டார்கள். அவர் கள் சுகமாயிருக்கவும் பார்க்க அவர்களுக்குப் பொறுக்

காது. வெறும் வாயனுக்கு அவல் அகப்பட்ட மாதிரி அவர்களுக்கு வளையல் சாக்கு அகப்பட்டது. அவர்கள் என்றைக்கு ஒழிகிறார்களோ, அன்றைக்குத்தான் அப்பா எனக்குச் சுகம். உங்கள் மாப்பிள்ளையைச் சொல்லி என்ன லாபம்? அவர் தங்கமான பிள்ளை தான்'' என்றாள் பார்வதி.

ஸபேசன் வீட்டில் வேறு விதமாகப் பேசிக் கொண்டார்கள். "அந்தப் பெண் குடும்பத்துக்கே லாயக்கில்லையடா. புருஷனோடு இருந்து குடித்தனம் பண்ணவேண்டும் என்கிற எண்ணமே அதன் மனசில் லவலேசமும் இல்லையடா. புருஷன் பேரில் அந்தப் பெண்ணுக்குத் துளிக்கூட ஆசை இருக்கிறதாகவே தெரியவில்லை. கல்யாணமாய் ஒரு சிறு பெண்ணும் சிறு பிள்ளையும் வீட்டில் இருந்தால் சிரித்து விளையாடிக்கொண்டு இராதுகளோ? மரியாதைக்காக வெளிப்படையாக அப்படியிருப்பது முறையானாலும், சந்தில் சாக்கில் மறைவில் ரகசியமாகவாவது ஒன்றைப் பார்த்து ஒன்று சிரித்துக்கொள்ளாதுகளோ? கண் ஜாடை, ஒய்யாரப் பார்வை இதுகள் இல்லாமலிருக்குமோ? அந்தப் பெண் முகத்தில் எப்பொழுதாவது சிரிப்பு வந்து பார்த்திருக்கிறாயா? அது ஒரு கர்விடா. புருஷன் மேல் ஆசை இல்லாத பெண் வீட்டில் இருந்தால் என்ன, இல்லாவிட்டால் என்ன?'' என்றாள் தாயார்.

"அது சுத்த மத்துடி. வயசு ஆச்சு; வீட்டில் ஒரு காரியம் செய்யத் திறமையுண்டா? பெரிய சீமான் வீட்டுப் பெண் மாதிரி எண்ணமோ என்னமோ? மரியாதை என்பது துளிக்கூடக் கிடையாது. எதை யாவது கேட்டால் பதில் சொல்லுமோ? வாயைத்

திறக்காது. எதைக் கொண்டு அவ்வளவு கர்வமோ தெரியவில்லை. அந்தப் பெண் இல்லாமல் இப்பொழுது வீடு எவ்வளவு உற்சாகமா யிருக்கிறது! அது வந்தால் வீட்டையே அநிஷ்டம் வந்து சுற்றிக்கொள்கிறதே!'' என்று அக்கா வேறு அடுக்கினாள்.

இம்மாதிரி பேச்சுகளெல்லாம் எப்பொழுதும் ஸபேசன் பக்கத்திலிருக்கும்பொழுதே நடக்கும்.

“அந்தப் பெண் பேச்சை ஏனம்மா எடுக்கிறீர்கள்? அதைத்தான் விட்டுத் தொலைத்தாயிற்றே. இனிமேல் கூப்பிடுகிறதில்லை என்று முடிவு பண்ணிவிட்டோமே. சனி தொலைந்தது என்று இராமல் மேலும் மேலும் அந்தப் பேச்சை எடுப்பானேன்?'' என்று அலுத்துக் கொண்ட மாதிரி ஸபேசன் சொல்லுவான்.

தாயார் தமக்கைகள் தினப்படி தவருமல் நடத்தி வந்த ஊர் சுற்றும் பிரயாணங்களில் அநேக சிநேகிதி கள் இவர்களை, ''ஏண்டி, மாட்டுப் பெண் இன்னும் வந்தாளா, இல்லையா? ஏண்டி இன்னும் வரவில்லை?'' என்று விசாரிப்பார்கள்.

''அழைத்துக்கொண்டு வரும்படி எத்தனையோ கடிதம் போட்டாச்சு. இன்னும் என்னமோ அவர் கள் அனுப்பவில்லை. எதையோ சாக்குப் போக்குச் சொல்லிவருகிருர்கள். இப்போ ஏதோ உடம்பு சரியா யில்லையாம். ஆச்சு, வந்துவிடுவாள். மேல மாசம் அழைத்து வருவதாக எழுதியிருக்கிருர்கள். அவள் பிறந்த வீட்டுக்காரர்கள் சுத்த அசமந்தங்கள். இன்றைக்கு என்ருல் இரண்டு மாசம் ஆகும்'' என்று கௌரவமாகச் சொல்லிவந்தார்கள். ஸபேசனையும் அநேக சிநேகிதர்கள் அடிக்கடி கேட்பார்கள்.

"அவளுக்கு உடம்பு சரியில்லாமல் தாயார் வீட்டில் 'ட்ரீட்மெண்'டில் இருக்கிறாள். இப்பொழுது கொஞ்சம் பரவாயில்லையாம். ஆச்சு அழைத்துக் கொண்டுவர வேண்டியதுதான்" என்பான்.

அந்தத் தெருவில் இரண்டொருவரும் சில பந்துக்களும் உண்மை தெரிந்து, "இப்படியும் ஒரு அக்கிரமம் உண்டா? ஒரு பெண்ணைக் கட்டி அநியாயமாய் வாழ வொட்டாமல் கெடுக்கலாமா?" என்று பேசிக் கொண்டார்கள்.

"தெருவில் போகிற நாய்களெல்லாம் எங்கள் வீட்டைப்பற்றி ஏன் பேசவேண்டும்? அவரவர்கள் வீட்டு வள்ளல்கள் எல்லாம் எங்களுக்கும் தெரியும்" என்று தாயாரும் பெண்ணும் அவர்கள் காதுபட இரைந்தார்கள். அவர்களும் வாயை மூடிக்கொண்டு விட்டார்கள்.

ஆனால் ஒருவருக்கும் வளையல் விஷயம் தெரியாது. ஸபேசன் மாமனார் செய்யாத சீர்களை எல்லாம் பெருமைக்காகச் செய்ததாகச் சொல்லிக்கொண்டு திரிந்த இவர்கள், வளையல்களைப்பற்றிப் பிரஸ்தாபம் செய்தால் இவர்களுக்குத்தானே குறைவு?

ஒரு வருஷ காலமாய் வேங்கடசுப்பையர் ரொம்பவும் பணிவாக ஸபேசனுக்கு எத்தனையோ கடிதங்கள் எழுதினார். ஒரு கடிதத்துக்கும் பதில் கிடைக்கவில்லை. வணக்கமாகவும் உருக்கமாகவும் கண்ணீர் விட்டழுபவள்போலும் புருஷனுக்கு ஒரு கடிதமும், மாதுஸ்ரீ அவயாம்பாளம்மாளுக்கு ஒரு கடிதமும் பார்வதியே எழுதினாள். இரண்டு கடிதங்களும் திறக்கப்படாமல் "மறுக்கப்பட்டது" என்ற விவரத்துடன் திரும்பி வந்துவிட்டன.

திருவல்லிக்கேணியில் இருந்த பார்வதியின் பெரிய தாயாரை நேரில் போய்ப் பணிவாகப் பேசி அவள் மாமியாரையும் நாத்தனுரையும் சமாதானப் படுத்தும்படி அவளுக்கு எழுதினர்கள். அவள் போய்ப் பணிவாகவே பேசினுள்.

"உங்களுக்குமுன் எங்களுக்கு இதே விசாரமாய் இருக்கிறதம்மா. தினம் அவனுக்கு எவ்வளவோ புத்தி மதி சொல்லி வருகிருேம். 'வேண்டாமடா! பெண் பாவம் பொல்லாதடா. நம்முடைய குடும்பமே க்ஷீணித்துவிடுமடா. நீ இஷ்டப்பட்டு வேணுமென்று தானேடா பண்ணிக்கொண்டாய்? ஒரு பெண்ணின் வயிற்றெரிச்சலை இப்படி நீ கொட்டிக்கொள்ளலாமாடா? பெரியவர்கள் சொல்வதைக் கேளடா. உடனே அனுப்பும்படி கடிதம் போடு' என்று தினம் அவன் இடத்தில் இதே புலம்பல்தான். நேற்று ராத்திரியெல்லாம் எவ்வளவு போதனை பண்ணினேன் என்று அபீதத்தைக் கேளுங்கள். ஏண்டி அபீதம், நான் சொன்னதற்கெல்லாம் அவன் என்ன பதில் சொன்னுனடி?...." என்று தாயார் கேட்டாள்.

"அந்தப் பேச்சை மாத்திரம் என் காதில் போடாதே" என்ருள் அபீதம்.

"கேட்டீர்களா! எப்போ சொன்னுலும் இதே பாடுதான் .ஏன் அவ்வளவு பிடிவாதமோ, எங்களுக்கே தெரியவில்லை. என்றைக்குப் பகவான் கண் திறந்து பார்ப்பாரோ? இவர்களுக்கு நல்ல காலம் வருமோ?" என்று தாயார் ரொம்பவும் பால் வடியப் பேசினுள்.

எந்தப் பிரயத்தனத்திலும் ஒருபலனும் ஏற்படவில்லை. பார்வதியை அழைத்துக்கொண்டு போகும்

ஜாடைகூட அவள் மாமியார் வீட்டிலிருந்து தென்படவில்லை.

இந்த நிலைமைக்குப் பல பேர் வந்து பலவிதமான யோசனைகளைச் சொன்னார்கள்.

"இந்தமாதிரி பொட்டச்சிப் பயல்களை எல்லாம் கோர்ட்டில் இழுத்துச் சந்தி சிரிக்க வைத்தால்தான் சரி. நல்ல சூடு காட்டவேண்டும். நான் ஒரு நோட்டீஸ் கொடுக்கிறேன். அதிலேயே மண்ணைக் கவ்விக் கொண்டு, இங்கு வந்து விழுகிறானா இல்லையா, பாருங்கள்!" என்று அடுத்த வீட்டு வக்கீல் வேதாந்த ராமானுஜாசாரியார் ஆத்திரமாய் யுக்தி சொன்னார்.

"நமக்கு அதெல்லாம் யோக்கியதை அல்ல, ஸார்! ஈசுவரன் எந்த வழி விடுகிறானோ விடட்டும். அவன் ஒரு வழி காட்டித்தானே ஆகவேண்டும்? நான் ஸ்ரீமத் ராமாயண ஸப்த ஸர்க்க பாராயணம் ஆரம்பித்திருக்கிறேன். ஆத்திரப்பட்டால் பின்னாடி நமக்குத்தான் ஸார் அது பாதகம்" என்று சொல்லி, எல்லாம் நடக்கிறபடி நடக்கட்டும் என்று விட்டுவிட்டார் வேங்கட சுப்பையர்.

தன் நிலைமையைப்பற்றி வீட்டிலிருக்கிறவர் சிந்தித்து, தெம்பு குறைந்து கிடக்கிறார்கள் என்று நினைக்கப் பார்வதிக்கு இன்னும் துயரம் அதிகமாயிற்று. அநேக தடவைகள் உயிரையே மாய்த்துக் கொண்டு விடுகிறது என்று வெறுப்பில் தீர்மானித்தாள். எண்ணமிட்டு எண்ணமிட்டு மாமியார் நாத்தனார்கள்பேரில் மட்டுமல்லாமல், புருஷன்பேரிலும் தினம் ஆத்திரம் அவளுக்குப் பொங்கிக்கொண்டிருந்தது.

தற்செயலாகப் பார்வதிக்கு ஓர் அதிருஷ்டம் நேர்ந்தது. அடுத்த வக்கீல் வீட்டுக்கு மிஸ் கார்டர்ஸ் என்று ஒரு கிறிஸ்தவப் பாதிரி மாது வந்து போவ துண்டு. வக்கீல் வீட்டிற்கும் அந்த அம்மாளுக்கும் ரொம்பச் சிநேகம். அந்தச் சமயங்களில் பார்வதியும் அநேக தடவைகள் அவளுடன் பேசி இருக்கிறாள். இவளுக்கும் சிநேகமானாள். இவளைப் பார்ப்பதற்கும் மிஸ் கார்டர்ஸ் வருவாள். இவளுடைய யோக க்ஷேமங்களையும் புருஷன் வீட்டு விஷயங்களையும் அவள் விசாரிப்பாள். அவளிடத்தில் நிஜத்தைச் சொல்லாமல், "எனக்கு உடம்பு கொஞ்சம் சரியாயில்லை. சரிப்பட்டவுடன் புருஷன் வீட்டுக்குப் போய்விடுவேன்" என்று சொல்லி வந்தாள். அடுத்த வீட்டுப் பெண்களால் மிஸ் கார்டர்ஸுக்கு நிஜம் தெரிந்தது.

"எனக்கு எல்லாம் தெரியும். என்னிடத்தில் விஷயத்தை எல்லாம் சொல்லம்மா. உனக்காக நான் ஏசு நாதனுக்குப் பிரார்த்தனை செலுத்துகிறேன். என்னால் உனக்கு ஆறுதலை ஏற்படுத்தக் கூடுமானால் முயலுகிறேன்" என்று பரிவான குரலில் வெகு பக்ஷமாய்க் கேட்டாள்.

மிஸ் கார்டர்ஸ் பேசின மாதிரியில் அவள்பேரில் பார்வதிக்கு அன்பு ஏற்பட்டு அவளுடைய நிலைமை பூராவையும் ஒன்றுவிடாமல் சாங்கோபாங்கமாய்க் கூறிக் கண்ணீர் விட்டாள்.

"உங்கள் புருஷன் என்ன செய்கிறார்?"

"போர்டாபீஸில் வேலையா யிருக்கிறார். இப்போ எழுபத்தைந்து ரூபாய் சம்பளம்."

"போர்டாபீஸிலா? எந்த டிபார்ட்மெண்டில்?"

"எனக்குத் தெரியாதே. உங்கள் பேர்கொண்டவர் யாரோ ஒருவர் ஸெக்ரிடெரியாய் இருக்கிருராம். அவர் கீழ்தான் வேலே செய்கிருர்."

"கார்டர்ஸ் கீழா? அப்படியா? நல்லது! நான் உன் விஷயத்தை யோசனை செய்கிறேன். ஆண்டவனை நம்பு. அவர் நம்பினவரைக் கைவிட மாட்டார். மனிதர்கள் ஈடேறுவதற்காகவே அவர் சிலுவையில் மரித்தார்" என்று சொல்லிவிட்டு, மிஸ் கார்டர்ஸ் போய்விட்டாள்.

ஸெக்ரிடெரி கார்டர்ஸ் என்பவர் நாம் வழங்கும் முறையில் பாதிரி மிஸ் கார்டர்ஸுக்கு ஒன்று விட்ட தம்பியாகவேண்டும். கார்டர்ஸ் குடும்பம் சீமையில் மரியாதைப்பட்ட குடும்பம். மதப்பற்று அதிகமாயிருந்தபடியால் மிஸ் கார்டர்ஸ் பாதிரியாளுள்! தம்பி ஐ. ஸி. எஸ். ஆக இந்தியாவில் வேலேக்கு வந்தார்.

வீட்டுக்குப் போனவுடன் மிஸ் கார்டர்ஸ் பார்வதிக்கு நடந்திருக்கும் அநியாயத்தைப்பற்றித் தம்பிக்குப் பன்னிரண்டு பக்கங்கள் அடங்கிய நீண்ட ஒருகடிதத்தை எழுதி,ஸபேசனைக்கூட வரவழைத்துப் புத்திமதி சொல்லும்படியாகக் கேட்டுக்கொண்டாள். பார்வதியின் பொறுமையையும் ஸாத்துவிக குணத்தையும் புகழ்ந்து கடிதத்தில் எழுதியிருந்தாள். அது விஷயமாக ரொம்பவும்அக்கறையுடன் கவனிப்பதாகத் தம்பியிடத்திலிருந்து அவளுக்குப் பதிலும் வந்திருந்தது. அது விஷயத்தை மிஸ் கார்டர்ஸ் பார்வதியிடம் சொல்லிவிட்டு அன்றிரவே கோடைக்கானலுக்குப் போய்விட்டாள்.

போர்டாபீஸிலிருந்து வெளியூர்களுக்கு நான்கு பேர்களைப் பொறுக்கி ஸப் மாஜிஸ்திரேட்டுகளாக

அனுப்பப் போவதாக ஒரு வதந்தி இருந்தது. தன்னைச் சிபார்சு செய்யும்படி கேட்பதற்காக ஸபேசன் ஸெக்ரிடெரி கார்டர்ஸிடம் போகவேண்டிய சந்தர்ப்பம் நேர்ந்தது. அதைக் கார்டர்ஸ் பயன்படுத்திக் கொண்டார்.

"எந்த ஜில்லாவுக்குப் போக உங்களுக்கு இஷ்டம் ஸபேசன்?" என்று கேட்டார் கார்டர்ஸ்.

"எந்த ஜில்லாவுக்குப் போட்டாலும் போகிறேன், ஸார்!" என்றான் ஸபேசன்.

"உம். உங்களுக்குக் கல்யாணமாகி யிருக்கிறதா?" என்று ஒன்றும் தெரியாதவர்போல் கார்டர்ஸ் விசாரித்தார்.

"ஆயிருக்கிறது."

"குழந்தை உண்டா?"

"இல்லை."

"பெண்ஜாதி உங்களோடுதான் இருக்கிறாளா?"

"ஆமாம்."

"இப்பொழுது இருக்கிறாளா?"

"இருக்கிறாள்."

"வேறு தப்பாய் நினைத்துக் கொண்டுவிடாதீர்கள். என் பெண்ஜாதி சில மத்தியதர ஹிந்து குடும்பங்கள் வசிப்பதை நேரில் போய்ப் பார்க்கவேண்டும் என்று ஆசைப்படுகிறாள். நம் ஆபீஸில் இருப்பவர்களில் உங்கள் குடும்பம், வேதாசல முதலியார் குடும்பம், கேதாரி ராவ் குடும்பம் இந்த மூன்றையும் போய்ப் பார்த்துவிட்டு வர ஏற்பாடு செய்யலாம் என்று உத்தேசித்து உங்களுடைய சௌகரியத்தைக் கேட்கலாம் என்றிருந்தேன். நீங்களே வந்தீர்கள்" என்றார்.

"கட்டாயம் வந்து பார்க்கவேண்டும். அவர் வரவு எனக்குப் பெருமையைத் தரத்தக்கது. வீட்டில் என் தாயாரும் தமக்கையுங்கூட இருக்கிருர்கள்."

"உங்கள் சம்சாரந்தானே வீட்டு எஜமானி? அவள்தானே வரவேற்க வரவேண்டும்? இன்னும் ஒரு வாரம்பத்துத் தினங்களில் உங்களுக்குச் சௌகரிய மான தினத்தைத் தெரியப்படுத்தினீர்களாளுல் என் மனைவியை அன்று வரும்படி ஏற்பாடு செய்கிறேன். உங்களை வெளியூருக்கு அனுப்புவதைப்பற்றி யோசனை செய்கிறேன். அது விஷயமாய் ஆபீஸில் அநேகம் பேர் என்னை வந்து பார்த்துவிட்டுப்போய் இருக்கிருர்கள். உங்களுடைய கேஸையும் கவனத்தில் வைத்துக்கொண்டிருக்கிறேன். ஆனல் ஒரு வாக்குறுதியும் கொடுக்க முடியாது. தாங்கள் போய்வாருங்கள்" என்ருர் ஸெக்ரிடெரி.

அன்று சாயங்தரம் பார்வதியை உடனே கொண்டு வந்துவிடும்படியாக வேங்கடசுப்பையருக்கு ஸபேச னிடமிருந்து தந்தி வந்தது.

"நல்ல காலம் பிறந்துவிட்டாப்போலிருக்கிறதடி பார்வதி! ராமாயண பாராயணம் வீண் போகுமா? ராத்திரி புறப்படுவோம்" என்ருர் வேங்கட சுப்பையர்.

"ஏதுக்காகப் புறப்படுகிறது? நான் வரவேண்டு மென்ருல் தந்தி என்ன? வந்து அழைத்துக்கொண்டு போகட்டுமே?" என்ருள் பார்வதி.

5

## அதிகார மாற்றம்

பெரிய மனுஷ்யர்கள் வீட்டுப் பெண்மக்களை அடிக்கடி போய்ப் பார்ப்பது, அவர்களுடன் உறவு கொண்டாடுவது, அவர்களுடைய சிநேகத்தைப் பற்றிப் பெருமை யடித்துக்கொள்வது இவைகளே அவயம், அபீதம் இவர்களுடைய வாழ்க்கையின் முதன்மையான உற்சாகங்களாயிருந்தன. அவர்கள் வீட்டிற்கு போர்டு ஸெக்ரிடெரி ஐ. ஸி. எஸ். ஆபீஸ ரின் பெண் ஜாதியே வரப்போகிருள் என்ருல் அவர் களுடைய பெருமை கட்டுக்கு அடங்குமா? அன்று சாயந்தரமே திருவல்லிக்கேணியிலுள்ள சிநேகிதிகளி டத்தில் எல்லாம் இந்த நற்செய்தியைப் பரப்புவதற் காக அ வ ர் க ள் 'ஸ்பெஷல்' சுற்றுப் பிரயாணம் கிளம்பினுர்கள்.

"நம்மவர்களாக இருந்தால் அவர்களுக்குத் தக்க படி உபசாரம்செய்ய நமக்குத் தெரியும். வெள்ளைக் கார துரைசாணி வந்தால் நாம் என்ன அம்மா செய்ய வேண்டும்? கம்பெனியிலிருந்து 'கேக்' வகையரு வரவழைத்துவிடலாம் என்கிருன் ஸபேசன். டீ அவர்களுக்கு ஏதோ வேறு விதமாய்ப் போடவேண்டு மாமே? ஏனம்மா? நாம் வெள்ளி டம்ளரில் டீ கொடுத் தால் என்ன? டீ கப்பில்தான் கொடுக்க வேண்டும் என்கிருனே ஸபேசன்! நம்ம வீட்டில் ஆயிரம் ஆயிரத் தைந்நூறு ரூபாய் வெள்ளிப் பாத்திரங்கள் கிடக்க, சைனு 'கப்' என்ன அம்மா?"

"கவர்னர் பெண்ஜாதி முன்னே ஒரு தரம் நம் ஜாதிப் பெண்மணிகளுடன் ஸ்நேகம் கொண்டாட

வேண்டுமென்று வந்திருந்தாளே. அப்பா, 'அவயத்துக் குத்தான் எல்லாம் தெரியும்' என்று என்னைத்தானே எல்லோருமாய்ச் சேர்ந்து முன் நிறுத்தினார்கள்? அப்போ எல்லாம் நம் பக்ஷணங்களாகவே செய்துவைத் தேன்; நம் வெள்ளிப் பாத்திரங்களில்தான் டீ கொடுத் தேன். அதைக் கண்டு கவர்னர் பெண்ஜாதியே ரொம்ப சந்தோஷப்பட்டாள். அதைத்தான் அவள் ரொம்பவும் கோரியதாக மகிழ்ந்தாள். இப்போது கூட அந்த மாதிரியே செய்துவிடலாம் என்று என் எண்ணம். கம்பெனியிலிருந்து ஒரு 'பட்லர்'ரையும் வரவழைத்துவிட வேண்டும் என்கிறான் ஸபேசன். ஏதுக்கம்மா?'' என்று இம்மாதிரி தோரணையிலேயே ஒவ்வொரு வீட்டிலும் பேசிவந்தாள்.

"ஸெக்ரிடேரி பெண்ஜாதி வருவதற்கு இப்போ என்ன விசேஷம்?''

"ஒரு விசேஷமுமில்லை. வெறும் சிநேக பாவம் தான். ஸபேசன் பேரில் ஸெக்ரிடேரிக்கும் அவர் பெண்ஜாதிக்கும் ரொம்பப் பிரியம். அவனை முன்னுக் குக் கொண்டுவர வேண்டுமென்று நூற்றைம்பது ரூபாய் சம்பளத்தில் வெளி ஊரில் ஸப் மாஜிஸ்திரேட் டாய்ப் போகச் சொல்லி அவனை அவர்கள் நிர்ப்பந்தப் படுத்துகிறார்கள். இருக்கிற சிநேகிதர்களை எல்லாம் விட்டுவிட்டு வெளியூருக்குப் போக எனக்குக் கொஞ் சங்கூட இஷ்டமில்லை. எங்கே போனாலும் சென்னப் பட்டணமாகுமா, அம்மா? நான் ஸர்விஸில் இருப்ப தற்குள் உன்னை முதல் கிரேட் டிப்டி கலெக்டராக வாவது ஆக்கிவிட்டுப் போக வேண்டுமென்று இருக்கி றது'' என்கிறாராம் ஸெக்ரிடேரி. எல்லாம் அவர் பெண்ஜாதி சிபார்சு. பட்டணத்திலேயே உயர்ந்த

வேலை கொடுக்கும்படியாக ஸபேசனைக் கேட்கச் சொல்லியிருக்கிறேன். என்ன நடக்குமோ!'' என்று மேலும் இவ்விதமாக வேறு பெருமை யடித்துக் கொண்டாள்.

பார்வதியின் பெரிய தாயார் வீட்டுக்குப் போய் எல்லாவற்றையும் வெகு பெருமையாய்ச் சொன்னாள்: "என்னமோ ஈசுவரன் புண்ணியத்திலே ஸபேசனுக்கும் பார்வதிக்கும் நல்ல காலம் பிறக்கிறாப் போலிருக்கிறது. அவனை ஸப் மாஜிஸ்திரேட்டாய் வெளியூருக்குப் போகவேண்டு மென்கிறார்களாம். கூடிய சீக்கிரத்திலேயே டிப்டி கலெக்டராக ஆக்கிவிடவேண்டும் என்று ஸெக்ரிடெரியே கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறாராம். அவர் சம்சாரந்தான் மேல வாரம் நம் வீட்டுக்கு வருகிறாளே: நானும் ரொம்பவும் கேட்டுக் கொள்ள மாட்டேனா? அந்த அம்மாள் வருகிறபோது பார்வதியும் இங்கே இருக்கவேண்டுமென்று எனக்கும் அபீதாவுக்கும் ரொம்ப ஆசை. அதைச் சொன்னால் என்ன சொல்வாளோ என்று பயந்து கொண்டிருந்தோம். 'சரி வரட்டும், இன்றைக்கே தந்தி கொடுத்து விடுகிறேன்' என்றாள். அந்த மட்டும் ஈசுவரன் இப்பொழுதாவது அவனுக்கு நல்ல புத்தியைக் கொடுத்தானே என்று எனக்குச் சந்தோஷம். தந்தி கொடுக்கிறேன் என்றான். அப்புறம் கொடுக்கிறானோ இல்லையோ! அவன் சித்தத்தை யார் கண்டா?'' என்றாள் அவயம்.

ஆனால் வீட்டில் எவ்வளவோ ஆக்ஷேபணை சமாதானங்கள் நடந்துதான் பார்வதிக்குத் தந்தி கொடுக்கப்பட்டது. பார்வதி இருக்கவேண்டும் என்று ஸெக்ரிடெரி சொன்ன அபிப்பிராயத்தை ஸபேசன்

சொன்னான். "அவள் இல்லாவிட்டால் என்ன? நாங்களெல்லாம் பொம்மனாட்டிகள் இல்லையா?" என்று தாயாரும் பெண்ணும் கேட்டார்கள்.

"அது வெள்ளைக்கார ஜாதி வழக்கம், அம்மா. ஒருவன் வீட்டுக்குப் போவதானால் அவன் பெண் ஜாதியைத்தான் அவர்கள் எஜமானியாகக் கருதுவார்கள். தாயார், அக்கா வீட்டில் இருந்தால்கூட அவர்களை அந்த வீட்டில் தங்கி இருப்பவர்களைப் போல்தான் பாவிப்பார்கள். 'பெண்ஜாதி வீட்டில் இருக்கிறாளா?' என்று ஸெக்ரிடெரி கேட்டபோது, 'இருக்கிறாள்' என்று சொல்லி வைத்தேன். இப்போ ஸெக்ரிடெரி நம்பேரில் தயவாய் இருக்கிறார்; அவர் தயவு நமக்குக் கடைசி வரைக்கும் வேண்டியிருக்கிறது. அந்தச் சமயத்துக்காவது அந்தச் சனி வந்திருந்து தொலைந்தால் அப்புறம் பார்த்துக்கொள்வோம். வேறு வழியில்லையே!" என்றான் ஸபேசன்.

வேண்டா வெறுப்பாய்ப் பார்வதியை உடனே தந்தியடித்து வரவழைக்கிறது என்று தீர்மானித்தார்கள்.

பார்வதி இங்கு வருவதற்குக் காலத் தட்டிக் கொண்டிருந்த காலம் மலை ஏறிவிட்டது என்று அவயம் கண்டவளல்ல. பிறந்த வீட்டிற்கு வந்த நான்கு ஐந்து மாதங்கள் பார்வதி புருஷனோடு இருக்க ஆவல் கொண்டு மனம் நொந்து கிடந்தாள். தன்னுடைய கதியையும், மாமியார் வீட்டு அக்கிரமத்தையும் ஸதா எண்ணமிட்டிருந்தவளாய் அவள் மனத்தில் ரோஷமும் ஆத்திரமும் துணிச்சலும் நாளடைவில் அதிகப்பட்டுக் கொண்டு வந்தன. "பெண்ணைப் பிறந்துவிட்டதனாலேயே துஷ்ட மாமியாரின் கைக்

கிழிருந்து அல்லல்பட வேண்டுமென்று இருக்கிறதா? கையாலாகாத அசட்டுப் புருஷனோடு வாசம் பண்ணித் தான் ஆகவேண்டுமென்று இருக்கிறதா? எல்லாம் சௌகரியமாய் வந்தால் போயிருக்கிறோம்; இல்லா விட்டால், தனியாய்த்தான் இருந்துவிட்டால் போச்சு. எத்தனை பெண்கள் அம்மாதிரி இல்லை?" என்கிற தோரணையில் அவள் புத்தி நாளடைவில் சென்று அவள் மனத்தில் பலவிதமான உறுதிகளும் துணிச் சலும் ஏற்பட்டுக்கொண்டு வந்தன.

தந்தி வந்ததல்லாமல் மறுநாள் பெரியதாயாரிடத்தி லிருந்து பார்வதியின் மாமியார் அவளிடத்தில் சொன்ன விவரங்களை எல்லாம் விரிவாகக் கண்டு ஒரு கடிதமும் வந்தது. ஸெக்ரிடெரி துரை மும்முரமாய் வேலை செய்ய ஆரம்பித்துவிட்டாப் போலிருக்கிறது என்று ஊகித்து, புருஷனையும், மாமியார் நாத்தனாரையும் ஆட்டங் காட்ட இதுதான் நல்ல சமயம் என்று தீவிரங்கொண்டாள். ஒருவரை அதிகமான ஹிம்ஸைக்கு உட்படுத்தினால் வெறுப்பில் அவர்கள் மன நிலை இப்படித்தான் திரும்பும்.

தந்தியடித்த பிறகு இரண்டு தினங்கள் வரையில் பார்வதி வருவாள் என்று ஸபேசன் வீட்டார் எதிர் பார்த்தார்கள். அவளும் வரவில்லை; அவள் வீட்டி லிருந்து ஒரு கடிதமும் வரவில்லை. இதற்குள் ஸெக்ரி டெரி ஸபேசனைக் கூப்பிட்டு வேதாசல முதலியாரும் கேதாரிராவும் அடுத்த வியாழக்கிழமை அவர்களுக்குச் சௌகரியப் படுமென்று தெரிவித்ததாகச் சொல்லி ஸபேசனுக்கும் அந்தத் தினம் சௌகரியப் படுமா என்று கேட்டார். பார்வதி வந்துவிடுவாள் என்கிற

நிச்சயத்தில் தனக்கும் சௌகரியப்படும் என்று ஸபேசன் தெரிவித்துவிட்டான்.

இரண்டு தினங்களாயும் பார்வதியிடத்திலிருந்து ஒரு தகவலும் வராததால் ஸபேசன் மனது ரொம்பச் சங்கடப்பட்டுவிட்டது.

நேரில் போயாவது அழைத்து வந்து விடுவதென்று தாயாரிடமும் அக்காவிடமும் கேட்டுக் கொண்டு ஸபேசன் ரெயிலேறி மாமனார் வீடு போய்ச் சேர்ந்தான். இரவு எட்டு மணி இருக்கும். தெருக் கதவு போட்டிருந்தது. வேங்கடசுப்பையரும் மற்றக் குழந்தைகளும் உள்ளே சாப்பிட்டுக்கொண் டிருந் தார்கள். பார்வதி தெருப் பக்கம் ரூமில் தகப்பனார் படுப்பதற்காகப் படுக்கையைத் தட்டிப் போட்டுக் கொண்டிருந்தாள். ஸபேசன் கதவைத் தட்டினான்.

"யார் அது?" என்று தெரு ஜன்னல் பக்கமாய்ப் பார்வதி கேட்டாள்.

"நான்தான் பார்வதி, கதவைத் திற" என்றான் ஸபேசன்.

"எங்கு வந்தீர்கள்? என்ன விஷயம்?" என்று ஜன்னல் உள்ளிருந்தே பார்வதி விறைப்பாய்க் கேட்டாள்.

"என் தந்தி வரவில்லை?"

"வந்தது."

"பின்னே ஏன் நீ வரவில்லை?"

"வரவேண்டும் என்கிற எண்ணமிருந்தால்தானே வருவதற்கு?"

"கதவைத் திற!"

"எதற்காகக் கதவைத் திறக்கிறது?"

"திறவேன், சொல்லுகிறேன்."

"நானும் திறக்கவில்லை, நீங்களும் ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை."

"அப்பொழுது நான் போகலாமா?"

"குசாலாய்ப் போய்வரலாம்."

இந்த வாக்குவாதம் நடந்துகொண்டிருக்கையில் வேங்கடசுப்பையர் சாப்பிட்டுக் கையலம்பிவிட்டு வெளியே வந்தார்.

"யாரடி வாசலில்?" என்றார். பார்வதி வாயைத் திறக்கவில்லை. தெருக் கதவைத் திறந்து பார்த்தார். "அடே! அடே! ஸபேசனா? வா, அப்பா, ஏண்டி பார்வதி, கதவைத் தட்டினால் கதவைத் திறக்காமல் என்னடி பண்ணிக்கொண்டிருக்கிறாய்? இந்த ரெயிலிலா வந்தாய்? உள்ளே வா, சட்டையைக் கழட்டிவை. சாப்பிடப் போகலாம். அடே குஞ்சு! அம்மாவிடத்தில் போய்ச் சொல்லி மாப்பிள்ளைக்கு இலை போடச்சொல்" என்று வேங்கடசுப்பையர் ரொம்பவும் உபசாரம் செய்தார்.

ஸபேசன் பிரமை பிடித்தவன் போல் நின்றான். கொஞ்சமும் எதிர்பாராத விதமாய்ப் பார்வதி காட்டிய அலட்சியத்தில் ஆள்குன்றிவிட்டான். அவன் இருக்கும் இடத்தில் பார்வதி எட்டிக்கூடப் பார்க்கவில்லை.

தனக்கு நேர்ந்திருக்கும் அதிருஷ்டத்தை மாமனாரிடம் சொல்லி, பார்வதியை அழைத்துக்கொண்டு போக வந்திருப்பதாகத் தெரிவித்தான். "நடந்ததை எல்லாம் மறந்துவிடுங்கள். இனி அம்மாதிரி ஒன்றும் நடக்காது" என்று வெகு விநயமாய் உறுதி கூறினான்.

"கட்டாயம் அழைத்துக் கொண்டு போங்கள். எனக்கு ரொம்ப சந்தோஷம். நானே அழைத்து வருவதாகத்தான் இருந்தேன். பார்வதிதான் ஏதோ

முரட்டுத்தனம் பண்ணிக்கொண்டிருந்தாள்" என்றார் வேங்கட சுப்பையர்.

தன்னுடன் வரும்படி அன்றிரவு பூராவும் தனிமையில் பார்வதியுடன் மன்றாடிப் பார்த்தான்.

"என்ன சொன்னாலும் நான் வரமாட்டேன். என்னை வெளியில் துரத்தினவர்கள் இங்கு வந்து என்னை மன்னிப்புக் கேட்டுக்கொண்டு அழைக்கட்டும். உங்கள் பேரில் எனக்கு ஒரு குரோதமும் இல்லை. நீங்கள் வேண்டுமானால் இங்கு வந்துபோய்க் கொண்டிருங்கள்" என்று தீர்மானமாய்ச் சொல்லிவிட்டாள்.

ஸபேசன் தனிமையில்தான் பட்டணம் திரும்பினான்.

"அடேயப்பா! ஆணவமும் கர்வமும் கொஞ்சமாய்த்தான் இருக்கிறது! புருஷனோடு இருக்கப் போகிறதில்லையாமோ? என்ன செய்யப் போகிறாளாம்? அவள் மகா கர்வி, புருஷனோடு வாழவேண்டுமென்கிற ஆசையே அவளுக்கு இல்லை என்று நான் சொன்னது சரியாய்ப் போய்விட்டதா? காறித் துப்பிவிட்டுப் போ, அவ்வளவுதான்" என்று தாயாரும் அக்காவும் ஆத்திரமாக இரைந்தார்கள்.

பார்வதியின் தகப்பனாருக்குப் பிராண ஆபத்தாயிருப்பதாகத் தந்தி வந்து தன் பெண் ஜாதி திடீரென்று போகவேண்டி வந்துவிட்டதாகவும், தன் தாயாரும் தமக்கையும் வீட்டிலிருப்பதாகவும், துரைசாணி அம்மா கட்டாயம் வியாழக்கிழமை வரவேண்டுமென்றும் ஸபேசன் ஸெக்ரிடெரியிடம் போய்க் கேட்டுக்கொண்டான்.

"அவள் கோடைக்கானல் போய்வந்த பிறகு

பார்த்துக்கொள்ளலாம். தாங்க்ஸ்!'' என்ருர் ஸெக்ரிடெரி அஸ்வாரசியமாய்.

வியாழனன்று ஸெக்ரிடெரியின் பெண்ஜாதி வேதாசலமுதலியார் வீட்டிற்கும் கேதாரிராவ்வீட்டிற்கும் போய் வந்ததாகப் பிறகு ஸபேசனுக்குத் தெரிய வந்தது. அதற்கப்புறம் கொஞ்ச தினங்களுக்கெல்லாம் அவர்கள் வெளியூர்களில் ஸப் மாஜிஸ்திரேட்டுகளாகப் போகச் சிபார்சு செய்யப்பட்டிருக்கிருர்கள் என்றும், தான் சிபார்சு செய்யப்படவில்லை என்றும் ஸபேசன் அறிந்தான். தன்னையும் சிபார்சு செய்யும்படியாகக் கேட்டுக்கொள்வதற்காக மறுபடி ஒரு தரம் ஸெக்ரிடரியிடம் போனுன்.

''உங்களையுந்தான் சிபார்சு செய்திருப்பேன், ஸபேசன்! ஆனல் அந்த வேலைக்கு நீங்கள் லாயக்கில்லை என்று எனக்குப் பட்டது. அந்த உத்தியோகத்திலிருப்பவன் ஒருவருக்கும் பயப்படாதவனுகவும், சொல்வார் பேச்சைக் கேட்காதவனுகவும், நியாயத்தையே கடைப்பிடிப்பவனுகவும் இருக்கவேண்டும். தாயார் பேச்சைக் கேட்டுக்கொண்டு பெண்ஜாதியை அடித்துத் துரத்தினவன்—'இமிடேஷன்' நகையைப் போட்டுக்கொண்டு வரும்படி தானே தாயாருக்குப் பயந்து சொல்லி, அதை ஒப்புக்கொள்ளத் தைரியமில்லாமல் பெண்ஜாதியைக் கைவிட்டவன் அந்த வேலைக்கு லாயக்கானவனு? நீங்களே சொல்லுங்கள்!'' என்ருர் ஸெக்ரிடெரி.

ஸபேசனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. பொருமையினுல் ஆபீஸில் யாரோ ஸெக்ரிடெரியிடம் போய்க் கோள் சொல்லியிருக்கிருர்கள் என்று நினைத்தான். ஸெக்ரிடெரிக்கு எல்லாம் தெரிந்துவிட்டிருக்

இறபடியால், கண்ணில் நீர்ததும்ப அவரிடம் நிஜத்தை ஒப்புக்கொண்டு, நடந்ததையெல்லாம் சொன்னான்.

"உங்கள் குடும்ப விஷயத்தைப் பற்றி எனக்கு ஒரு அக்கறையுமில்லை, போய் வாருங்கள்" என்று மேலும் பேச்சுக்கு இடம் கொடுக்காமல் ஸெக்ரிடெரி ஸபேசனை அனுப்பிவிட்டார். ஸெக்ரிடெரி தன் பேரில் கொண்டிருக்கும் அதிருப்தி ஸபேசன் மனத்தை வருத்தியது. அதை மனத்தில் வைத்துக் கொண்டு அவர் மேலும் என்ன தீங்கு செய்வாரோ என்றும் பயந்தான். அன்றுமுதல் வீட்டில் அவன் கலகலப்பாகவே இருக்கவில்லை. தாயார் என்ன சொன்னாலும் கெஞ்சிக் கூத்தாடியாவது பார்வதியை அழைத்துக்கொண்டு வந்துவிட வேண்டுமென்று ரொம்பவும் தீவிரமாக இருந்தான்.

ஸெக்ரிடெரியின் பெண்ஜாதி கோடைக்கானல் போய் பாதிரி கார்டர்ஸ் இடத்தில் நடந்ததை எல்லாம் வேடிக்கையாகச் சொல்லிச் சிரித்தாள். பார்வதி செய்தது ரொம்பவும் பிசகென்றும், புருஷன் வந்து கூப்பிட்டபோது அவள் போயிருக்கவேண்டும் என்றும் பிறர் எவ்விதமான தப்பு செய்திருந்த போதிலும் மன்னித்து அன்பு காட்டவேண்டியதுதான் ஜீவகோடிகளின் தர்மம் என்றும், அதைத்தான் இயேசு கிறிஸ்து போதித்தார் என்றும் நீண்ட ஒரு கடிதம் பாதிரி கார்டர்ஸிடத்திலிருந்து பார்வதிக்கு வந்தது. புருஷன் மறுபடி வந்து கூப்பிட்டால் போகவேண்டியதுதான் என்று திட எண்ணங்கொண்டாள்.

கொஞ்ச தினங்களுக்கெல்லாம் புருஷனும் வந்தான். பிகுவை அதிகமாகத் தளர்த்திவிடாமல் அவனுடன் புறப்பட்டுப் பார்வதி சென்னப்பட்டணம்

வந்துசேர்ந்தாள். வருகிற வழியில் தான் மாமியார் வீட்டில் இனி நடந்துகொள்ள வேண்டிய முறையை ரொம்பவும் சிந்தித்துத் திடப்படுத்திக் கொண்டாள். "கொட்டினல் தேள்! கொட்டாவிட்டால் பிள்ளைப் பூச்சி. வீட்டில் அவர்களுக்கு என்ன அதிகாரம்? நாம் அதிகார தோரணையிலிருந்து அவர்களை அடக்க வேண்டும். நம் சொரூபத்தைக் காட்டினல்தான் அவர்கள் அடங்குவார்கள். எதற்காகப் பயப்பட வேண்டும்? வந்த சண்டை வரட்டும், சல்லிஸா இல்லாவிட்டால் அவர்கள் வெளிப் போகிருர்களா, நான் போகிறேனு பார்ப்போம்" என்று சபதம் செய்து கொண்டாள்.

வீட்டிற்கு வந்ததும் அதிகார தோரணையோடு உள்ளே நுழைந்தாள். புருஷன் ஜட்கா வண்டிக்காரனேடு ஏதோ சண்டை போட்டுக்கொண்டிருந்தான்.

"அவனேடு சண்டை என்ன? ஒரு அணு விட்டெறிந்தால் போகிருன். ஓரணு கொடுத்தனுப்புங்கள்" என்று பார்வதி உள்ளிருந்து இரைந்தாள்.

"அம்மா, சௌக்கியமா யிருக்கிறீர்களா? அக்கா, சௌக்கியமா யிருக்கிறீர்களா? நீங்கள் அடித்துத் துரத்திவிட்டாலும் நான் மறுபடி வந்துவிட்டேன்" என்ருள். அவர்களுக்கு நமஸ்காரம் செய்யவில்லை.

"ரெயிலில் அசாத்தியக் கூட்டம். ரொம்ப அலுப்பாய் இருக்கிறது. சீக்கிரம் சாதம் போட்டீர்களானல் சாப்பிட்டுவிட்டுக் கொஞ்சம் படுத்தால்தான் உடம்பு சரிப்படும்" என்ருள்.

பார்வதி போடும் தடபுடல் தோரணையைக் கண்டு தாயாரும் அக்காளும் பிரமைகொண்டு மலைத்து நின்றுவிட்டார்கள். அதோடேயே அவர்கள் இடுப்பு

ஒடிந்துவிட்டது. மறுநாளே வீட்டு அதிகாரத்தைப் பார்வதி தானுகவே எடுத்துக்கொண்டுவிட்டாள்.

"சாப்பிட்டுவிட்டு நான் பெரியம்மா வீட்டுக்குப் போய் வரப்போகிறேன், அம்மா! வர சாயந்திரம் நாலு மணியாகும். அதற்குள் பால்காரன் வந்தால் ஒரு ஆழாக்கு கூட வாங்கிவையுங்கள்" என்ருள்.

குடும்பம் இந்த ரீதியில் கொஞ்சநாள் நடந்துவந்ததில் அவயத்துக்கும் அபீதத்துக்கும் இதுவே சகஜமாய்விட்டது. இப்பொழுது அவயமும் அபீதமும் பார்வதியைத் தினம் முகஸ்துதி செய்து வருவதற்கு அளவே இல்லை. அதுதான் நல்லபடி பிழைப்பதற்கு வழி என்று கண்டுகொண்டார்கள்.

முற்றும்

# கைமேல் பலன்

## 1

### லீவு லெட்டர்

தேவநாதன் தென்னார்க்காடு ஜில்லாவில் டிப்டி கலெக்டராக இருந்தான். அவன் ஆபீஸில் ராமரத்னம் என்ற ஒரு குமாஸ்தா இருந்தான். ராமரத்னத்துக்கு ஆறு வருஷ 'ஸர்விஸ்' ஆகியிருந்தது. பஞ்சப்படி உள்பட மாதம் எண்பது ரூபாய் சம்பளம் வாங்கிக்கொண்டிருந்தான். குடும்பம் சிறு குடும்பந்தான். அவன், அவன் மனைவி, மூன்று வயதில் ஒரு பிள்ளை ஆகிய மூவர் அடங்கியதே. இருந்தாலும் இந்தக் காலத்தில் எண்பது ரூபாய் சம்பளத்தில் எப்படிக் கஷ்டமும் கடனும் இல்லாமல் குடித்தனம் செய்யமுடியும்? விதியை வெறுத்துக்கொண்டு பொறுமையுடன் ராமரத்னம் வேலை செய்து வந்தான்.

அவன் பெண்ஜாதி பாமா என்பவளுக்கு வயது இருபத்திரண்டு இருக்கும். மிகவும் பொறுமை வாய்ந்தவள். அவள் தகப்பனுருக்குத் தஞ்சாவூர் ஜில்லாவில் முனிஸிபாலிடியில் 'ஸானிடெரி இன்ஸ்பெக்டர்' வேலை. அவர் குடும்பமும் கஷ்டக் குடும்பம். இரண்டுமூன்று பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண் டிருந்தார்கள். பாமா தங்கைகள் இருவர் கல்யாணத்துக்குத் தயாராயிருந்தார்கள். அவருக்குச் சம்பளம் ரூபாய் நூற்றுமுப்பது வந்துகொண்டிருந்

தது. ஆனால், சொந்த வீடு இருந்தது. பூஸ்திதியி லிருந்து வருஷத்திற்கு வேண்டிய நெல் வந்துகொண் டிருந்தது. ஏதோ ஒரு மாதிரியாக கௌரவமாகவே ஜீவித்து வந்தார்.

ராமரத்னத்துக்கு மாமனார் வீட்டாரைத் தவிர மக்கள் மனுஷியர்கள் ஒருவருமில்லை. சில காலமாக அவன் மனைவி பாமா நோய்வாய்ப் பட்டிருந்தாள். புருஷனுக்குச் சமையல் செய்து போட்டுக் குழந் தையைக் கவனித்துக்கொண் டிருப்பதே அவளுக்கு வெகு கஷ்டமாக இருந்தது. சிறிது நடந்தால் மேல் மூச்சு வாங்கும் நிலைமையில் அவள் இருந்தாள். புருஷனும் அவ்வளவாகத் திடசாலியாக இல்லாததால் அவனை விட்டுவிட்டுப் பிறந்தகம் போகவும் அவளுக்கு மனம் இடங்கொடுக்கவில்லை. வீட்டுக்கு வேண்டிய தண்ணீரைக் காலையில் புருஷன் கிணற்றிலிருந்து சேந்திப் பாத்திரங்களில் நிரப்பிவிடுவான். அவள் உட்கார்ந்தபடியே அதிகமாக உடம்பை அலட்டிக் கொள்ளாமல் அவனுக்குச் சமையல் செய்து போட்டுக் கொண்டிருந்தாள். நாளடைவில் அதுவும் முடியாமல் போய்விட்டது. படுத்த படுக்கையாய் விட்டாள். அவளுடைய தகப்பனார் 'ஸானிடெரி இன்ஸ்பெக்ட'ருக்கு ராமரத்னம் கடிதம் போட்டு அவர் வந்து பாமாவையும் குழந்தையையும் தஞ்சாவூருக்கு அழைத் துக்கொண்டு போய்விட்டார். ராமரத்னம் ஹோட்டலில் சாப்பிட்டுக்கொண்டிருந்தான்.

நாளுக்கு நாள் பாமாவின் வியாதி அதிகரித்துக் கொண்டு வருவதாகவும், அவள் எடை தொண்ணூற் றெட்டுக்கு இறங்கிவிட்டிருப்பதாகவும், ஆகாரமும் சரியாய்ச் செல்வதில்லை என்றும் ராமரத்னத்திற்கு

அவ்வப்பொழுது கடிதங்கள் வந்து கொண்டிருந்தன. நடுவில் இரண்டொரு தரம் ராமரத்னம் அவளைப் போய்ப் பார்த்துவிட்டு வந்தான். பிழைப்பாள் என்கிற தைரியம் அவனுக்குக் குறைந்துகொண்டே வந்தது. நோய் அதிகமாய்ப் போய்விட்டபடியால் அவளைத் தஞ்சாவூர் ஆஸ்பத்திரியில் சேர்த்துவிட்டிருப்பதாக வும், ஆஸ்பத்திரி டாக்டர்கள் ரொம்பவும் அக்கறையு டன் பாடுபட்டுத்தான் பார்த்து வருவதாகவும், ஆனல் இன்னும் ஒன்றும் சொல்வதற்கில்லை என்று அவர்கள் சொல்லி வருவதாகவும் ராமரத்னத்துக்குக் கடிதம் வந்தது.

ராமரத்னம் ஒரு நாள் போய், அவளை ஆஸ்பத் திரியில் பார்த்துவிட்டு வந்தான். மேலும் அவன் தைரியம் குன்றியது. அவள் ஜாதகத்தையும் அவன் ஜாதகத்தையும் ஜோசியம் தெரியும் என்ற பேர்களுக் கெல்லாம் காண்பித்தான். 'உடம்பைச் சற்று அலட் டுமே தவிர, பிராண பயம் இருப்பதாக ஜாதகத்தில் சிறிதும் தென்படவில்லையே' என்று ஒரு வாய்ப்பட்ட மாதிரி எல்லாரும் சொன்னர்கள். ஜாதகம் பார்த்துச் சொல்லுபவர்கள் பேச்சும், டாக்டர் கொடுக்கும் தைரி யமும் மனசில் உறுதியை ஏற்படுத்திவிடுகிறதா! உடம்பு சொஸ்தமானபிறகு ஜோஸியர்களும் டாக்டர் களும் மாத்திரம் பயமில்லை என்றே சொல்லிவந்தார்கள் என்று பின்னடி சந்தோஷமாய்ச் சொல்லிக்கொள்ள லாமே ஒழிய அந்தச் சமயத்தில் சீக்கிரத்தில் மனசுக்கு நிச்சயம் ஏற்பட்டுவிடுகிறதா! ஆனலும் அவர்கள் சொல்லும் நல்வார்த்தைகள் தைரியம் குன்றும் சமயங் களில் மனசுக்கு ஒருவித ஆறுதலை அளிக்கத்தான் அளிக்கின்றன. ஆனல் நாளுக்குநாள் வந்த கடிதங்கள்

அந்தத் தைரியத்தைக் குன்ற அடித்துக்கொண்டு வந்தன. ராமரத்னத்தினுடைய மனம் தாமரையில் விழும் தண்ணீர்போல் தத்தளித்துக்கொண் டிருந்தது.

பாமாவை ஆஸ்பத்திரியில் சேர்த்ததில் ஒரு குணமும் ஏற்படவில்லை என்றும், அவள் தேக நிலைமை ரொம்பவும் இறங்கி விட்டிருப்பதாகவும், டாக்டர் களைக் கேட்டதில், "என்ன செய்கிறது? எங்களால் கூடிய வரையில் எவ்வளவோ விதங்களில் சொஸ்தப் படுத்தத்தான் பார்க்கிறோம். இஞ்செக்ஷன்களாகக் கொடுத்தும் வருகிறோம். 'எக்ஸ்ரே டிரீட்மெண்'டும் செய்துபார்க்கிறோம். வியாதிகெட்டவியாதியாய் இருக் கிறதே. ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்குக் கொண்டு போய் வேறு வைத்தியம் பார்த்துக் கொள்வதானு லும் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று அவர்கள் கை விட்டு விட்டதாகவும், பாமாவை வீட்டுக்கு அழைத் துக்கொண்டு வந்துவிட்டதாகவும், நாட்டு வைத்தியர் ஒருவர் தற்சமயம் மருந்து கொடுத்து வருவதாகவும், அதோடு ஒரு சாயபுவும் வந்து கழிப்புக் கழித்து தினம் மந்திரித்து வருவதாகவும், ஈசுவரனைத்தான் நம்பியிருப் பதாகவும், மனசைக் கலக்கும்படியான கடிதம் ஒரு நாள் ராமரத்னத்துக்கு வந்து சேர்ந்தது. ஒரு மாத மாவது லீவு வாங்கிக்கொண்டு அவள் பக்கத்தில் ராம ரத்னம் வந்திருந்தால் அந்தத் தைரியத்திலேயே பாமா உடம்பு முக்கால் வாசி அநுகூலமாய் விடுமென்றும், அதையே அவள் அனவரதம் சொல்லிக்கொண் டிருப் பதாகவும், வீட்டில் ராமரத்னத்தின் மாமியாருக்குப் பிரசவ காலம் கிட்டிவிட்டபடியால் வீட்டில் துணை யும், பாமாவைச் சரியானபடி கவனிப்பதற்குத் தக்க ஆளும் இல்லை என்றும், ஆகையால் ராமரத்னம் ஒரு

மாதமாவது லீவு வாங்கிக்கொண்டு வந்தால்தான் அநுகூலமாக இருக்கும் என்றும் அந்தக் கடிதத்தில் கண்டிருந்தது.

ராமரத்னத்தின் மனசில் இடி விழுந்தது. அவனை அறியாமல் அவன் கண்ணில் ஜலம் பெருகியது. 'ஒரு பாவமும் அறியாத என்னை ஈசுவரன் ஏன் இப்படிச் சிக்ஷிக்கிறான்? ஈசுவரா! இதுதானா கிருபாசமுத்திரம் என்கிற உன்னுடைய பிருது!' என்று மனசுக்குள் கதறினான். கண்களில் நீர் பெருகியது.

'இந்தப் படுபாவி எங்கே லீவு கொடுக்கப் போகிறான்!' என்று பெருமூச்சு விட்டான். ஒரு நாள் இரண்டு நாள் லீவு கேட்டதற்கே, 'என்ன இவன் அடிக்கடி லீவு கேட்கிறான்? இனிமேல், கொடுக்க முடியாது என்று சொல்லிவிடு. ஒவ்வொரு வீட்டிலுந் தான் பெண்ஜாதி பிள்ளைகள் என்று சீக்கு இருந்து கொண்டேயிருக்கும்; ஆபீஸ் வேலை என்ன ஆகிறது?' என்று அந்தக் கடும் நெஞ்சுக்காரன் ஹெட்கிளார்க்கிடம் சொன்னானமே; அவனா லீவு கொடுக்கப் போகிறான்! நான் ஹோட்டலில் சாப்பிட்டால் உடம்பு கெட்டுவிடும் என்று சக்தி இருக்கிற வரையில் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு எனக்கு அவள் உழைத்தாள். அவள் சாகக்கிடக்கிறாள் என்கிற சமயத்தில்கூட அவள் பக்கத்தில் இருந்து அவளுக்குச் சிறிது மனச்சாந்தியை உண்டுபண்ண முடியாமல் இருக்கும் என் நிலைமை என்ன நிலைமை! 'துத்! உத்தியோகமாம் உத்தியோகம்! இதைவிடப் பிச்சை எடுத்துச் சாப்பிடலாம். லீவுக்கு மனுப்போடுகிறது; கொடுத்தால் சரி, இல்லாவிட்டால் கால் கடிதாசியில் ராஜீநாமா எழுதிக்

கொடுத்துவிட்டுக் கிளம்பிவிடுகிறது' என்று ஒரு துணிச்சலை அடைந்தான்.

லீவு விண்ணப்பத்தை எழுதி எடுத்துக்கொண்டு ராமரத்னம் பத்து மணிக்கு ஆபீஸுக்குச் சென்றான். லீவு கிடைக்கும் என்கிற நம்பிக்கை அவன் மனசில் சிறிதும் இல்லை. இம்மாதிரி சமயங்களில், "உன் பெண்ஜாதி உடம்பு அபாய நிலைமையில் இருப்பதாகவா கடிதம் வந்திருக்கிறது? கேட்க எனக்கு ரொம்பவும் விசனமாக இருக்கிறது. உனக்கு லீவு கொடுக்கிறேன். பேபர்ஸ்களை எல்லாம் கட்டிப் போட்டுவிட்டு ஒரு நிமிஷம் தாமதம் செய்யாமல் உடனே கிளம்பிப் போ. நீ இல்லாவிட்டால் அந்த வேலையை இன்னொருத்தன் செய்துவிட்டுப் போகிறான். அதோடு கவர்மெண்டேயா நின்றுவிடப் போகிறது? உடனே புறப்பட்டுப் போ, அப்பா! உன் நிலைமை எனக்கு விசனத்தைக் கொடுக்கிறது. எல்லாவற்றுக்கும் ஈசுவரன் இருக்கிறான். அவனை நம்பு. அவ்வளவுதான் நாம் செய்யக் கூடியது" என்று ஆறுதல் மொழிகளைச் சொல்லி, கீழ் உத்தியோகஸ்தன் மனத்தை மேலும் புண்படுத்தாமல் அனுப்பும் மகாநுபாவர்களான ஆபீஸ் மேலதிகாரிகள் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். துணியைப் போட்டுத் துடைத்துவிட்டதுபோல் சிறிதும் ஈரமில்லாத நெஞ்சையுடைய மேலதிகாரிகளும் இருக்கிறார்கள். தேவநாதன் பின் ரகத்தைச் சேர்ந்தவன். மகா திமிரும் தலைக்கொழுப்பும் பிடித்தவன். கீழ் உத்தியோகஸ்தர்களை நெஞ்சிரக்கமின்றி வதைத்து இரவு பகலாக வேலைவாங்கியும் மேல் உத்தியோகஸ்தர்களைக் 'காக்காய் பிடித்து' திவட்டி சலாம் போட்டுமே மேல் பதவிக்கு வந்தவன். அவன் கர்வத்தில்

அவன் ஆபீஸ் ஹெட் கிளார்க்கைத் தவிர மற்றக் குமாஸ்தாக்களைப் பார்க்கிறதே இல்லை. எது வேண்டு மானாலும்பேபர்மூலமாயும் ஹெட்கிளார்க்குமூலமாயுந் தான் நடக்கவேண்டும். அந்த ஆபீஸ் ஹெட்கிளார்க்கு டிப்டி கலெக்டருக்குமேல் கர்வம் பிடித்தவன். நேற்றுவரையில் அவன் மற்றக் குமாஸ்தாக்களோடு குமாஸ்தாவாய் இருந்தான். அவனுக்குஹெட்கிளார்க்கு வேலையாகிவிட்டது. டிப்டி தாசில்தார் லிஸ்டிலும் அவன் பெயர் சேர்க்கப்பட்டிருந்தது. இந்த ஒன்றே காலணு உத்தியோகத்திலேயே அவன் கர்வம் தலையைச் சுற்றி ஆட்டியது. ஹெட் கிளார்க்குக்கு என்று இருக் கும் தனி ரூமில் தன் மார்பையே திருப்பித் திருப்பிப் பார்த்துக்கொண்டும் தன் உன்னத நிலையையே இடைவிடாமல் சிந்தித்துப் பெருமையை அடைந்து கொண்டும், வெகு அமுத்தலாக உட்கார்ந்துகொண் டிருப்பான். மற்றக் குமாஸ்தாக்கள் ஆபீஸ் வேலையாக ஏதையாவது கேட்கப் போனாலும், அவர்களுக்கு ஒரு பேச்சு இரண்டு பேச்சுக்குமேல் பதில் சொல்ல மாட்டான்.

ராமரத்னம் லீவு விண்ணப்பத்தை ஹெட் கிளார்க்கிடம் கொண்டு கொடுத்தான்.

"நீங்கள் ஸ்ட்ராங்காய் ஆபீஸரிடத்தில் சிபார்சு செய்யவேண்டும், ஸார். என் மனம் ரொம்பவும் நொந்துகிடக்கிறது. ஆபீஸ்வேலை மேலேயே எனக்குப் புத்தி ஓடவில்லை. உங்களால்தான் எனக்கு இந்த உபகாரம் நடக்கவேண்டும், ஸார்! உங்களைத்தான் நம்பியிருக்கிறேன். தயவு செய்து நீங்கள் பெரிய மனசு செய்யவேண்டும், ஸார்" என்று அவன் நிலைமையை

உருக்கமாகத் தெரிவித்து ஹெட் கிளார்க்கைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டான்.

"சொல்லுகிறேன், அப்பா. சொல்லாமல்கூடப் போய்விடுவேனு? ரிவினியூ மந்திரி வர இருக்கிருர். அவர் வந்து போகும் வரையில் யாருக்கும் லீவுகொடுக்கப்படமாட்டாது என்று டி. ஸி. சொல்லியிருக்கிருர். என்னுல் கூடியவரையில் உனக்கு லீவு வாங்கிக் கொடுக்கப் பார்க்கிறேன்" என்று சொல்லிவிட்டு, தேவநாதன் ஆபீஸுக்கு வந்தவுடன் மற்றப்பேபர்களோடு ராமரத்னம் விண்ணப்பத்தையும் எடுத்துக்கொண்டு ஹெட்கிளார்க் டிப்டிகலெக்டர் ரூமுக்குச் சென்ருன். அங்கிருந்து அவன் வருவதற்குஅரைமணி நேரத்துக்கு மேல் ஆயிற்று. வந்தவுடன், "என்ன ஆச்சு?" என்று ராமரத்னம் ஆவலுடன் கேட்டான்.

"லீவு கொடுக்க முடியாது என்று உத்தரவு போட்டுவிட்டார், அப்பா! நான் எவ்வளவோ உனக்காகச் சொல்லிப் பார்த்தேன். ஒன்றும் பலிக்கவில்லை. எனக்கு ரொம்ப வருத்தமாய் இருக்கிறது" என்ருன் ஹெட் கிளார்க். ராமரத்னம் அதைக் கேட்டதும் பிரமை பிடித்தவன் போல் ஆனுன். ஒன்றும் பேசாமல் அவன் இடத்தில் போய் உட்கார்ந்துகொண்டான். சற்று நேரத்துக்கெல்லாம் ஹெட் கிளார்க்கு ரூமுக்கு எழுந்து போனுன்.

"நான் டி. ஸி. யை நேரில் போய்ப் பார்த்துக் கேட்டுக் கொள்ளட்டுமா?" என்று ஹெட்கிளார்க்கைக் கேட்டான்.

"போய்ப் பாரேன். அதில் ஒரு லாபம் ஏற்படும் என்று எனக்குத் தோன்றவில்லை" என்ருன் எச். ஸி.

ராமரத்னம் டிப்டி கலெக்டர் ரூமுக்குச்சென்ருன்

"வெல்! என்ன வேண்டும்?" என்று டிப்டி கலெக்டர் விறைப்பாகக் கேட்டான்.

"லீவு விண்ணப்பம் கொடுத்தேன்..." என்று ராமரத்னம் வெகு தீனக் குரலில் ஆரம்பித்தான்.

"பார்த்தேன், கொடுக்க முடியாது என்று உத்தரவும் போட்டுவிட்டேன்" என்றான் டி. ஸி.

ராமரத்னம் தன் பரிதாப நிலைமையைச் சொல்ல ஆரம்பித்தான்.

"அதெல்லாம் விண்ணப்பத்திலேயே இருக்கிறதே. எல்லாவற்றையும் படித்துப் பார்த்துத்தான் உத்தரவு போட்டேன். போய்வரலாம்" என்றான் தேவநாதன்.

அந்த அயோக்கியனை மேலும் கெஞ்சுவதாவது என்று ராமரத்னத்துக்கு ஒரு ரோசம் கிளம்பியது. டிப்டி கலெக்டரை அலட்சியம் தோன்றும்படி ஒரு தரம் பார்த்துவிட்டு ரூமைவிட்டு, அவனுக்குச் சலாம் கூடச் செய்யாமல் வெளியே வந்துவிட்டான்.

## 2

## இரண்டு தந்திகள்

ராமரத்னம் இகழ்ச்சி தோன்றும்படி டிப்டி கலெக்டரைப் பார்த்ததை டிப்டியும் கவனித்தான். 'ஓ! இவ்வளவு திமிரா!' என்று டிப்டி கறுவிக் கொண்டான். சுபாவத்தில் ராமரத்னம் ரொம்பவும் பயந்த பேர்வழி. வேலையை ராஜீநாமா கொடுத்துவிட்டுப் போவதாக அவன் தீர்மானித்துவிட்டபடியால் இவன் தயவு என்ன என்கிற துணிச்சல் அவனுக்கு ஏற்பட்டது. அந்த ஆத்திரத்திலேயே அவன் டிப்டி

ரூமை விட்டு வெளியே வந்தான். அவன் இடத்துக்குப் போவதற்கு ஹெட் கிளார்க் ரூமுக்குள் நுழைந்துதான் போக வேண்டும். அவன் போவதை ஹெட் கிளார்க் பார்த்தும், 'என்ன ஆச்சு' என்று கேட்கவில்லை. ரொம்பவும் பலமாகச் சிபாரிசு செய்ததாகவும், டிப்டி ஒப்புக்கொள்ளவில்லை என்றும் ஹெட் கிளார்க் ராமரத்னத்திடத்தில் கள்ளக் கண்ணீர் விட்டானே ஒழிய, உண்மையில் அவன் டிப்டி இடத்தில் ஒரு பேச்சு சொன்னவனல்ல. ஆபீஸ் விவகாரங்கள் எல்லாம் அநேகமாக இந்தத் தோரணையில் தான் நடக்கும்.

ராமரத்னம் வெகு கோபத்தோடு தன் இடத்தில் போய் உட்கார்ந்ததும் மேஜை டிராயரை இழுத்து ஒரு கடிதாசியை எடுத்து ராஜீநாமா எழுதினான். அதற்குள் ஆபீஸ் குமாஸ்தாக்கள் எல்லாரும் அவனை வந்து சுற்றிக்கொண்டு, "லீவு என்னடா ஆச்சு? கொடுத்தானடா?" என்று ஆவலுடன் கேட்டார்கள். "அவன் ஏண்டா கொடுக்கிறான்! என் வயிற்றெரிச்சல் வீண்போகாதுடா. ஸ்வாமி விட்ட வழி ஆகட்டும் என்று ராஜீநாமாச் செய்துவிட்டுப் போகிறேனடா" என்று மனக்கொதிப்புடன் ராமரத்னம் சொன்னான். "ஈசுவரன் என்று ஒருவன் இருந்தால் இதற்கெல்லாம் அவன் அநுபவிக்கத்தான் போகிறான்! சண்டாளன்!" என்று அவர்களுக்குள் எழுந்த ஆத்திரத்தை அவர்கள் தெரிவித்தார்கள். குமாஸ்தாக்களுக்கெல்லாம் டிப்டியின் பேரிலும் ஹெட் கிளார்க்கின் பேரிலும் எப்பொழுதுமே ஆத்திரம். இவர்கள் ஒழிய மாட்டார்களா என்றே பேசிக் கொள்வார்கள். "ராஜீநாமாக் கொடுத்துவிட்டுப்

போடா. பெண்ஜாதியைவிட உத்தியோகம் உசத்தியோ? இந்த உத்தியோகம் இல்லாவிட்டால் வேறு ஏதோ ஒரு உத்தியோகத்தைச் சம்பாதித்துக் கொள்கிறோம்; எப்படியோ பிழைக்கிறோம். முன்னே போய் அவள் உடம்பைக் கவனியடா'' என்று சிறு வயதுள்ள குமாஸ்தாக்கள் ராமரத்னத்தைத் தூண்டினார்கள். ''உன் நிலைமை கஷ்ட நிலைமைதான். அதை நினைத்துக் கொள்ளும்பொழுது என் மனசும் பரிதவிக்கிறது. ஆனாலும் அவசரப்பட்டு ஒரு வேலையையும் செய்யக் கூடாது, அப்பா. பிச்சை எடுத்துச் சாப்பிடலாம் என்று ஆத்திரத்தில் சொல்லிக்கொள்ளலாமே ஒழிய இந்தக் காலத்தில் பிச்சை போடுகிறவர்கள்தான் யார் இருக்கிறார்கள்? வேறு வேலை எங்கே கிடைக்கிறது? ஆறு வருஷ ஸர்விஸை விட்டுவிட்டுப் போகிறதென்றால் நன்றாக யோசனை பண்ணித்தான் செய்ய வேண்டும். இன்னமும் கொஞ்சம் பொறுத்துப் பார்'' என்று சிறிது வயசான குமாஸ்தா ஒருவர் ராமரத்னத்துக்குப் புத்திமதி சொன்னார். அதற்குத் தகுந்தாற்போல் வெளித் தாழ்வாரத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்த கட்சிக்காரர்கள், ''ஒன்றும் பயப்படாதேடா. ஈசுவரன் இருக்கிறான். நாம் அவசரப்பட்டு எதையும் செய்யக் கூடாது'' என்று வேறு ஏதோ விஷயமாகப் பேசிக்கொண்டிருந்தது அவர்கள் காதில் விழுந்தது. அசரீரி வாக்கும் அதே மாதிரி வருகிறது, பார்த்தாயாடா, அவசரப்படாதே!'' என்று புத்திமதி சொன்ன குமாஸ்தா மேலும் ராமரத்னத்துக்குக் குறிப்பிட்டுச் சொன்னார். லீவு கிடைக்கவில்லை என்றும் வேலையை ராஜீநாமாக் கொடுத்துவிட்டு வந்துவிட உத்தேசிக்கிறதாகவும்

மாமனாருக்குக் கடிதம் போட்டு, அவர் என்ன பதில் எழுதுகிறார் என்று பார்த்து, அதற்குமேல் எதையும் செய்யலாம் என்று ராமரத்னம் ஒருவித முடிவுக்கு வந்து, எழுதின ராஜீநாமாவைக் கிழித்துப் போட்டான்.

இவர்கள் பேசிக்கொண்டு இருந்தபொழுது டிப்டி கலெக்டரின் டபேதார் அந்தப் பக்கம் வந்து வட்டமிட்டுக்கொண்டு இருந்தான். அவன் காதில் கேட்கும்படி டிப்டிக்கு விரோதமாகக் குமாஸ்தாக்கள் எதையும் பேச மாட்டார்கள். அவனைக் கொண்டு ஆபீஸில் நடக்கும் விஷயங்களை டிப்டி வேவு அறிகிறான் என்று குமாஸ்தாக்களுக்குச் சந்தேகம். அதற்குத் தகுந்தபடியே டபேதாரை, "என்னடா பேசிக்கொள்கிறார்கள்?" என்று டிப்டி கேட்டான். "வயிற்றெரிச்சல் வீண் போகாது, இவ்வளவையும் அநுபவிக்கப் போகிறான் என்று கன்னா பின்னாவென்று பேசிக் கொள்ளுகிறார்கள் 'துரை'யே!" என்று நடந்ததை டபேதார் உள்ளபடியே சொன்னான். "எவன் எதைப் பேசிக்கொண்டால் என்னை என்ன செய்துவிடும்!" என்று டிப்டி தனக்குள்ளேயே வெகு இறுமாப்புடன் சொல்லிக்கொண்டான்.

டிப்டி கோர்ட் ரூமில் உட்கார்ந்துகொண்டு கேஸ் விசாரித்துக் கொண்டு இருந்தான். ராமரத்னத்துக்கு லீவு மறுத்த இரண்டு மணி நேரத்துக்குள்ளேயே டிப்டி வீட்டிலிருந்து ஒரு ஜவான் ஓட்டோடியும் வந்தான். டிப்டியினுடைய மனைவி திடீரென்று மூர்ச்சையாய்க் கீழே விழுந்துவிட்டதாகவும் பேச்சு மூச்சு இல்லை என்றும் டிப்டி கேஸ் விசாரித்துக் கொண்டு இருக்கும்போதே அவனிடம் போய் அவன்

காதோடு சொன்ஞன். டிப்டி முகத்தில் உடனே திகில் தென்பட்டது. கேஸையெல்லாம் ஒத்திப் போட்டுவிட்டு ஒரு குமாஸ்தாவைக் கூப்பிட்டு அந்த ஊர் ஆஸ்பத்திரி ஐ. எம் எஸ். டாக்டர் வீட்டுக்குப் போய் அவரை உடனே அவசரமாகத் தன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வரும்படி அனுப்பிவிட்டு அவன் தன் வீட்டுக்கு விரைந்து ஓடினன். அங்கு அவன் மனைவி பேச்சு மூச்சு இல்லாமல் அபாய நிலையில் விழுந்து கிடந்தாள் உயிரோடு இருக்கிருளா என்று மூக்கில் கை வைத்துப் பார்த்தான்.

சுவாசம் வந்து கொண்டு இருந்தது. அவசரமாகவே ஆஸ்பத்திரி டாக்டரும் வந்து சேர்ந்தான். 'ஹார்ட்' பாதிக்கப்பட்டு இருக்கிறதாகவும் வெகு ஜாக்கிரதையாகவே அவளைக் கவனிக்க வேண்டும் என்றும் சொல்லி அவளைப் படுக்கையில் படுக்க வைத்து ஏதோ இஞ்ஜெக்ஷனைச் செய்து அவளை ஸ்மரணைக்குக் கொண்டு வந்தான். அவள் ஒரே நிலையில் படுத்துக்கொண்டு இருக்க வேண்டுமே ஒழிய உடம்பைச் சிறிதும் அலட்டவாவது எழுந்து உட்காரவாவது கூடாது என்றும் படுக்கையில் புரளுவதுகூட ஆபத்தில் கொண்டுவந்து வைக்கும் என்றும் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் சொன்ஞன். "சென்னப் பட்டணத்திற்குக் கொண்டுபோய் ஜெனரல் ஆஸ்பத்திரியில் 'அட்மிட்' செய்யலாமா?" என்று டிப்டி கேட்டான். "படுக்கையில் புரளுவதே ஆபத்தென்ருல் சென்னப்பட்டணம் போவதாவது! பதினைந்து இருபது தினத்திற்கு படுத்தபடியே இருக்க வேண்டியதுதான்" என்ருர் டாக்டர். டிப்டி அடைந்த மனத் தடுமாற்றத்தில் பிராண பயம் இல்லையே

என்று ஒன்றுக்கு இருபது தரம் திகிலுடன் டாக்டரைக் கேட்டான்.

"என்னதைச் சொல்வது! போகப் போகத்தான் சொல்ல வேண்டும்" என்றார் டாக்டர். டிப்டி மனமிடிந்து நின்றான்.

தேவநாதனுக்கு மூன்று பிள்ளைகளும் மூன்று பெண்களும். மூத்தபிள்ளைக்கு இருபத்தொரு வயசு இருக்கும். ஒரு பெண்ணுக்குப் பதினெட்டு வயது. மற்றவர்கள் எல்லாம் எட்டு வயசுக்குக் கீழ்ப்பட்டவர்கள். கடைசிப்பிள்ளை தாய்ப்பால் குடித்துக்கொண்டிருந்த ஒன்றரை வயசு கைக்குழந்தை. மூத்த பிள்ளை பெரிய மக்கு. ரொம்பவும் கஷ்டப்பட்டு ஸ்கூல்பைனல் பாஸ் செய்துவிட்டு இன்டர்மீடியட்டில் நான்கு வருஷங்கள் படித்தான். பரீக்ஷை தேறவில்லை. அவனுக்குச் சுருக்கெழுத்து, டைப்ரைடிங் சொல்லிவைத்து எங்கெங்கேயோ வேலை செய்துவைக்கத் தேவநாதன் பிரயத்தனப்பட்டான். எங்கும் வேலை கிடைக்கவில்லை. கடைசியாக, பம்பாயில், நூற்றிருபது ரூபாயில் அந்தப் பிள்ளையைத் தேவநாதன் வேலையில் அமர்த்தினான். அவனுக்குக் கல்யாணம் ஆகவில்லை. அவன் பம்பாயில் இருந்துவந்தான். தேவநாதனுடைய பதினெட்டு வயதில் இருந்த பெண் கல்யாணம் செய்துகொண்டு ஜாம்ஷட்பூரில் கணவனோடு இருந்துவந்தாள். இங்கே வீட்டில் இருந்தது அவனும், அவன் மனைவியும், சிறு பிராயத்து நான்கு குழந்தைகளுமே. வீட்டில் இருந்த சமையற்காரன் நான்கு தினங்களுக்குமுன் ஓடிவிட்டான். தேவநாதன் வீட்டில் ஒருமாதத்திற்குச் சேர்ந்தாப்போல் எந்தச் சமையற்காரனும் நிலைத்திருப்பதில்லை. கோர்ட்டிலிருந்து டிப்டி வீட்டுக்கு வந்தபோது

வீட்டில் குழந்தைகள் எல்லாம் கதறிக்கொண்டு இருந்தன. ஒன்றரை வயதுக்குழந்தை தாய்ப்பாலுக்காக வீரிட்டுக்கொண்டு இருந்தது. அதை ஜவான் தோளில் எடுத்துக்கொண்டுபோய்ச் சமாதானப்படுத்திக்கொண்டிருந்தான். தண்ணீர் வேண்டுமென்றாலும் கொடுப்பதற்கு வீட்டில் ஆள் இல்லை. இந்தக் கஷ்ட நிலைமையில் தேவநாதன் மனம் சொல்ல முடியாத சஞ்சலத்தை அடைந்தது. தன் பரிதாப நிலைமையை நினைக்க நினைக்க தேவநாதனுக்குத் துக்கம் உள்ளடங்காமல் துருத்திக்கொண்டு வந்தது.

உடனே வந்து சேரும்படியாக, பம்பாயில் உள்ள பிள்ளைக்கு ஒரு தந்தியையும் பெண்ணை அழைத்துக் கொண்டு வரும்படியாக ஜாம்ஷட்பூரிலுள்ள மாப்பிள்ளைக்கு ஒரு தந்தியையும் கொடுத்தான். சாயந்தரத்துக்குள் அவர்களிடமிருந்து பதில் தந்திகளும் கிடைத்தன. ஆபீஸர் லீவு கொடுக்க மறுத்துவிட்டதாகவும், வேலையை ராஜீநாமாச் செய்துவிட்டு வந்துவிடுவதா என்று கேட்டும் பிள்ளையினிடத்திலிருந்து பதில் தந்தி வந்தது. லீவு கேட்டும் கிடைக்காததால் பெண்ணை அழைத்துக்கொண்டு வர முடியவில்லை என்றும் யாராவது வந்து அழைத்துக் கொண்டு போவதானால் ஆக்ஷேபம் இல்லை என்றும் மாப்பிள்ளையிடத்திலிருந்து பதில்தந்தி வந்தது. அந்தத் தந்திகளைக் கையில் வைத்துக்கொண்டு தேவநாதன் கோபாவேசத்தில் இருந்தபொழுது தேவநாதன் மனைவி அபாய நிலைமையில் இருப்பதாகக் கேள்விப்பட்டு 'கிராக்' ராஜகோபாலாச்சாரி அங்கு வந்து சேர்ந்தான்.

'கிராக்' ராஜகோபாலாச்சாரி என்பவன் அந்தஊரில் ஒரு வக்கீல். பெரிய வைதிகப் பிச்சு. அவனுக்கு அதிக

மாகப் 'பிராக்டிஸ்' இல்லை. மாதம் நூற்றைம்பது ரூபாய்க்குள்ளே தான் வருமானம் வரும். அந்த ஊரில் அவனுக்குச் சொந்த வீடு இருந்தது. சமீபத்திலேயே மூன்று நான்கு காணி பிதுரார்ஜித பூமி இருந்தது. அதோடு தொழிலில் கிடைத்த வரும்படியையும் வைத்துக் கொண்டு வெகு சந்துஷ்டனாய் அவன் ஜீவித்துவந்தான்.

பரம வைதிகன். எப்பொழுது பார்த்தாலும் ராமாயணம், பாரதம், பாகவதம், பகவத்கீதை இவைகளைப் படித்தபடியே இருப்பான். ஆசார அநுஷ்டானங்களில் எல்லாம் வெகு வைராக்கியத்தோடு இருப்பான். வைதிக வைஷ்ணவர்கள் பழக்கப்படி நெற்றியில் திருமண்ணோடு மஞ்சள் ஸ்ரீசூர்ணந்தான் இடுவான். வெளியில் ஒரு வீட்டிலும் சாப்பிட மாட்டான். தன் வீட்டிலும் பெருமாளுக்கு ஆராதனம் இல்லாமல் ஒரு நாளும் போஜனம் அருந்த மாட்டான். அவன் கோர்ட்டுக்குப் போவதே பிராம்மணர்கள் வீட்டுக் கல்யாணங்களில் மாப்பிள்ளை பரதேசக் கோலம் போவது போல் இருக்கும். அரையில் பஞ்ச கச்ச வேஷ்டி, அதற்கு மேலே கறுப்பு லாங் கோட்டு. லாங் கோட்டின் பேரில் ஓர் அங்கவஸ்திரம்; முகத்தில் பிரகாசமான நாமம்; தலைமேல் ஒரு பெரிய தலைப்பாகை; அதற்கு மேல் விரித்து இடக் கையில் பிரித்த குடை ஒன்று; வலக்கையில் தாகமெடுத்தால் நீர் அருந்துவதற்காகச் சுமார் இரண்டுபடி ஜலம் பிடிக்கும் ஒரு பெரிய வெண்கலக் கூஜா; வலது கட்கத்தில் கேஸ் கட்டு, பகவத் கீதையோ ராமாயணமோ ஒரு புஸ்தகம்; இந்தக் கோலத்தோடு தான் கோர்ட்டுக்குப் போவான்.

இந்த மாதிரி ஆசாமியை இந்தக் காலத்தில் 'கிராக்' என்று ஏன் சொல்ல மாட்டார்கள்!

'இராக்' ராஜகோபாலாச்சாரி கிரிமினல் கோர்ட்டு களுக்குப் போவதில்லை. ஆகையால் அவன் ஊர் வம்புக்கு இடமில்லாமல் தேவநாதன் வீட்டுக்கு அடிக்கடி போய்ப் பேசிக்கொண்டிருப்பான். தேவநாதனும் அவனும் சிறுவயது முதல் அத்யந்த சிநேகிதர்களாய் இருந்து வந்தார்கள்.

ராஜகோபாலாச்சாரியைப் பார்த்ததும், "இந்த நிதானம் கெட்ட மடையன்களுக்கெல்லாம் எவனடா ஆபீஸர் வேலை கொடுத்தது? வந்திருக்கிற தந்திகளைப் பார்!" என்று வெகு கோபமாய்க் கையிலிருந்த தந்திகளைத் தேவநாதன் அவனிடம் கொடுத்தான்.

## 3
## தெய்வம் டாக்டரா?

ராஜகோபாலாச்சாரியும் தந்திகளைப் பார்த்து விட்டு, "உண்மையிலேயே நீ சொல்கிற மாதிரி இவன்களெல்லாம் ஆபீஸர் வேலைக்கே லாயக்கில்லாதவன்களடா. தாயார் உயிருக்கு மன்ருடிக் கொண்டிருக்கிருள். அப்பொழுதுகூட லீவு கொடுக்கவில்லை என்ருல் ரொம்ப மோசமான விஷயந்தான்" என்று சொல்லிவிட்டு, "இதற்கு என்ன செய்யப் போகிருய்?" என்று கேட்டார். "என்னடா செய்வது? ராஜீநாமாச் செய்துவிட்டு வந்துவிடு என்று தெரிவித்துவிடுவோமென்ருல், ராஜீநாமாச் செய்துவிட்டு வந்துவிடுகிருன். அப்புறம்? இந்த வேலையில் அவனை அமர்த்துவதற்குப் பட்ட கஷ்டம் கொஞ்ச நஞ்சமில்லை. மறுபடியும் உடனே யார் உத்தியோகம் வைத்துக் காத்துக் கொண்டிருக்கிருர்கள்?" என்று தேவநாதன் சொல்

லிக்கொண் டிருக்கையில் அடுத்த ரூமிலிருந்து, "ஐயோ, யார் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொண் டேனே, பகவான் என்னை இப்படித் தண்டிக்கிறார். ஸ்ரீநிவாஸா, கோவிந்தா!" என்று தேவநாதன் மனைவி அரற்றிக்கொண் டிருந்தாள்.

'வயிற்றெரிச்சல் வீண்போகாது' என்று குமாஸ் தாக்கள் சொன்னதாக டபேதார் சொன்ன விஷயம் தேவநாதன் மனசை முன்னாடியே உறுத்திக்கொண் டிருந்தது. அதேமாதிரியாகவே அவன் மனைவி அரற் றினதும் ராமரத்னத்துக்கு லீவு கொடுக்காததன் விளைவாக இருக்குமோ என்று அவனை அறியாமல் அவன் மனம் தளர்ச்சியை அடைந்தது. 'அதெல் லாம் சுத்த நான்ஸென்ஸ்' என்றும், அவ்வப்பொழுது ஞாபகம் வந்தபோதெல்லாம் மனத்தைத் தேற்றிக் கொண்டும் வந்தான்.

"பையன் சங்கதிதான் அப்படி ஆயிற்றென்றால் பெண்ணையாவது அழைத்துக் கொண்டு வருவோ மென்றால் யார் போய் அழைத்துக்கொண்டு வருகி றது? அப்பா, அப்பா, என்ன கஷ்டமடா! பையனும் பெண்ணும் வராவிட்டால்கூடப் போகிறார்கள். ஹோட்டலிலிருந்து சாப்பாட்டை வரவழைக்கி றேன். குழந்தைகளும் நானும் எப்படியோ சாப்பிட்டு விடுகிறோம். ஜவான் இருக்கிறான். கைக்குழந்தை யைப் பார்த்துக் கொள்கிறான். சமயம் பார்த்து இந்தச் சமையற்காரப் பயல் ஓடிவிட்டானே, அதைச் சொல்லு! வேளாவேளையில் அவளுக்குக் கஞ்சி காய்ச் சிக் கொடுக்க வேண்டுமே. யார் கொடுப்பது? நம்ம மனுஷ்யாள் என்று யாராவது கூட இருந்தால்தானே

சௌகரியமாய் இருக்கும்?" என்று அழமாட்டாத குறையாய்ச் சொன்னுன் தேவநாதன்.

"கஷ்டந்தானடா! டாக்டர் வைத்தியமும் நடக்கட்டும்; அதோடு நான் சொல்கிறபடியும் கேள். பேசாமல் ஒரு ரூபாயை எடுத்துத் திருப்பதி ஸ்ரீநிவாஸனுக்கு என்று மஞ்சள் துணி ஒன்றில் முடிந்து போட்டுவிடு. எல்லாம் தானுகச் சொஸ்தமாகிவிடும்" என்றுர் ராஜகோபாலாச்சாரி.

தேவநாதன் இவைகளிலெல்லாம் நம்பிக்கை இல்லாத நாஸ்திகன். "ரொம்ப சுலபமான 'ட்ரீட்மெண்ட்'டா உன்னுடையது. ஸ்ரீநிவாஸன் சொஸ்தப்படுத்துகிருரா, சொல்லேன். ஒரு ரூபாய்க்கு ஐந்து ரூபாயாகக் கொடுக்கிறேன்."

"இப்பொழுது மருந்து கொடுக்கிற டாக்டர் சொஸ்தப்படுத்திவிடுவார் என்பது நிச்சயமாடா?"

"அவன் இல்லாவிட்டால் அவனுக்கு மேல் ஒரு பெரிய டாக்டரை வரவழைக்கிறேன்."

"அந்தப் பெரிய டாக்டராவது சொஸ்தப்படுத்திவிடுவான் என்பது நிச்சயமா?"

"இல்லையென்ருல் வந்தது வருகிறதென்று கைவிட வேண்டியதுதான்."

"அப்படிக் கைவிட்டுவிடுவாயா? அதைச் செய்யலாமா என்று மனம் அடித்துக்கொள்ளாதா? கஷ்டம் வந்து மூடிக்கொண்டு வேறு ஒன்றும் கதி இல்லை என்று கலங்கி நிற்பவன்கூட நம்பிக்கையை ஒரு நாளும் கைவிடமாட்டான். யாராவது குறுக்கிட்டு நம்மைக் காப்பாற்றி விடமாட்டார்களா என்று கடைசி சமயத்தில் மனம் அவனையும் அறியாமல் கதறும். யாராவது—யாராவது என்று மனம் கதறு

கிறதே, அதுதான் ஈசுவரன். அவன் அறியாமற் போனாலும் அவன் ஈசுவரனைப் பற்றித்தான் கதறுகிறான் என்று வைத்துக்கொள். உன் குயுக்திகளெல்லாம் கிடக்கட்டும். ஸ்ரீநிவாஸனை வேண்டிக்கொண்டு ஒரு ரூபாயை முடிந்து போடு. உன் கஷ்டங்களெல்லாம் தீருகிறதா, இல்லையா பாரேன்'' என்றார் ராஜகோபாலாச்சாரி.

தேவநாதனுக்கு மனசில் ஒரே கலவரம். இன்னது செய்வதென்று தெரியவில்லை. ராஜகோபாலாச்சாரியின் தெய்வ பக்தியில் அவனுக்கு ஒன்றும் நம்பிக்கை ஏற்படவில்லை. "இவ்வளவு சுலபத்தில் காரியம் முடிந்துவிடுவதானால் உலகத்தில் எதற்காக இவ்வளவு டாக்டர்கள் இருக்கிறார்கள்? ஜனங்கள் ஏன் வியாதியினால் சாக வேண்டும்? எல்லாம் வெறும் அஞ்ஞானம்! மூடநம்பிக்கை!'' என்று எண்ணமிட்டவனாய், தன் மனைவியின் அறைக்குச் சென்றான். அவள் படுக்கையில் மிகுந்த பலஹீனத்துடன் படுத்துக்கொண்டிருந்தாள். தேவநாதனைப் பார்த்தவுடனே திடீரென்று துக்கம் அவளை அறியாமலே துருத்திக்கொண்டு வந்தது. கண்களில் நீர் ததளித்தது. "ஏன் இப்படி உடம்பை அலட்டிக் கொள்கிறாய்? ஒன்றும் அதைரியப்படாதே. நேற்றைக்கு இன்று பரவாயில்லை என்று டாக்டர் இப்பொழுதுதான் சொல்லிவிட்டுப் போனார். நான் அதோடு மாத்திரம் நின்று விடவில்லை. நல்ல டாக்டரை அழைத்துக்கொண்டு வர, பட்டணத்துக்குக்கூட ஆள் அனுப்பி இருக்கிறேன். அதெல்லாம் ஒன்றும் பயப்படாதே'' என்று தேறுதல் வார்த்தைகள் சொன்னானே ஒழிய, உள்ளூற அவனுக்குத் திகில்தான். அவள் எதிரில்

கஷ்டத்தைக் காட்டிக்கொள்ளக்கூடாதென்று, வந்த துக்கத்தையெல்லாம் மிகுந்த கஷ்டத்துடன் அடக்கிக் கொண்டான். ''என்ன டாக்டரோ, என்ன மருந்தோ! வந்திருப்பது என்னவோ ரொம்பவும் பிரமாதமாக வந்துவிட்டது. குணமாகும் என்று எனக்குத் தோன்ற வில்லை. அப்படிக் குணமாயிற்று என்றால் அது தெய்வ ஸங்கல்பத்தினால்தான் ஆக வேண்டும். நான் இறப் பதைப்பற்றிக்கூட எனக்குக் கவலை இல்லை. பாவம், இந்தக் குழந்தைகளை வைத்துக்கொண்டு நீங்கள் என்ன கஷ்டப்படப்போகிறீர்களோ? யார் யாரிடம் என்ன வார்த்தைகள் கேட்டுக்கொண்டு அதுகள் எப்படியெல்லாம் அலையப் போகிறதுகளோ? அதை நினைத்துக்கொண்டால் என்னை என்னவோ செய்து விடுகிறதே!'' என்று அவளையும் அறியாமல் ஓவென்று கதறிவிட்டாள். இதைக் கண்ட தேவநாதனுக்கும் துக்கம் தாளாமல் ஓவென்று கதறிவிடலாம் போல் இருந்தது. இருந்தாலும் அது அவளுடைய அதைரி யத்தை மேலும் அதிகப்படுத்திவிடும் என்று கருதி, கண்களினின்றும் வந்த இரண்டொரு பொட்டு ஜலத்தை அவளுக்குத் தெரியாதபடி விரல்களால் தெறித்துவிட்டு, ''அதெல்லாம் ஒரு பயனுமில்லை. நீ இப்படி யெல்லாம் அழுதால் பசங்கள் பயப்படுங்கள். ஒன்றுமிராது; மனசைத் தைரியப் படுத்திக்கொள்'' என்று தேவநாதன் அவள் கண்களினின்று பெருகிய நீரைத் துடைத்தான். ''ஆமாம். நேற்றே சொல்ல வேண்டுமென்றிருந்தேன். மறந்தே போய்விட்டேன். ஒரு துணியை மஞ்சள்படுத்தி, திருப்பதி ஸ்ரீநிவாஸன் பெயரைச் சொல்லி அதில் ஒரு ரூபாயை முடிந்து போடுங்கள். எங்கள் குலதெய்வம் அவர்.

எத்தனையோ கஷ்டங்களிலிருந்து எங்களைக் காப்பாற்றியிருக்கிறார்" என்றாள் அவள்.

தேவநாதனுக்கு ஒன்றும் சொல்லச் சரிப்படவில்லை. அதில் நம்பிக்கை இருக்கிறதோ இல்லையோ, அவளும் சொல்லிவிட்டாள். அவள் இஷ்டத்தைப் பூர்த்தி செய்யவேண்டியது நம்முடைய கடமை என்று உடனே ஒரு துணியை எடுத்து, மஞ்சள் படுத்தி அதில் திருப்பதி ஸ்ரீநிவாஸன் பெயரைச் சொல்லி ஒரு ரூபாயை முடிந்து போட்டான்.

தேவநாதனுக்கு மனைவியைத் தனிமையாக விட்டுவிட்டு ஆபீஸுக்குப் போகப் பிடிக்கவில்லை. ஆகவே, பேபர்களையெல்லாம் வீட்டுக்கு வரவழைத்து அங்கிருந்தபடியே அவைகளைப் 'பைஸல்' செய்து வந்தான். வழக்கப்படி ஒரு நாள் தேவநாதன் பேபர்களையெல்லாம் பார்த்துக்கொண்டு வந்தபோது, "இது யாருடைய பைல்?" என்றான். "ராமரத்னத்தினுடையது" என்றான் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த ஹெட் கிளார்க். "அவன்தான் இருக்கும். வர வர அவன் ரொம்ப அஜாக்கிரதையாக வேலைசெய்கிறான். இரண்டு மூன்று தரம் பார்த்தாகிவிட்டது. இனி மேலும் இப்படி விட்டுக்கொண்டு போனால் நமக்குத்தான் ஆபத்தாக முடியும். அவனுக்கு ஒரு சூடு காட்டி வைக்க வேண்டியதுதான். உடனே வரச் சொல்லும் அவனை" என்றான் தேவநாதன்.

கஷ்டங்களும் துயரங்களும் மனிதனுக்குப் புத்தி புகட்டுவது போல் வேறு எதுவும் கிடையாது. கஷ்டம் அநுபவித்ததனால் தேவநாதன் மனம் சிறிது சிறிதாக நல்வழியில் மாறுபட்டுக்கொண்டு வந்தது. ராமரத்னத்திடம் பேசி அவனை நல்லதனப்படுத்த

வேண்டுமென்று அவனுக்குத் தோன்றியது. பிகுவை விட்டுக் கொடுக்காமல் அவனைத் தருவிக்க ஒரு சாக்கை ஏற்படுத்திக்கொண்டான்.

ஹெட் கிளார்க் ஓடோடியும் வந்து ராமரத்னத்திடம் டிப்டி கூப்பிடுவதாகச் சொன்னான். "எதற்காகக் கூப்பிடுகிறார்?" என்றான் ராமரத்னம். "அது எதற்கோ அப்பா! வரச்சொன்னார்" என்று சொல்லிப் போய்விட்டான் ஹெட் கிளார்க்.

உடனே செய்தி ஆபீஸ் முழுவதும் பரவிவிட்டது. குமாஸ்தாக்கள் எல்லாரும் ராமரத்னத்தின் மேஜையைச் சூழ்ந்துகொண்டார்கள். "ஏன்! அப்பொழுது செய்ததற்குத்தான் தெய்வம் சரியானபடி தண்டித்திருக்கிறதே. அது போராதாமோ? இன்னம் என்னவாம்?" என்றார் ஒரு குமாஸ்தா.

"அரசன் அன்று கொல்லும், தெய்வம் நின்று கொல்லும் என்று சொல்லுவார்களே; அவன் விஷயத்தில் அன்றைக்கே கைமேல் பலனைக் கொடுத்துவிட்டதடா தெய்வம். நன்றாக அநுபவிக்கிறான், பார்" என்று ஒரு குமாஸ்தா உத்ஸாகமாகச் சொன்னான்.

"அன்றிலிருந்தே உன்மீது ஒரு மாதிரியாக இருக்கிறான் அவன். இது எப்படியும் ஒரு நாளைக்கு விபரீதமாகத்தான் முடியப் போகிறது என்று நினைத்தேன். அப்படியே ஆகிவிட்டது" என்றார் வேறொரு குமாஸ்தா.

"எனக்கும் தான் தெரியும். அதற்காகத் தினம் அவனை சேவித்துக் கொண்டிருக்க வேண்டுமா என்ன? லஞ்சம், தப்பு தண்டாபோன்ற தகாத காரியம் ஏதாவது செய்துவிட்டேனா என்ன? லீவு கேட்டேன், கொடுக்க முடியாது என்றான். சரிதாண்டா, அவன்

பண்ணுகிறதைப் பண்ணட்டும்'' என்ருன் ராமரத்னம்.

" ஆமாம் என்னவாம் விஷயம்?'' என்ருர் ஒரு குமாஸ்தா.

''யாருக்குத் தெரியும்? கேட்டால் எச். ஸி. சரியாகச் சொன்னுல்தானே? ஏதாவது வத்தி வைத்திருப்பான்'' என்ருன் ராமரத்னம்.

"இருக்கட்டும், இருக்கட்டும். இவன் மாத்திரம் ஒன்றும் சாசுவதமில்லை. டி. சி. க்கு வந்த மாதிரி இவனுக்கும் ஒரு நாளைக்கு ஏதாவது வராமற் போகாது'' என்ருர் குமாஸ்தா.

டிப்டியினிடம் ராமரத்னம் சென்ருன். டிப்டி வேருென்றும் கேட்கவில்லை. ராமரத்னத்தின் பைலில் ஒரு பேபரைக் காண்பித்து, "என்ன இது? உத்தியோகமா? விளையாட்டா? இதற்குத்தான் உங்களுக்கெல்லாம் சம்பளம் கொடுத்து வைத்திருக்கிறதோ?'' என்று சீறி விழுந்தான் தேவநாதன். ராமரத்னம் அதை வாசித்துப் பார்த்தான்.

தவறு என்னவோ தவறுதான். ஆனல் தான் வேண்டுமென்ருே, அல்லது அசிரத்தையினுலோ அவ்விதம் செய்யவில்லை என்பது அவனுக்கு நன்ருகத் தெரியும். உடனே அவன் டிப்டியை நோக்கி, "தவறுதான். ஆனல் இது அசிரத்தையினுல் ஏற்பட்டதல்ல. ஆறு வருஷமாக நானும் வேலை செய்து வருகிறேன். இதுவரையில் ஒரு தரங்கூட இந்த மாதிரி ஏற்பட்டது கிடையாது. கொஞ்ச நாளாக என் மனம் சரியான நிலையில் இல்லை. அதனுல் ஏற்பட்ட பிசகுதான் இது'' என்ருன்.

உடனே தேவநாதன் ஏதோ ஞாபகம் வரப்பெற்றவனுய், "ஆமாம், கொஞ்ச நாளைக்குமுன் உன் மனைவி

யின் உடம்பு சரியில்லை என்று நீ லீவுக்கு விண்ணப்பம் செய்துகொள்ளவில்லை?" என்றான்.

"ஆமாம். அதுதான் லீவு கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டீர்களே."

"நீ லீவு கேட்ட சமயம் ரிவினியூ மந்திரி இங்கு வருவதாக இருந்தார். ஆகையால் கொடுக்க முடியாமலிருந்தது. இப்போது உடம்பு எப்படியிருக்கிறது?"

"பரவாயில்லை. அநுகூலம் என்று கடிதம் வந்தது அப்பொழுதுதான் ரொம்பவும் அதிகமாக இருந்ததாம். டாக்டர்களெல்லாம் கைவிட்டுவிட்டார்களாம். நிமிஷத்துக்கு நிமிஷம் விபரீதமான தந்தியை எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன்."

"அப்புறம்?"

"அப்புறம் என்ன? இங்கிலீஷ் வைத்தியம், நாட்டு வைத்தியம் என்று என்னவெல்லாமோ பார்த்தார்கள். ஒன்றிலும் வியாதி குணமாகிற வழியாகக் காணோம். கடைசியாகத் தெய்வமே கதியென்று, திருப்பதி ஸ்ரீநிவாஸனுக்கு ஒரு கருடோத்ஸவம் செய்து வைப்பதாகப் பிரார்த்தனை செய்துகொண்டார்களாம். இப்பொழுது உடம்பு நன்றாக அநுகூலம் என்றும், திருப்பதிக்குப் போய்ப் பிரார்த்தனையைச் செலுத்திவிட்டு வரவேண்டுமென்றும் மாமனார் கடிதம் எழுதியிருக்கிறார். அதற்கு இரண்டு நாள் லீவு கொடுத்தால் போதும். அந்தக் கலவரமான சமயத்தில்தான் இந்தத் தவறு நேர்ந்துவிட்டது" என்றான் ராமரத்னம்.

டிப்டிக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. "ரிவினியூ மந்திரி இப்போது வரவில்லையாம். நேற்றுத்தான் தகவல் கிடைத்தது. இரண்டு நாள் என்ன? நாலு நாள் லீவு கொடுக்கிறேன். முதலில் திருப்பதிக்

குப் போய்ப் பிரார்த்தனையைச் செலுத்திவிட்டு வா" என்று சொல்லி ராமரத்னத்தை அனுப்பிவிட்டுத் தானும் தன் மனைவிக்கு உடம்பு சொஸ்தமானால் ஒரு கருடோத்ஸவம் செய்து வைப்பதாய்ப் பிரார்த்தனை செய்துகொண்டான்.

ராஜகோபாலாச்சாரி அன்று சாயந்தரம் வந்தார். அதற்குள்ளேயே தேவநாதன் மனைவியின் உடம்பு ரொம்பவும் குணத்துக்கு வந்திருந்தது. "எப்படியடா இருக்கிறது உடம்பு?" என்றார்.

"பரவாயில்லைடா! ரொம்ப குணத்துக்கு வந்து கொண்டிருக்கிறதடா. ஸ்ரீநிவாசனுக்கு நீ ஒரு ரூபாய் தானே முடிந்து போடச் சொன்னாய்? கருடோத்ஸவமே செய்து வைத்துவிடுகிறதாகத் தீர்மானித்து விட்டேன். என்ன சொல்கிறாய்?"

"பேஷ்! ஸ்ரீநிவாசனுடைய சக்தியைப் பார்த்தாயாடா? பரம நாஸ்திகனையே அவர் பக்கம் இழுத்துக் கொண்டுவிட்டார்" என்றார் ராஜகோபாலாச்சாரியார்.

தேவநாதனுடைய மனைவிக்குச் சீக்கிரத்தில் உடம்பு சொஸ்தமாகியது. ஸ்ரீநிவாசப்பெருமாளுக்கு இரண்டு கருடோத்ஸவங்கள் நடந்தன. ராமரத்னம் செய்து வைத்தது ஒன்று; தேவநாதன் செய்து வைத்தது மற்றொன்று.

திருப்பதியில் உத்ஸவத்தின் போது தேவநாதன் பக்தி மேலீட்டால் சொக்கினான்; பரவசனானான்.

முற்றும்

# ஸ ரோ ஜா

# ஸரோஜா

## 1

## தங்கம்மாளின் வெறுப்பு

"ஏண்டி இப்படி மொண்டித்தனம் பண்ணுகிறுயாம்? கண்ணன் பேரில் என்னடி குற்றம்? அவன் மொண்டியா முடமா கூனு குருடா செவிடா? கண்ணுக்கு லக்ஷணமா யிருக்கிறுன். நல்ல சிவப்பு; முகத்தில் நல்ல தேஜஸ் இருக்கிறது. இருபத்து நான்கு வயதுக்குள் பி. எல். பாஸ் செய்துவிட்டு அட்வொகேட்டாயும் வந்திருக்கிறுன். அவன் தகப்பனுர் பேர் போன அட்வொகேட். ஏராள பணம் சம்பாதித்திருக்கிறுர், சேர்த்தும் வைத்திருக்கிறுர். ஒரே பிள்ளை. அவ்வளவு சொத்தும் அந்தஸ்தும் இருந்தால் இன்ஞெரு பிள்ளை பட்டுவிழுவான். இவன் நல்ல சாது; முகத்தில் விநயமும் தன்மையும் இருக்கிறது; ஒரு துரப்பியாசம் கிடையாது. ஏன் மாட்டேன் என்கிறுயாம்? கல்யாணமே வேண்டாம் என்று என்னமோ அசட்டுப் பிசட்டு என்று சொல்லிக் கொண்டிருக்கிறுயாமே.

"உன்னைப் பெற்று வளர்த்தவர்கள் நீ கெட்டுப் போவதற்கா சொல்லுவார்கள்? உன் மனசில் இருக்கிறதைத்தான் சொல்லேன். கண்ணன் வேண்டாமென்ருல் பூவராகனைப் பண்ணிக் கொள்கிறுயா? அவனும்

பெரிய பணக்காரந்தான். ஆனால், கண்ணனாக மாட்டான். இருந்தாலும் அவனைப் பண்ணிக்கொள்வதானால் அதையாவது சொல். இரண்டு பேரும் வேண்டாமென்றால் வெளியில் பார்க்கிறோம். கல்யாணம் வேண்டாம் என்று சொல்லுவது நம் ஜாதி குலத்துக்கு முறையா? உனக்கென்ன வயசாகவில்லையா? பின்னாடி என்ன செய்வது என்று யோசனை செய்ய மாட்டாயா? உன் எண்ணம் என்ன என்றுதான் சொல்லேன்" என்று சாரங்கபாணி ஐயங்கார், பெண் ஸரோஜாவைச் சிறிது கோபமாகவும் சிறிது நயமாகவும் கேட்டார். ஸரோஜா ஒரு பதிலும் சொல்லவில்லை. எதிரில் இருந்த நாற்காலியைப் பிடித்துக்கொண்டு நின்றவள் நின்றபடி இருந்தாள். அநேக விதங்களாகக் கேட்டும் அவள் வாயைத் திறக்கவில்லை.

"கேட்கிறார்; பதில் சொல்லேண்டி, மூடமே!" என்று தாயார் தங்கம் எரிந்து விழுந்தாள். அதற்கும் ஒரு பதில் இல்லை.

"அஸத்துகள், எப்படியாவது போகிறதுகள்; கல்யாணமே வேண்டாம் என்று பிடிவாதம் பிடிக்கிறது ஒரு பெருமை என்று நினைக்கிறதுகள். இந்தக் காலத்துப் பசங்களெல்லாம் இந்த ஒரு பாடத்தை நன்றாய்க் கற்றுக் கொண்டிருக்கிறார்கள் போலிருக்கிறது. புத்தி வருகிறபோது வரட்டும்; நீங்கள் எழுந்து போங்கள்" என்று வெறுப்புடன் சொல்லிவிட்டுத் தங்கம்மாள் உள்ளே போய்விட்டாள். பிள்ளைகளையும் பெண்களையும் கண்டால் தங்கம்மாளுக்கு வெகு வெறுப்பு. அவள் பழங்காலப்பேர் வழி; இவர்கள் நடத்தை அவளுக்குப் பிடிக்கிறதில்லை.

சாரங்கபாணி ஐயங்கார் வெளியூர்களில் ஸப் ஜட்ஜாக இருந்து இரண்டு வருஷங்களுக்கு முன் ரிடையர் ஆகி, மாம்பலத்தில் சொந்த வீட்டில் ஸ்திர வாசியானுர். நல்ல சொத்துள்ளவர். நானூற்றிருபது ரூபாய் 'பென்ஷன்' வந்துகொண்டிருந்தது.

அவருக்கு இரண்டு பெண்கள், இரண்டு பிள்ளை கள். வேலையில் இருக்கும்போது அவரை அடிக்கடி ஊரைவிட்டு ஊர்மாற்றுவதை உத்தேசித்தும், மூத்த பிள்ளை பட்டண்ணு என்பவனைச் சென்னப்பட்டணத் தில் காலேஜில் சேர்க்கவேண்டி இருந்தபடியாலும், பிள்ளையைத் தனியாய் விட்டால் கெட்டுப்போய் விடுவான் என்று நினைத்து மாம்பலத்தில் ஒரு வீட்டை விலைக்கு வாங்கி, சமையல் செய்து போட்டு வீட்டைப் பார்த்துக்கொள்ள விதந்துவாய்ப் போயி ருந்த அவளுடைய தங்கையை அனுப்பி அங்கே ஒரு தனிக்குடித்தனம் ஏற்படுத்தினுர். சிறியவர்களா யிருந்த ஒரு பெண்ணையும் பிள்ளையையும் தன்னேடு வைத்துக் கொண்டு, படிப்போடு பாட்டுக் கற்றுக் கொள்ளவும் சௌகரியமாயிருக்கு மென்று, பெரிய பெண் ஸரோஜாவையும் மாம்பலத்தில் விட்டு வைத்தி ருந்தார். இரண்டு வருஷங்களுக்குள் ரிடையர் ஆய், அவரும் குடும்பத்தோடு மாம்பலத்திற்கு ஸ்திரமாய் வந்து சேர்ந்துவிட்டார்.

ஸரோஜாவுக்கு வயது பதினெட்டாயிற்று. ஸ்கூல் பைனல் பாஸ் செய்து இருந்தாள்; பாட்டும் நன்ருகப் பாடிக்கொண்டிருந்தாள். அவள் கல்யாண விஷயமாயும் சாரங்கபாணி ஐயங்கார் முயன்ருர்.

வெளியில் போய்த் தேடி எப்படி இருப்பார் களோ, ஏதா இருப்பார்களோ என்று சந்தேகப்படுவ

தற்கு இல்லாமல் நன்ருய்த் தெரிந்தவர்களாகவும் வெகு நெருங்கிப் பழகினவர்களாகவும் கண்ணெதிரில் இரண்டு பிள்ளைகள் இருந்தார்கள். கண்ணன் ஒருவன்; பூவராகன் மற்றொருவன். இருவரும் தினம் வீட்டுக்கு வந்துபோய்க் கொண்டிருக்கிறவர்கள்.

கண்ணன் தகப்பனும் சாரங்கபாணி ஐயங்காரும் ரொம்பநாள் சிநேகம். கண்ணன் அட்வொகேட்டாய் தகப்பனுரோடு கூடவே தொழில் நடத்தி வந்தான். தினம் சாயந்தரம் அவன் சாரங்கபாணி ஐயங்கார் வீட்டுக்குவந்து இரண்டு மூன்றுமணிநேரம் அவருடன் பேசிக்கொண்டிருப்பான். தான் ஸப் ஜட்ஜாயிருந்தபோது வக்கீல்கள் கண்களில் விரலை விட்டு ஆட்டினது, டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜுகளோடு சண்டை போட்டது, கடைசியில் ஹைகோர்ட்டு டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜுக்கு சூடு கொடுத்தது—இவைகளைப் போன்ற கதைகளையெல்லாம் சாரங்கபாணி ஐயங்கார் வெகு பெருமையாகச் சொல்லுவார். கண்ணன் ரொம்ப ஸ்வாரசியமாய்க் கேட்டுக் கொண்டிருப்பான். சாரங்கபாணி ஐயங்காருக்குக் கண்ணனைப் பற்றி வெகு நல்ல அபிப்பிராயம் ஏற்பட்டது. ஸரோஜாவும் அவனேடு சிரிப்பும் விளையாட்டுமாகப் பழகுவாள். அவளும் பட்டணுவும் தனியாய் இருக்கும் பொழுது கண்ணன் தினம் அவர்கள் வீட்டுக்கு வந்து போய்க்கொண்டிருப்பது வழக்கம். வீட்டு மனுஷ்யன் போலவே கண்ணன் பாவிக்கப் பட்டுவந்தான்.

சாரங்கபாணி ஐயங்கார் மாம்பலத்திற்கு வருவதற்கு முன்னிருந்து அவர் வந்தபிறகும் தினம் பூவராகனும் அவர்கள் வீட்டிற்கு வந்து வெகு சுவாதீன

மாய்ப் பழகி வந்தவன். ஸரோஜா அவனோடு சாதா ரணமாகப் பேசிக்கொண்டிருப்பாளே தவிர, கண்ணனோடு பழகும் உற்சாகம் அவனிடத்தில் அவள் காட்டுவதில்லை. பூவராகன் பி. ஏ. பாஸ் செய்துவிட்டு வீட்டோடு இருந்துகொண்டு, அவன் தகப்பனார் செய்து வந்த வியாபாரத்தைச் செய்து வந்தான். அவன் தகப்பனார் பெரிய ஜவுளிக்கடை வைத்திருந்தார். வட்டிக்குப் பணம் கொடுத்து ஏராள லேவாதேவியும் செய்துவந்தார். அவர் கையில் அகப்பட்டுக் கொண்டால் மீளுவது ஏது என்று ஜனங்கள் சொல்லுவார்கள். நல்ல புள்ளி என்று ஏற்பட்டால் ஜவுளி தினிசுகளை ஏராளமாகக் கடனுக்குக் கொடுப்பார். அதற்குப் 'புரோநோட்டு' ஒரு வட்டி ஒன்றே கால் வட்டி என்று எழுதி வாங்குவார். ஜவுளி விற்பதில் கொள்ளை லாபம்; அதற்குமேல் வட்டியில் வேறு கொள்ளை. இம்மாதிரி கடனை ஏற்றி, கடன்காரன் சொத்துக்களையெல்லாம் கைப்பற்றிவிடுவார் என்று சொல்லுவார்கள். ஐந்தாறு லக்ஷங்களுக்கு மேல் அவருக்குச் சொத்து இருப்பதாக மதிப்பிடுவார்கள்.

நான்கு வருஷங்களுக்கு முன் அவர் இறந்துவிட்டார். அவருக்குப் பூவராகன் ஒரே பிள்ளை. அவன் தகப்பனார் தொழிலை ஏற்றுக்கொண்டு அதை அவர் செய்து வந்த முறை சிறிதும் தவருமல் செய்து வந்தான். அவன் பேசுகிற பேச்சில் தேன் ஒழுகும். "வீணாய் ஊரில் அபவாதம் சொல்லுகிருர்களே தவிர, ரொம்ப நல்ல பிள்ளை. சமயத்தில் உபகாரம் செய்வதற்கு அவனைப் போல் இல்லை. பணத்தில் ஜாக்கிரதையாய் இருக்கிருனென்ருல், இருக்க வேண்டியது தானே? என்ன பிசகு?" என்று சொல்லுபவர்களும்

உண்டு. பூவராகனைச் சாரங்கபாணி ஐயங்காருக்கு மாம்பலம் வந்தபிறகுதான் தெரியும். அவனும் சாரங்கபாணி ஐயங்காரோடு வெகு சிநேகமாய்ப்பேசிக்கொண்டிருப்பான். "அவனும் நல்ல பிள்ளை, நல்ல புத்திசாலி. வயதில் சிறியவனுனலும் உலகம் அறிந்தவன்" என்று சாரங்கபாணி ஐயங்கார் சொல்லுவார்.

கண்ணன் வருவதும் பூவராகன் வருவதும் ஸரோஜாவை உத்தேசித்தே என்று சாரங்கபாணி ஐயங்கார் நினைத்தவரல்ல. பட்டண்ணுவும் அவர்களும் வெகு சிநேகமானபடியால் அவனைத் தேடி அவர்கள் வருகிறுர்கள் என்றும், நடுவில் தன்னேடு பேசிவிட்டுப் போகிறுர்கள் என்றும் அவர் நினைத்திருந்தார். பூவராகன் பட்டண்ணுவிடத்தில் வேலையாய் வருகிறுனென்றும் கண்ணன் தன்னை உத்தேசித்து வரக்கூடும் என்றும் ஸரோஜா அபிப்பிராயப் பட்டிருந்தாள். சாயந்தர வேளைகளில் கண்ணன் வருவதை அவள் ஆவலுடன் எதிர்பார்ப்பாள். ஒரு நாள் அவன் வராவிட்டால் மனம் வருந்துவாள். கண்ணன் அந்த வீட்டுக்கு வருவது பூவராகனுக்குப் பிடிக்காது. பூவராகன் வருவது கண்ணனுக்குப் பிடிக்காது. ஆனுல், அங்கே சந்திக்கும்போது இருவரும் வெகு சிநேகமாகவே பேசிக்கொள்ளுவார்கள்.

சாரங்கபாணி ஐயங்கார் ஸரோஜாவோடு கீழே பேசிக் கொண்டிருக்கும் பொழுது படபடவென்று துரிதகாலத்தில் செருப்பு ஓசைப்படும்படி பட்டண்ணு மாடியிலிருந்து கீழிறங்கி வந்தான். "நீங்கள் இப்போது எங்கேயாவது போகப் போகிறீர்களா? பிராட்வே வரைக்கும் காரைக் கொண்டுபோய்விட்டு வருகிறேன்" என்ருன்.

அதைக்காதில் வாங்கிக்கொள்ளாமல், "ஸரோஜா ஏண்டா கல்யாண விஷயமாய் இப்படி மொண்டித் தனம் பண்ணுகிருள்?" என்று தகப்பனர் கேட்டார். ஸரோஜா அங்கிருந்து போய்விட்டாள். ஆனல், மறைவிலிருந்து அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தாள். "அது ஏனே! நான் என்னத்தைக் கண்டேன்? நீங்கள் கேட்டுக்கொண்டே இருந்தால் அவள் எதையோ சொல்லிக்கொண்டே இருக்கிருள். ஏதாவது ஒரு பிள்ளையைப் பார்த்து முடிவு பண்ணுவதை விட்டு அவளைக் கேட்பது என்ன?" என்ருன் பட்டண்ணு.

"கண்ணனைத்தான் முடிவு செய்யப் பாரேன். அதோடு பூவராகனேடும் பேச்சுக் கொடுத்துப் பாரேன். நோக்கங்கள் எப்படி இருக்கின்றன என்று தெரிந்தால் அப்புறம் மேல் யோசனை செய்வோம் இரண்டு பேருந்தான் உனக்கு ரொம்ப வேண்டியவர் களாச்சே!" என்ருர் தகப்பனர்.

"எனக்கு இரண்டுபேரும் வேண்டியவர்கள்தான். ஆனல் கண்ணன் வேண்டாமப்பா. ஆஷாடபூதி மாதிரி நடந்துகொள்ளுகிருனே தவிர, உண்மையில் அவன் அயோக்கியன் என்று என் அபிப்பிராயம். பூவராகன் அவனைவிட மேல். அவனையே பார்க்கிறது தானே?"

"கண்ணன் எப்படிடா அயோக்கியன்? சொல்லு கிறதை விட்டுச் சொல்ல வேண்டுமோ இல்லையோ?"

"வேண்டுமானல் அவனைப் பாருங்கள். எனக் கென்ன? அதற்கு நான் வேண்டியதில்லை. நீங்களே அவன் தகப்பனரோடு பேசலாம். பூவராகனை

முடிக்கிறது மேல் என்று எனக்குத் தோன்றுகிறது. அப்புறம் உங்கள் இஷ்டம்" என்றான் பட்டண்ணு.

"அவனையுந்தான் பாரேன். பிறகு எது சரிப்படு கிறதோ அதையும் முடித்துக் கொள்ளுவோம்" என்றார் தகப்பனார்.

"முன்னாடி நீங்கள் அவனை நேரில் கூப்பிட்டு ஒரு பேச்சுப் பேசுங்கள். அப்புறம் நான் பார்த்துக்கொள் கிறேன். ஜாதகம் இருக்கிறதா என்று ஒரு பேச்சுக் கேட்டுவையுங்களேன். பின்னாடி நமக்கு இஷ்டமில்லை என்றால் ஜாதகம் சரிப்படவில்லை என்று சொல்லி விடுகிறோம். நான் காரை எடுத்துக்கொண்டு போகட்டுமா, அப்பா?" என்றான்.

"இல்லையடா, நான் இதோ புறப்பட்டுக்கொண் டிருக்கிறேன். அவசரமாய்ப் போகவேண்டுமென்றால், பஸ்ஸில் போ. கார் எனக்கு வேண்டும்" என்றார்.

"சரி, அப்புறம் பார்த்துக்கொள்ளுகிறது" என்று பட்டண்ணு மாடிக்குப் போய்விட்டான். சாரங்கபாணி ஐயங்காரும் வெளியில் போய்விட்டார்.

ஸரோஜா வெகு கோபத்தோடு மாடிக்குப் போனாள். "உங்க பூவராகனை எவ்வளவு வேண்டுமானாலும் ஏழு உலகத்துக்கு மேலே நீ புகழ்ந்துகொள். எதற்காகடா கண்ணனை அயோக்கியன் என்று சொல்லி அப்பா மனசைக் கெடுக்கவேண்டும்? அந்தமாதிரி பேசினையானால் எனக்குக் கெட்ட கோபம் வரும். யார் அயோக்கியன், நீதான் சொல்லேன்" என்று ஸரோஜா பட்டண்ணுவைக் கடுமையாய்க் கேட்டாள்.

"இனிமேல் சொல்லவில்லை; அவ்வளவுதானே, போயேன்."

"ஜாதகம் வாங்கிக் கொடுக்கப் போகிருயோ?"

"ஜாதகம் வாங்கிக் கொடுத்தால் கல்யாணமே முடிவு செய்துவிட்டது போலேயா? பார்க்கட்டுமே' பேச்சு நடந்து கொண்டிருக்கட்டுமே? உனக்கு அதில் என்ன குறை வந்துவிடுவது? பேசாமல் போய் உன் வேலையைப் பார்!"

சாரங்கபாணி ஐயங்கார் வெளியில் போய் வந்தார். தங்கத்தைக் கூப்பிட்டார்.

"தங்கம், எங்கே போனாலும் அங்கங்கே அப்படித் தான் இருக்கிருப் போலிருக்கிறது. கண்ணன் தகப்பனுரைப் பார்த்தேன். கண்ணனுக்குக் கல்யாணம் செய்யவில்லையா என்று பொதுவாகக் கேட்டேன். அவன் அழாத குறையாய்ச் சொல்லுகிருன். கண்ணனும் இன்னும் இரண்டு மூன்று வருஷங்களுக்குக் கல்யாணப் பேச்சை எடுக்காதீர்கள் என்கிருனும். 'அவன் பிடிவாதம் செய்யாவிட்டால், உன் பெண் ஸரோஜாவைக் கொடுக்கும்படி எப்பொழுதோ கேட்டிருப்பேனே? வாயைத் திறப்பதற்கில்லாமல் அல்லவா இருக்கிறேன்?' என்ருன். இது எப்படி இருக்கிறது?"

"எப்படியோ போகிறது. நீங்கள் சந்தியாவந்தனம் பண்ணிவிட்டுச் சாப்பிட வாருங்கள். எதற்கும் வேளை வரவில்லை. இல்லாவிட்டால் இந்தத் துர்ப்புத்தி ஏன் வருகிறது?" என்ருள் தங்கம்.

2

# பட்டண்ணுவின் கடன்

கல்யாணம் வேண்டாமென்று அசட்டுப் பேச்சுகள் பேசும் பெண்கள் ரகத்தில் ஸரோஜா சேர்ந்தவளல்ல. இதுவரையில் நடந்து வந்திருக்கும் உலக முறையைத் தழுவும் யோசனையிலேயே இருந்தவள் தான். கல்யாணம் செய்துகொள்ள ஆசையுள்ளவள். ஆனால், அவளும் பட்டண்ணுவும் தனியாய் இருக்கும்பொழுது தப்புதண்டா வேலைகள் செய்துவிட்டு அதிலிருந்து நீக்கிக்கொள்ள முடியாமல் கூழில் விழுந்த ஈக்கள் மாதிரி அவர்கள் தவித்துக்கொண்டிருந்தார்கள். கல்யாண விஷயமாய்ப் பட்டண்ணுவுக்குத் தான் கொடுத்த வாக்கை மீறக் கூடாது என்கிற ஓர் அசட்டு வைராக்கியம் மாத்திரம் ஸரோஜாவின் மனசில் திடமாய் நிலைநின்றிருந்தது.

ஸப் ஜட்ஜ் சாரங்கபாணி ஐயங்கார் பெருத்த சம்பளம் வாங்கி, ஏராளப்பணம் சேர்த்திருந்தும், பண விஷயத்தில் வெகு கிருபணர். வெளித்தோற்றத்துக்குப் பெரிய அந்தஸ்தாய் வாழ்க்கை நடத்துவதுபோல் காட்டிக்கொள்வாரே தவிர, ஒரு காசு அநாவசியமாய்ச் செலவழிந்துவிட்டால் உயிரை விட்டுவிடுவார். "வெளியார் யாராவது வீட்டுக்கு வந்தால் கொஞ்சம் ஜம்பமாய்ச் செலவழித்துக் காட்ட வேண்டும். அந்தச் செலவையெல்லாம் பின்னுடி நாம் வீட்டில் இரண்டு தினங்களுக்குச் சிக்கனப்படுத்திச் சரித்தட்டிக் கொள்ளவேண்டும்" என்று மனைவிக்குப் பாடம் கற்றுக்கொடுப்பார். பிள்ளை மாம்பலத்திலிருந்து அரையணு கார்டில் எழுதவேண்டியதை ஒன்றரை

யணு கவரில் எழுதிவிட்டால், "இவனெல்லாம் பிழைக்கிற பிள்ளையா? எதற்காக அரையணுவில் போவதை ஒன்றரையணுச் செலவழித்துச் செய்யவேண்டும்? கொஞ்சமாவது ஞானம் வேண்டாம்?" என்று மனைவியிடம் கடிந்து சொல்வதுமின்றி, பிள்ளைக்கு எழுதும் மறுதபாலிலும் அதைச் சுட்டிக்காட்டிப் பணத்தின் அருமையைப்பற்றி ஓர் அத்தியாயம் எழுதுவார்.

அவர் கார்டு தவிர வேறு எதுவும் எழுதுவதில்லை. பண விஷயத்தில் தலையிடுவதற்கு அவர்சம்சாரத்துக்கே இடம் கொடுக்கமாட்டார். வீட்டுக்கே ஏதாவது வேண்டியிருந்தால் அவரைக் கேட்கப் பயந்துகொண்டு சில்வாணமாய் ஏதாவது பணமிருந்தால் அதிலிருந்து அவள் வாங்கிக்கொள்வாள். மாம்பலத்தில் தனிக் குடித்தனம் வைக்கும்பொழுது அங்கு அவருடைய பிள்ளை பெண் தங்கை இம்மூவர்களுக்கும் எவ்வளவு செலவு பிடிக்கும் என்று ஒரு புள்ளி விவரம் தயார் செய்தார்.

"அடே பட்டண்ணு, சிறு பசங்களாச்சே என்று புள்ளி விவரத்தைத் தாராளமாகவே போட்டிருக்கிறேன்; ஜாக்கிரதையாய்க் குடித்தனம் பண்ணினீர்களானல், இதிலேயே மாதம் ஐந்து ஆறு மிகுந்து விடும். அன்றன்றைய செலவுக்குக் கணக்கு வைக்க வேண்டும். மாதக் கடைசியில் அந்தக் கணக்கை எனக்கு அனுப்பவேண்டும். அந்தக் கணக்கு வந்தால் தான் அடுத்த மாதப் பணம் அனுப்புவேன். சிங்காரி! கன்னு பின்னு என்று பசங்கள் செலவழிக்காமல் நீ பார்த்துக் கொள்ளவேண்டும்" என்று தங்கைக்கும் ஜாக்கிரதை சொல்லிப் பிள்ளையையும் பெண்களையும் மாம்பலத்தில் கொண்டுவந்து விட்டார். இவர்களுக்கு

அனுப்பும் மாதப்பணம் பாதி மாதத்துக்கே போதாது. இரண்டொரு தரம் அவர்கள் முறையிட்டபோது, "உங்களுக்கு எதுக்கடா மேலே பணம்? செலவழிக்கிற தென்றால் எவ்வளவு வேண்டுமானாலும் செலவழிக்க லாம். அதெல்லாம் கூடாது. நெருக்கிப் பிடித்து இதற்குள்ளேயே செலவை அடக்கிக்கொள்ள வேண்டும். இவ்வளவு தாராளமாய் நான் கொடுக் கும்பொழுதே மூக்கால் அழுகிறீர்களே. இன்னும் சில பேரைப்போல நானும் பணத்துக்குக் கடிந்தால் என்ன தான் சொல்லுவீர்களோ?" என்று அதட்டுவார்.

"அப்பா என்ன தாராளம்! அதைச் சொல்லிக்கொள்கிறது வேறு!" என்று பட்டண்ணு வும் ஸரோஜாவும் அவருக்குப் பின்னடி போய்ச் சிரித்துக்கொள்வார்கள்.

இரு சிறுவர்களும் சென்னப்பட்டணத்துக்குப் புதிசு. சென்னப்பட்டணத்தில் எங்கே பார்த்தாலும், காப்பி ஹோட்டல், சினிமா, விதம் விதமான சாமான் கள். பணமும் அந்தஸ்தும் உள்ள ஸப்ஜட்ஜ் வீட்டுச் சிறுவர்கள் என்று சுற்றுப் பக்கங்களில் இவர்க ளுக்கு மதிப்பு வேறு. பள்ளிக்கூடங்களுக்கு வரும் பெண்களும் பிள்ளைகளும் எப்படி எப்படியோ அழகு பண்ணிக்கொண்டு வருகிறார்கள், மனம் போனபடி பணத்தைச் செலவழிக்கிறார்கள். இவைகளையெல்லாம் பார்த்திருந்து பட்டண்ணுவுக்கும் ஸரோஜாவுக்கும் அந்தஸ்துக் குறைந்து நடந்துகொள்ள வெட்கமாக இராதா? முதல் மாதங்களிலேயே செலவைச் சிறிது தாராளப்படுத்திக் கொண்டார்கள். இந்தப் புஸ்தகம் வேண்டும், அந்தப் புஸ்தக வேண்டும்; ஸரோஜாஒரு

வாரம் காயலாகப் படுத்துவிட்டபடியால், ரிக்ஷாச் செலவு, டாக்டர் செலவு, எல்லாம் பத்துப் பன்னிரண்டு ரூபாய்க்குமேல் ஆகிவிட்டது—என்று இம்மாதிரி பொய்கள் எழுதி, கொஞ்சம் கூடத் தருவித்துக்கொண்டார்கள். அவர்கள் செலவுக்கு இது எந்த மூலைக்கு?

ஸப்ஜட்ஜ் வீட்டுச் சிறுவர்கள் என்று சிநேகிதர்கள் இவர்களை ஜவுளிக்கடைக்காரர்களுக்கு அறிமுகப்படுத்தினார்கள். பாண்டி பஜாரில் எங்கே போனாலும் இவர்களுக்குக் கடன் பெயர்ந்துகொண்டிருந்தது. இஷ்டப்படி சாமான்கள் வாங்கினார்கள். மாதப்பணத்தில் கொஞ்சம் கடனுக்குக் கொடுக்கிறது, போதாததற்கு மேலும் எங்காவது கடன் வாங்குகிறது; அங்கே வாங்கி, இங்கே கொடுக்கிறது; இங்கே வாங்கி, அங்கே கொடுக்கிறது; இப்படிச் சில மாதங்கள் பித்தலாட்டம் செய்து வந்தார்கள். இவைகளுக்கு ஸரோஜா அதிகமாகப் போவதில்லை. கூட இருந்த அத்தைக்குப் பயந்து ஊர் சுற்றுமல் வீட்டோடு இருந்து ஒழுங்காகவே நடந்து கொண்டுவந்தாள். ஆனால், அவள் யோசனையைக் கேட்காமல் பட்டண்ணு ஒன்றையும் செய்யமாட்டான். ஒருவருக்கொருவர் அவ்வளவு உள்ளுளவாகவும் அந்தரங்க சிநேகிதர்களாகவும் இருந்தார்கள்.

பட்டண்ணுவுக்குப் பூவராகன் என்ற சிநேகிதன் ஏற்பட்டான். அவன் அடிக்கடி இவர்கள் வீட்டுக்கு வரத் தலைப்பட்டான். அவன் சிநேகிதம் ரொம்பவும் அநுகூலமாக இருந்தது. எப்பொழுது வேண்டுமானாலும் ஐம்பது நூறு கடன் கொடுப்பான். ஸரோஜா பூவராகனுடன் ரொம்பவும் சகஜமாய்ப் பேசிக்கொண்டிருப்பாள். ஆனால் பட்டண்ணு இல்லாதபோது அவன் வந்தால் அவனை அத்தையாவது ஸரோஜாவாவது

தெருவோடு பேசி அனுப்பிவிடுவார்கள். பட்டண்ணு வீட்டில் இருக்கும்போது பூவராகன் வீட்டில் வந்து மணிக்கணக்காய்ச் சிரிப்பும் தமாஷுமாய் அரட்டை அடித்துக்கொண்டிருப்பான். அவன் வீட்டுக்கு வருவது முக்கியமாய் ஸரோஜாவை உத்தேசித்தே.

அவர்கள் வீட்டுக்கு அடிக்கடி வருபவர்களில் கண்ணன் மற்ரொருவன். ஆனால் அவன் விஷயம் வேறு. கண்ணனுடைய தகப்பனார் அட்வொகேட். கோவிந்தராஜன் குடும்பத்துக்கும் சாரங்கபாணி ஐயங்கார் குடும்பத்துக்கும் அடிநாள் முதற் கொண்டு சிநேகம். இரு குடும்பத்தவர்களும் பக்கத்துப்பக்கத்துக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள். பெண்கள் பிள்ளைகள் எல்லாரும் வெகு நாட்களாக நெருங்கிப் பழகியவர்கள். "ஏண்டா, கண்ணு?" என்றுதான் அத்தை அவனைச் சுவாதீனமாய்க் கூப்பிடுவது. பட்டண்ணு இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவர்கள் வீட்டில் அவனுக்குச் சுவாதீனமுண்டு. ஒருவரும் இல்லாவிட்டால் அத்தையோடு பேசிக்கொண்டிருப்பான் வெகு நாளைப் பழக்கத்தினால் ஸரோஜாவையும் அவன் எப்பொழுதும் தமாஷ் பண்ணிக்கொண்டேயிருப்பான். ஸரோஜாவுக்கும் அதில் சந்தோஷம். அத்தைக்கு அதில் அதற்கு மேல் திருப்தி. "கண்ணனுக்குத்தான் நீ. அவன் உன்மேல்தான் கண்ணாய் இருக்கிறான்" என்று அத்தையும் சில சமயங்களில் ஸரோஜாவைப் பரிகாசம் செய்வாள்.

பூவராகன் தளராமல் பட்டண்ணுவுக்குப் பணம் கொடுத்துக் கொண்டுவந்தான். பட்டண்ணுவும் கலரும் ஸோடாவும் விம்டோவுமாக வாங்கி வெகு குஷியாய் இருந்துவந்தான். பெருந்தரத்தில் பட்டண்ணு

செலவு செய்து வருவதைக் கண்ணனும் கவனித்தான். கடன் வாங்கிச் செலவழிக்கிறார்கள் என்று அவன் சிறிதும் சந்தேகிக்கவில்லை. பெரிய உத்தியோகஸ்தன் பிள்ளைகள், தகப்பனார் கடிசாயிருந்தாலும் பிள்ளைகளுக்குத் தாராளமாய்ப் பணம் அனுப்புகிறார் போலிருக்கிறது-என்றுதான் நினைத்துக்கொண்டிருந்தான்.

இவர்கள்வீட்டுக்குக் கண்ணன் அடிக்கடி வருவது பூவராகனுக்கு எரிச்சல். அந்த வீட்டில் தன்னைவிட அதிக சிநேகமாக மற்றொருவன் இருக்கக்கூடாது என்பதுதான் அதற்குக் காரணம். ஒரு நாள் பண விஷயமாகப் பட்டண்ணாவிடம் பேசுவதற்குப் பூவராகன் அங்கே போனபோது கண்ணன் அங்கு உட்கார்ந்திருந்தான். அதைக் கண்டு எரிச்சல் கிளம்ப, பூவராகன் முகத்தை 'உம்' என்று வைத்துக்கொண்டு நின்றான். கண்ணன் வீட்டுக்குக் கிளம்பும்போது அவனை நினைத்து உரலை இடிப்பதுபோல் அவன் பின்னாடியே போய், "ஏண்டா கண்ணா? என்னையும் எங்கப்பாவையும் அயோக்கியர்கள் என்று பத்துக் கக்ஷிக்காரர்களை வைத்துக்கொண்டு உங்கப்பா சொன்னாராமே. எங்களிடத்தில் என்ன அயோக்கியத்தனத்தையடா அவர் கண்டுவிட்டார்? நாங்கள் உன் அப்பாவிடத்தில் எத்தனை வருஷக் கக்ஷிக்காரர்களடா! இப்படிக்கூடப் பேசலாமாடா?" என்றுவெகு கோபமாய்க் கேட்டான்.

"போடா முண்டத்தில் பொறுக்கி எடுத்த முண்டம்! உங்களைப்பற்றி யாரடா பேசியது? கிருஷ்ணசாமி ஐயங்கார், ஓங்க அப்பா ஒத்தர்தானோ? எங்கப்பா கக்ஷிக்காரருக்கு ஒரு சம்பந்தி; அவர் பெயர் கிருஷ்ண சாமி ஐயங்கார். அவரைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். அந்தக் குல்லாவை நீ ஏண்டா தலையில் போட்டுக்

கொள்ளுகிறாய்?" என்று வெகு ஸ்வாதீனத்தோடு கண்ணன் பூவராகனைத் திட்டினான்.

"இப்படி என்று சொன்னார்களடா என்றால்?"

"எவன் சொன்னானோ அவன் தாடியைப் போய் உலுக்கு" என்று தமாஷாய்ப் பேசிவிட்டுக் கண்ணன் போய்விட்டான்.

பூவராகன் சாந்தமாய்ப் போகிறவன்போல் திரும் பினானே ஒழிய, கண்ணன் பேரில் இருந்த ஆத்திரம் அவனுக்கு நீங்கவில்லை. கண்ணனுக்குப் பூவராகன் பேரில் அப்படியே. ஆனால் வெகு அந்நியோந்நியர்கள் போல் பேசிக்கொள்வார்கள்.

பூவராகன் பட்டண்ணாபேரில் கடன் ஏற்றினான். எப்பொழுது கேட்டாலும் பணம் கொடுக்கிறது; அதற்கு அவனிடமிருந்து ஒரு சீட்டு எழுதி வாங்கிக் கொள்ளுகிறது; சீட்டுகளை எல்லாம் சேர்த்து ஒரு புரோநோட்டாய் எழுதி வாங்கிக் கொள்ளுகிறது. புரோநோட்டு கடன் சீட்டுகள் மொத்தத்தின் கடன் என்று புரோநோட்டில் இராது. சீட்டுகளும் அவனிடம் தங்கி இருக்கும்; புரோநோட்டும் அவனிடம் தங்கி இருக்கும்.

கடைசியாகப் பட்டண்ணா ஆயிரத்து முந்நூறு ரூபாய் கொடுக்க வேண்டுமென்று அவனிடம் பூவரா கன் ஒரு புரோநோட் வாங்கிக்கொண்டான். "ரொம்பத் தொகை சேர்ந்துவிட்டதேடா? இதை எப்பொழு தடா நீ கொடுக்கிறது?" என்று பூவராகன் கேட்டான்.

"நான்தான் இதற்கு முன்னாடியே உனக்குச் சொல்லி யிருக்கிறேனேடா. கடன் என்று சொன்னால் எங்கப்பா என்னைக் கொன்றுவிடுவார். அவரிடத்தில் வேறு எதையாவது சொல்லிப் பணத்தைப் பிடுங்க

வேண்டும். இப்போதுதான் ஒரு 'எஸ்டேட்' வாங்கிப் பணத்தை எல்லாம் செலவழித்து விட்டிருக்கிருர். இன்னும் நாலைந்து மாதங்களில் கொடுத்து விடுகிறேனடா. பணம் எங்கும் போய்விடாது. பயப்படாதே. அதற்கு நடுவில் வெளியில் யாருக்காவது தெரியப் போகிறது" என்று பட்டண்ணு சமாதானம் சொன்னுன்.

"ஸரோஜாவைப் பற்றி நான் சொன்னேனே. அதைப்பற்றி அப்பாவுக்குக் கடிதம் எழுதிஞயாடா? ஏதாவது பதில் எழுதிஞரா?"

"அவருக்கு எழுதியிருக்கிறேனடா. எல்லாம் அடுத்த ஆனிதான் என்று பதில் எழுதியிருக்கிருர். 'எஸ்டேட்' வாங்கினதில் பணம் எல்லாம் தொலைந்து விட்டது. மேலும் வர வேண்டிய பணம் அவர் கைக்கு வரவில்லை. உனக்குப் பெண்ணைக் கொடுக்கிறதென்ருல் நீ சும்மா பண்ணிக்கொள்ளப் போகிருயா? பணக்காரன்; கையில் ஆருயிரம் ஏழாயிரம் கொண்டு வா என்று கேட்கமாட்டாயா? உனக்குமேல் எனக்கு அதில் அக்கறை இருக்கிறதடா. உனக்குக் கையில் கொடுக்கும் பணத்தில் இரண்டாயிர ரூபாய் தூக்கிச்சொன்ஞல் அதைக்கொண்டு உன் கடனும் அடைந்து போய்விடுகிறது."

"அது சரிதான், ஆனுல் அப்படித்தான் ஏதுக்கு? மச்சான் - மாப்பிள்ளை என்று நாம் வந்துவிட்டால் இந்தக் கடனைத்தாஞ உன்னிடத்தில் நான் வாங்கப் போகிறேன்?" என்று பூவராகன் ஒரு தித்திப்பையும் காட்டினுன்.

கடன் மொத்தம், நடந்த விஷயங்கள் எல்லாம் ஸரோஜாவுக்குத் தெரியும். பட்டண்ணு அவளிடத்

தில் சொல்லாமல் இருப்பதில்லை. மற்ற எந்த உயிருள்ள பிராணிக்கும் தெரியாது. "அவளைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளுகிறது என்றால் உனக்குத்தான் என்ன வாட்டமடி? பிள்ளை நன்றாயிருக்கிறான்; பணக்காரன்; ஒரே பிள்ளை. வீட்டில் வேறு ஒரு பிக்கல் பிடுங்கல் இல்லை. அம்மா ஒருத்தி எங்கேயோ விழுந்து கிடக்கிறாள். தங்கை ஒருத்தி கட்டிக் கொடுத்தால் எங்கோ ஓடிப் போய்விடப்போகிறாள். என்ன ஆக்ஷேபம் சொல்லேன்?" என்றான்.

"பட்டண்ணா! தப்பு செய்துவிட்டு அகப்பட்டுக் கொண்டு விழிக்கிறோம், உண்மை. ஆனாலும் அந்தப் பேச்சை மாத்திரம் என் காதில் போடாதே. ஏன் என்றும் கேட்காதே. என் மனம் கொதித்துக் கொண்டிருக்கிறது. ஒரு வாக்குறுதி மாத்திரம் கொடுக்கிறேன். இந்தக் கடன் மூடிகிறவரையில் நான் கல்யாணம் பண்ணிக்கொள்கிறதில்லை. உன் மனசை அறிந்தேன்; கல்யாணப்பேச்சை இழுத்துக் கொண்டுவந்தால் கடன் தொந்தரவு சற்று அடங்கி இருக்கும் என்று உன் எண்ணம். உன் இஷ்டப்படி செய்; கடனை எப்படி அடைக்கப் போகிறோமோ அந்த வழியே எனக்குத் தெரியவில்லை. அப்பாவிடத்தில் உடைத்துவிடுவேனோ என்னவோ என்று நீ பயப்பட வேண்டாம். நான் பிராணன் போனாலும் அம்மாதிரி செய்யமாட்டேன். நீ ஒருத்தன் தானா குற்றவாளி? நானுந்தானே? ஆகையினால் பயப்படாதே. இன்னும் மூன்று மாதங்களானால் அப்பா இங்கேயே வந்துவிடப் போகிறார். என்ன ஆகப்போகிறதோ! எனக்கு இரவும் பகலும் இதுவே விசாரமாய்ப் போய்விட்டது" என்றாள் ஸரோஜா.

வந்தது வரட்டும் என்று தகப்பனுரிடத்தில் சொல்லிவிட்டால் முதலில் இரண்டு திட்டுத் திட்டினுலும் தொல்லை தீர்ந்துவிடுமே என்கிற தைரியம் இரு சிறுவர்களுக்கும் ஏற்படவில்லை. அதற்குத் தகப்பனுர் முதல் ஜவாப்தாரி அல்லவா?

## 3
## வாய்ப்பூட்டு

ஸரோஜாவுக்கும் பட்டணுவுக்கும் பூவராகன் கடன் வேதனையே பெரிய வேதனையாய் இருந்தது. தகப்பனுருக்குத் தெரிந்துவிடப் போகிறதே என்று ஒவ்வொரு க்ஷணமும் திகிலில் மூழ்கிப் போயிருந்தார்கள். பூவராகன் வரும்போதெல்லாம் அவன் ரகசியமாய் மாடிக்கு அழைத்துக்கொண்டு போய்விடுவான். அவன் ரூமில் கதவைத் தாழிட்டுக்கொண்டு இருவரும் அந்தரங்கமாய்ப் பேசிக்கொண்டிருப்பார்கள். அநேக சமயங்களில் ஸரோஜா வெளியில் நின்றுகொண்டு உள்ளே என்ன பேசுகிருர்கள் என்று ஒட்டுக் கேட்டுக்கொண்டு இருப்பாள். தகப்பனுருக்குத் தெரியாமல் இந்தக் கடனை எப்படி அடைக்கிறது என்கிற விதமே ஸரோஜாவுக்கும் பட்டணுவுக்கும் தெரியவில்லை. தள்ளுகிற வரையில் தள்ளட்டும், போகப் போகப் பார்த்துக்கொள்ளலாம் என்கிற குருட்டுப் போக்கிலேயே இருந்தார்கள். ஒவ்வொரு சமயங்களில், "நாம் எப்படிடா இதைக் கொடுத்து அடைக்கப் போகிருேம்? மெள்ள அம்மாவிடத்தில் நாசுக்காய்ப் 'புரசல்' விடலாம். அவள் மூலமாய்

அப்பாவுக்குத் தெரிந்தால் ஒருநாள் இருநாள் இரையப் போகிருர். அப்புறம் சரியாய்ப் போய்விடுகிறது. வேறு என்னடா வழி இருக்கிறது?" என்று ஸரோஜா பட்டண்ணுவிடம் சொல்லிப் பார்த்தாள்

"வேண்டாமடி, வேண்டாமடி! அப்பாவுக்குத் தெரிந்துவிட்டால் நம்மைக் கொன்றுவிடுவார். அவர் சங்கதிதான் தெரிந்திருக்கிறதே. நீ சொல்வதாய் இருந்தால் நான் இப்பொழுதே எங்கேயாவது கண்காணுத இடத்துக்கு ஓடிப்போய் விடுகிறேன்" என்று பட்டண்ணு நடுங்கிக் கதறினன்.

சிறு பிள்ளைகளும் பெண்களும் உலகத்தில் எத்தனையோ விதமான தப்புகள் செய்வது இயல்பு. பெற்ருேர்களிடத்தில் அவைகளைத் தெரியப்படுத்துவதற்கோ ஒப்புக்கொள்வதற்கோ வேண்டிய தைரியத்தை அவர்களுக்கு உண்டுபண்ணும்படி நடந்துகொள்வது பெற்ருேர்கள் விவேகத்தைப் பொறுத்தது.

சாரங்கபாணி ஐயங்கார் முரட்டுப் பேர்வழி. இந்த ஆயிரத்து முந்நூறு ரூபாயோடு ஆஸ்தி பூராவுமே போய்விட்டதாக எகிறிக் குதிப்பார். அதை நினைத்து இளைஞர்கள் இருவரும் நடுக்கங்கொண்டு கலங்கி நின்ருர்கள். அவர்கள் முகத்தில் தென்பே மழுங்கிப்போய்க் கிடந்தது.

தகப்பனர் ஸரோஜாவின் கல்யாண விஷயமாய்ப் பட்டண்ணுவிடம் பேசினதற்குமறுதினம் பூவராகனை, "ஜாதகம் இருக்கிறதா?" என்று கேட்டார். பூவராகனுக்கு மகிழ்ச்சி பொங்கி உடல் பூரித்தது. பட்டண்ணுவிடம் அவன் அதைச் சொன்னன். "நான் எல்லாம் அப்பாவிடம் சொல்லியிருக்கிறேனடா. எல்லாவற்றையும் நான் முடித்துவைக்கிறேன், போ" என்று

அவன் பூவராகனுக்கு உற்சாகம் கூறினன். 'இப்படி இன்னும் இரண்டு மூன்று மாதங்கள் தள்ளலாம். அப்புறம் பார்த்துக்கொள்ளுவோம்' என்று தனக்குள் சற்றுத் தைரியத்தையும் அடைந்தான். 'ஸரோஜாவே கடைசியில் சம்மதப்பட்டு விட்டாலும் விடலாம்' என்றும் சில சமயங்களில் நினைத்தான்.

"அப்பாவிடம் பூவராகன் ஜாதகம் வந்திருக்கிற தாமேடா?" என்று ஸரோஜா பட்டண்ணுவைக் கேட்டாள்.

"ஏதோ பேச்சு நடந்துகொண் டிருக்கட்டுமே!" என்முன்" பட்டண்ணு.

"பேச்சு நடந்துகொண் டிருக்கட்டும். எனக்கு அதில் ஆக்ஷேபம் இல்லை. ஜாதகம் நன்ருயிருக்கிறது என்று அப்பா எண்ணி முடிவுசெய்ய ஆரம்பித்தால் அப்போது நான் தானே பொல்லாப்புக்கு ஆள்? இன்னும் இரண்டு மாதங்களுக்குள் நமக்கு என்னடா நல்ல காலம்வந்துவிடப் போகிறது?"

"சொன்னதையே சொல்லிக்கொண் டிராதேடி! போகப் போகப் பார்த்துக்கொள்ளலாம். ஏதாவது ஒரு வழி ஏற்படுமடி. வெறுமனே அதையே நினைத்துக் கொண்டு இராதே! போய் உன் வேலையைப் பார்" என்முன் பட்டண்ணு.

உலகத்தில் எப்பேர்ப்பட்ட பரம ரகசியங்களெல் லாம் யார் காதுக்கு எட்டக்கூடாதோ அவர்களுக்கு எப்படியோ எட்டிவிடுகின்றன. இந்தச் சிறுவர்கள் ரகசியம் எத்தனை காலம் மறைவிடமாய் இருக்கும்? தகப்பனுருக்குத் தெரிந்துவிட்டது. ஆனல், அது எட்டிய விதம்வேறு; அதன்முடிவும் வேருய் நிகழ்ந்தது.

பூவராகனுக்கு நியாய அளவுக்கு மிஞ்சி கவர்மெண்டில் 'இன்கம் டாக்ஸ்' விதித்துவிட்டார்கள். அதற்கு ஆக்ஷேபணை செய்து அப்பீல்நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று அவனுடைய வக்கீல் (கண்ணன் தகப்பனார்) கோவிந்தராஜனிடம் வந்தான். அதுவிஷயமாக அவனுடைய கணக்குகளை எல்லாம் அவன் வக்கீல் வீட்டுக்குக் கொண்டுவர வேண்டியிருந்தது. தகப்பனாருடன் கண்ணனும் தொழில் நடத்திவந்தபடியால் அந்தக் கணக்குகளை அவன் பரிசீலனை செய்துகொண்டிருந்தான். பூவராகனுக்கு வர வேண்டிய கடன்கள், அவைகளுக்கு வசூலான வட்டித் தொகைகள் இவைகளைக் கவனித்து வரும்போது பட்டண்ணாவினுடைய ஆயிரத்து முந்நூறு ரூபாய் புரோநோட்டு கண்ணன் தகவலுக்குவந்தது. அவனுக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. ஆனால் அதைப்பற்றி அவன் அந்தச் சமயத்தில் ஒரு பிரஸ்தாபமும் செய்யவில்லை. பத்துக்கணக்குகளோடு பதினொராவது கணக்குப்போலவே அதை அவன் தள்ளிக்கொண்டு போய்விட்டான்.

கணக்குகளை வக்கீல் வீட்டிலேயே வைத்துவிட்டு பூவராகன் வீட்டுக்குப் போயிருந்த சமயத்தில் கண்ணன் அந்தக் கணக்குகளைப் புரட்டி முன்னும் பின்னும் ஆராய்ந்ததில் பட்டண்ணா மொத்தம் அறுநூறு ரூபாய்தான் வாங்கி இருக்கிறதாகவும், ஏதோ கோல்மால், புள்ளிவிவரங்களால் பூவராகன் அதை ஆயிரத்து முந்நூற்றுக்கு ஏற்றி அவனிடம் புரோநோட்டு எழுதி வாங்கியிருக்கிறதாகவும் கண்ணனுக்கு நன்றாய் விளங்கியது. அதற்கு வேண்டிய விவரங்களையும் அவன் தனிமையில் குறித்து வைத்துக் கொண்டான்.

இந்த விஷயமே கண்ணன் மனசில் வேலை செய்து கொண்டிருந்தது. புரோநோட்டு தேதி சுமார் இரண்டு வருஷங்களுக்குமுன் இருந்தது. சாரங்க பாணி ஐயங்கார் மாம்பலம் வருவதற்கு முன் இந்தப் புரோநோட்டு ஏற்பட்டிருக்கிறது. தகப்பனுருக்குத் தெரியாமல் பட்டண்ணு இவனிடத்தில் கடன் வாங்கி வந்திருக்கிறுன். அவருக்குத் தெரிந்திருந்தால் இது வரையில் இந்தக் கடன் அடைபடாமல்கூட இருக் குமா? வெகு சிநேகிதன் போல் நடித்துக்கொண்டு இந்தப் பையனை அவன் என்ன மோசங்கள் செய்து விட்டிருக்கிறுன்! ஸரோஜாவும் அப்பொழுது பட்டண்ணுவுடன் கூட இருந்தாளே; அவளுக்கும் தெரியாமல் எவ்வளவு ரகசியமாய்ப் பட்டண்ணு வேலைசெய்திருக்கிறுன்! ஹா ஹா! பூவராகன் என்ன அயோக்கியன்! என்றெல்லாம் நினைத்தான். ஆனுலும் பட்டண்ணு வீட்டு விஷயத்தில் நாம் எதற்குத் தலையிடுவது என்று இருந்துவிட்டான்.

பூவராகன் ஸரோஜா இருவர் ஜாதகங்களும் ரொம்பவும் ஒத்திருக்கிறதாகச் சாரங்கபாணி ஐயங்கார் சொன்னுர். "கண்ணன் தான் இல்லை என்று ஏற்பட்டு விட்டதே. அவன் கிடைத்தால் வெகு உத்தமமாய் இருக்கும். இதுவும் நல்ல இடந்தான். இதையே முடிவு செய்துவிடலாம் என்றுநினைக்கிறேன்" என்று சாரங்க பாணி ஐயங்கார் தங்கம்மாளிடம் பேசிக்கொண்டிருந் தார். பட்டண்ணுவுக்கு ஒரு புறம் 'கபீர்' என்றது. அவ்வளவு தூரத்துக்கு வந்துவிட்டால் ஸரோஜா கட்டாயம் ரகசியத்தை வெடித்துவிடுவாள் என்று பயந்தான். ஸரோஜா மனமும் கலங்கியது. ஆனுல், ரகசியத்தை வெடித்துவிடும் எண்ணம் அவளுக்குச்

சற்றும் இல்லை. பட்டண்ணுவுக்குக் கொடுத்த வாக்குக் கொடுத்ததுதான் என்கிற வைராக்கியத்தை அவள் தளரவிடவில்லை. பட்டண்ணுவுக்கும் அதைத் தெரியப்படுத்தினாள்.

ஆனால் தாயாரிடம் போய், "அம்மா! எதற்காக வீண் பிரஸ்தாபப்படுத்திக்கொண்டிருக்கிறீர்கள்? நான் கல்யாணம் பண்ணிக்கொள்ளப்போவதில்லை. பூவராகனும் வேண்டாம்; வேறு யாரும் வேண்டாம். யார் எந்த விதமாகச் சொன்னாலும் கேட்கமாட்டேன். அப்புறம் என்னை நிஷ்டூரப்படுத்தாதீர்கள்" என்று சொல்லிக் கண்ணீர் விட்டு அழுதாள்.

இது விஷயம் தெரிந்த சாரங்கபாணி ஐயங்காருடைய தங்கை சிங்காரம் என்பவள், "ஏண்டி குழந்தையை வீணுக்குத் தொந்தரவு செய்கிறீர்கள்? கண்ணனைத் தவிர வேறு யாரையும் அவள் பண்ணிக் கொள்ள மாட்டாள். எனக்கு அது நன்றாய்த் தெரியும். வேறு எந்த இந்திரன் சந்திரன் வந்தாலும் அவளிடம் சாயாது" என்றாள்.

இந்தப் பிரஸ்தாபங்களெல்லாம் கண்ணன் காதுக்கு எட்டியது. கண்ணன் வீட்டிலும் இதைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள். கண்ணன் மனம் பொங்கியது. ஸரோஜாவைத்தான் பண்ணிக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டுக்கொண்டிருந்தது ஒரு புறம் இருக்க, அந்த அயோக்கியனுக்கு அவளைக் கொடுக்க ஏற்பாடு செய்கிறார்கள் என்று அறிந்து ஆத்திரத்தை அடைந்தான்.

"பூவராகனுக்குக் கொடுக்கப் போகிறார்களாமே, அப்பா. எனக்கு அதை நினைத்தால்தான், 'ஐயோ பாவம்!' என்று இருக்கிறது. அந்த வீட்டாரிடத்தி

லேயே அவன் என்ன அயோக்கியத்தனம் பண்ணியிருக்கிருன் தெரியுமா, அப்பா?" என்று பூவராகன் செய்தவைகளை எல்லாம் தகப்பனரிடம் கண்ணன் சொன்னன். அறுநூறு ரூபாயைத் தினவட்டி, வட்டிக்கு வட்டி போட்டு, எப்படி ஆயிரத்து முந்நூருக்கியிருக்கிருன் என்கிற தகவல்களையும் புள்ளி விவரத்துடன் சொன்னன். "சாரங்கபாணிக்கு வேண்டியதுதான்" என்ருர் கண்ணன் தகப்பனர்.

சாரங்கபாணி ஐயங்கார் கோவிந்தராஜனிடம் போயிருந்தார். "ஏண்டா கோவிந்தராஜா! கண்ணனைப் பற்றித்தான் நீ சொல்லிவிட்டாய். இனி அதைப்பற்றி உன்னைக் கேட்டுப் பிரயோஜனமில்லை. ஸரோஜாவுக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணவேண்டுமடா. பூவராகனுக்குக் கொடுக்கலாம் என்று யோசனை செய்கிறேன். ஜாதகம் ஒத்திருக்கிறது. உன்னைக் கேட்காமல் செய்யலாமா? உன் யோசனையையும் கேட்கலாம் என்று வந்தேனடா. உன் அபிப்பிராயம் என்ன?" என்ருர் சாரங்கபாணி ஐயங்கார்.

"பேஷாய்க் கொடுக்கலாம். பெண் உன்னுடைய வளாச்சு. பண்ணிக் கொள்ளுகிறவன் அவன் இருக்கிருன், நடுவில் நான் என்ன சொல்வதற்குஇருக்கிறது? முன்னுடி அவனுக்குக் கொடுக்கவேண்டிய ஆயிரத்து முந்நூறு ரூபாய் கடனைக் கொடுத்தாச்சா? அதை முன்னுடி பைசல் செய்துவிடடா! உன்னிடத்தில் பணம் இல்லையா? எதுக்காக அந்தக் கடனை அப்படியே வைத்துக்கொண்டிருக்கிருய்?" என்ருர் கோவிந்தராஜன்.

சாரங்கபாணி ஐயங்காருக்குத் தூக்கிவாரிப் போட்டது. "என்னடா உளறுகிருய்? நானவது,

பணம் கொடுக்க வேண்டியதாவது!" என்று ஆத்திரமாய்க் கத்தினார்.

"உன் கடனானால் என்ன, உன் பிள்ளை கடனானல் என்னடா?" என்று எல்லா விவரங்களையும் சாங்கோ பாங்கமாகக் கோவிந்தராஜன், ஐயங்காருக்கு எடுத்துச் சொன்னார். சாரங்கபாணி ஐயங்காருக்கு ஆவேசம் பலமாகக் கிளம்பியது. "அந்தப் பசங்களை முன்னாடி வீட்டை விட்டுத் துரத்திவிட்டு மறுகாரியம் பார்க்கிறேன். அயோக்கியப் பசங்கள்! அவர்களுக்கு எவ்வளவு பணம் அனுப்பியிருக்கிறேனடா! அதை எல்லாம் தீந்தார் பண்ணிவிட்டு, கடன் வேறுடா பண்ணி வைத்திருக்கிறார்கள்? அதுவும் கொஞ்சமா, நஞ்சமா! ஆயிரத்து முந்நூறு ரூபாய்! இந்த அநியாயம் எங்கேடா அடுக்கும்? அவர்கள் ஒருத்தொருத் தரை நறுக்கிப் பிழிய வேண்டுமடா" என்று ஆத்திரத்தோடு எரிந்து விழுந்தார்.

"போடா பிருஹஸ்பதி! குழந்தைகளை வளர்க்கத் தெரியாமல் வளர்த்துவிட்டு எகிறிக் குதிக்கிறான்! உலகமே தெரியாத உனக்கு எவனடா ஸப்ஜட்ஜ்வேலை கொடுத்தான்? மாம்பலத்தில் குழந்தைகளை வைத்து விட்டு மாதம் ஒன்றேகாலணா அனுப்பித்துவிட்டால், இங்கே குடித்தனம் நடந்துவிடுமாடா?...."

"ஒன்றே காலணாவாடா அனுப்பிவைத்தேன்?"

"ஒன்றே காலணா இல்லாவிட்டால் ஒன்றரையணா அனுப்பினாயோ! உன் தாராளம் எனக்குத் தெரியாதா? பணக்காரனாகவும் அந்தஸ்திலும் இருந்தால், அதற்குத் தகுந்தபடிதானேடா அவன் பசங்கள் மனப்போக்கும் இருக்கும்? உன்னைப்போல் காலையில் பழையது சாப் பிட்டுவிட்டு வருஷத்துக்கு ஒரு சொக்காயைப் போட்

டுக்கொண்டு பசங்கள் காலந்தள்ளுங்களோ? குழந்தைகள் என்றால் அது வேண்டும் இது வேண்டும் என்று எவ்வளவோ ஆசைப்படுங்கள். நீ என்ன, இல்லாதவனா? நீயே நடுவில் நடுவில் இங்கு வந்து அவர்கள் மனம் அறிந்து அதிக ஆசை கொள்ளவொட்டாமல் கொஞ்சத்துக்குக் கொஞ்சம் வாங்கிக் கொடுத்து அவர்களை உற்சாகப்படுத்தி இருந்தாயானால் எதையும் அப்பாவைக் கேட்டால் வாங்கிக்கொடுப்பார் என்று அவர்களுக்குத் தோன்றும். நீ விவேகமாக நடந்துகொண்டால் அப்பா சம்மதப்படாத ஆசையும் அதிகமாக அவர்களுக்கு உதிக்காது. பிள்ளைகளைப் பெற்றுவிட்டால் ஆகிவிட்டதா? உன்னைப் போலிருக்கிறவன் பிள்ளைகளெல்லாம் இந்தக் கதிதான். ஊரைச் சுற்றிக் கடன்தான் வாங்குவார்கள். அப்படி என்ன கடன் பட்டுவிட்டானடா? இரண்டு வருஷங்களில் அறுநூறு ரூபாய் வாங்கியிருக்கிறான் மாதம் இருபத்தைந்து ரூபாய் ஆகவில்லை. அது ஒரு அதிகமா? அந்தத் தொகையை நீ மாதம் கூட அனுப்பியிருந்தால் இம்மாதிரி ஏற்பட்டிருக்குமா?" என்று கோவிந்தராஜன் சாரங்கபாணியைப் பல விதமாக இறக்கினார்.

தான் நடந்துகொண்டது தவறு என்று சாரங்கபாணி ஐயங்காருக்கு நன்றாய்ப்பட்டுவிட்டது. குழந்தைகள் நம்மிடத்தில் எதையும் வந்து சொல்லவும் கேட்கவும் சுவாதீனமுள்ளவர்களாகச் செய்வது பெற்றோர்கள் நடந்துகொள்ளுவதில்தான் இருக்கிறது. இல்லாதவன் விஷயம் வேறு. பணம் இருக்கிறவன், தான் இருக்கும்பொழுது குழந்தைகளின் நியாய ஆசைகளைத் திருப்தி செய்துவைத்து, அவர்கள் உற்சாகத்தைக் கண்குளிரப் பார்த்துச் சந்தோஷமடையக்

கூடாதா? யாருக்காகப் பணத்தைச் சேர்க்கிறோம்? என்று புது யோசனைகளெல்லாம் ஐயங்காருக்கு உதித்தன.

"பூவராகனைக் கூப்பிட்டு இந்தக் கடனை உடனே பைசல் செய்துவிடு, கோவிந்தராஜா! இதோ வீட்டுக்குப் போய்ப் பணத்தைக் கொண்டு வந்துவிடுகிறேன்" என்றார் ஐயங்கார்.

"பணம் நான் இப்போது கொடுக்கிறேன். அதற்கு நீ வீட்டுக்குப் போவானேன்? அப்புறம் அனுப்பி விடு" என்று கோவிந்தராஜன் சொல்லி, குமாஸ்தாவை விட்டு, பூவராகனைத் தருவித்தார். அவனோடு நயமாகவும் பயமுறுத்தியும் பேசி எழுநூறு ரூபாய்க்குக் கடனைப் பைசல் செய்து புரோநோட்டில் செல்லெழுதி வாங்கிக்கொண்டார்கள்.

சாரங்கபாணி வீட்டுக்கு வந்தார். பட்டண்ணு நடு ஹாலில் நின்றுகொண்டிருந்தான்.

"இந்தாடா முட்டாளே! முன்னாடியே என்னிடத்தில் சொல்லி இருக்கக்கூடாது? கிடக்கிறது, போ" என்று புரோநோட்டை அவன் கையில் கொடுத்தார். அதற்குமேல் அவர் ஒரு பேச்சும் பேசவில்லை. முகத்திலும் ஒருவிதமான ஆயாசக் குறியும் தென்படவில்லை.

சில தினங்களுக்கப்புறம், "கண்ணனைப் பண்ணிக் கொள்ளுகிறாளா என்று ஸரோஜாவைக் கேள்" என்றார் சாரங்கபாணி ஐயங்கார், மனைவி தங்கத்தினிடத்தில்.

"பண்ணிக்கொள்ளுகிறாளாம்" என்றாள் தங்கம்.

முற்றும்